# பேசாத பேச்சு

கி. வா. ஜகந்நாதன்

பேசுகிற பேச்சைவிடப் பேசாத பேச்சில் சுவை உண்டு; நயம் உண்டு; ஆற்றல் உண்டு; அதிகமான பயனும் உண்டு.

அமுத நிலையம்

# பேசாத பேச்சு

★

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை - 18

அமுதம்–16
முதற் பதிப்பு–மே. 1951
இரண்டாம் பதிப்பு–பிப்ரவரி, 1955
உரிமை பதிவு

விலை ரூ. 1—8—0

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனும்பேட்டை, சென்னை-18.

# முகவுரை

இலக்கிய சம்பந்தமான கட்டுரைகள் எழுத வேண்டும்; அவற்றைத் தொடர்ச்சியாக எழுத வேண்டும். தொடர்ச்சி இருந்தாலும் எந்தக் கட்டுரையையும் தனியே படித்தால் அந்த அளவில் அது விளங்கவேண்டும்' என்ற யோசனை ஒருநாள் தோன்றியது. அப்படி எதைப்பற்றி எழுதுவது? சிறிது மூளையைக் குடைந்துகொண்டேன். கடைசியில் "பேசாத பேச்சு" என்று தலைப்பிட்டு எழுதிவிட்டேன். முதலில் இரண்டு பிரிவுகள்—சும்மா இருக்கிற சாமியார், சொல்லாமல் சொன்ன துரை என்ற இரண்டும் 'கலைமக'ளில் வெளிவந்தன. தொடர்ந்து பேசாத பேச்சை நிர்வகிக்க வேண்டுமே! சோம்பேறித்தனம் என்னை ஆட்கொண்டிருந்தால் பேசாத பேச்சு அந்த இரண்டோடு நின்றுபோயிருக்கும். ஆனால் சிந்தனை கிளர்ந்து எழுந்தது. ஏதோ அற்புதமான வாசல் ஒன்று திறந்து பல பல காட்சிகளைக் காண்பது போல இருந்தது. இலக்கண இலக்கியங்களில் பேசாத பேச்சின் கோலங்களையெல்லாம் நினைத்துப் பார்த்தேன்; நூல்களை இந்த நோக்கத்தோடு படித்துப் பார்த்தேன். நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை

எழுதிக் குவித்து விடலாம் என்று தைரியம் உண்டாயிற்று. தொல்காப்பிய இலக்கணமும் திருக்குறளும் கம்பராமாயணமும் வில்லிபாரதமும் பேசாத பேச்சுக்குரிய காட்சிகளை உதவின. பெருங்கதையில் பேசாத பேச்சைக் கண்டேன்; தனிப்பாடல் திரட்டில் பார்த்தேன்; விக்கிரமாதித்தன் கதைகூட எனக்குத் துணையாக வந்தது. கம்பராமாயணத்தில் அதிக நேரம் நின்று நிலைத்து ஊன்றி உணர்ந்து முனிவரையும் அரக்கரையும் தம்பியரையும் பார்த்தேன்; என்ன ஆச்சரியம்! எல்லோரும் பேசாமல் பேசினார்கள்.

இதோடு நிற்கவில்லை. கொஞ்சம் கலை உலகத்திலும் புகுந்து பார்த்தேன். ரஸம், அபிநயம், முத்திரை என்று நடனக்கலையில் உள்ள பகுதிகளையெல்லாம் ஒரு மூலையிலிருந்து சிறிது பார்த்தேன். அடேயப்பா! இந்த உலகம் முழுவதுமே பேசாத பேச்சிலேதான் நடக்கிறது. அதை விரிவாகக் காட்ட எனக்கு ஆற்றல் எங்கே? நேரம் எங்கே? எழுதினால்தான் அன்பர்கள் கடைசி வரையில் பொறுமையாகப் படிப்பார்களா? ஆகவே, 'ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்'என்ற பழமொழியை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு கட்டுரை எழுதினேன்.

இந்தக் கட்டுரைகள் வெளியாகிக்கொண்டிருந்த போது என்னுடைய நண்பர் ஒருவர் இலங்கையிலிருந்து பாராட்டி எழுதினார். "நல்ல தலைப்பை எடுத்துக் கொண்டீர்கள். இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் எழுதிக்கொண்டே போகலாமே!"

என்று எழுதியிருந்தார். அவர் சலிப்பினாலே அப்படி எழுதவில்லை. இந்தத் தலைவாசல் எவ்வளவு விரிந்த பூமிக்கெல்லாம் நம்மை இழுத்துச் செல்லும் என்பதை எண்ணி வியந்துதான் அப்படி எழுதினார். நல்ல கட்டுரையாக இருந்தால் சிந்தனையைக் கிளரச் செய்ய வேண்டுமென்று சொல்வார்கள். இந்தக் கட்டுரைகளைக் கண்ட அன்பர் சிந்தனை கிளர்ந்த தோடு, மேலே மேலே பல பல எழுதலாம் என்ற கற்பனையும் முளைத்தது. இது கட்டுரையின் வெற்றி யல்லவா ?

இன்னும் எத்தனையோ எழுதலாம். நான் காட்டியிருக்கும் நூல்களில் வரும் பேசாத பேச்சுக் காட்சிகளையெல்லாம் எடுத்துக் காட்டவில்லை. ஆனால், இதில் உள்ள கட்டுரைகளைப் படிக்கிறவர்கள், "இன்னும் இவையெல்லாம் பேசாத பேச்சுத்தானே ? எழுதலாமே ?" என்று நிச்சயமாக நினைப்பார்கள். எழுதாத அந்தக் கட்டுரைகள் அவர்கள் உள்ளத்தில் தோன்றும்படி செய்வதே இந்தப் புத்தகம் எழுதியதன் பயன் என்று கருதுகிறேன்.

பேசுகிற பேச்சுக்கு முடிவுண்டு. பேசாத பேச்சுக்கு முடிவு ஏது? உலகம் தோன்றுவதற்கு முன்பே பேசாத பேச்சு எழுந்தது; உலகம் அழிந் தாலும் பேசாத பேச்சு அழியாமல் நிற்கும். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். 'கண் பேசுகி றது; முகம் பேசுகிறது; கை பேசுகிறது; மலர் பேசுகி றது; உலகமேதான் பேசாத பேச்சைப் பேசுகிறது' என்று நினைத்தேன். 'உலகம் பேசுகிறது' என்ற

கட்டுரையோடு இந்தப் புத்தகத்தை நிறைவேற்றி னேன்.

இதில் இலக்கணம் இருக்கிறது, காவியம் இருக் கிறது, கதை இருக்கிறது, கலை இருக்கிறது என்று சொல்லமாட்டேன். அவற்றையெல்லாம் நினைப்ப தற்குரிய குறிப்புகள் இதில் உண்டு என்பதை மாத்திரம் தைரியத்தோடு சொல்வேன். அப்படிச் சொல்லலாமா, கூடாதா என்பதைப் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்.

சென்னை
10—5—51

**கி. வா. ஜகந்நாதன்**

## பொருள் அடக்கம்


| எண் | பெயர் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சும்மா இருக்கிற சாமியார் | .... | 1 |
| 2. | சொல்லாமற் சொன்ன துரை | .... | 8 |
| 3. | கண்ணும் பேசும் | .... | 12 |
| 4. | முகமும் கண்ணும் | .... | 22 |
| 5. | ராமாயணத்தில் | .... | 33 |
| 6. | கண்ணன் செய்த தந்திரம் | .... | 42 |
| 7. | அழிந்த கண் | .... | 54 |
| 8. | இரண்டு பொருள் | .... | 63 |
| 9. | இங்கித அழைப்பு | .... | 72 |
| 10. | கோபத்தின் கோலம் | .... | 80 |
| 11. | அரக்கர் கோபம் | .... | 93 |
| 12. | தம்பியர் கோபம் | .... | 101 |
| 13. | கண்ணீரின் பொருள் | .... | 110 |
| 14. | அபிநயங்கள் | .... | 116 |
| 15. | முத்திரைகள் | .... | 123 |
| 16. | உலகம் பேசுகிறது | .... | 130 |

# பேசாத பேச்சு

## சும்மா இருக்கிற சாமியார்

“ **வாய்** உள்ள பிள்ளை பிழைக்கும்” என்ற பழமொழியைக் கண்டு ஏமாந்து போகிறவர்கள் பலர். பேசப் பழகிக் கொண்டால் காரியத்தைச் சாதித்து விடலாம் என்று நாம் நினைக்கிறோம். பேசியும் பார்க்கிறோம். ஆனால் உண்மையிலே நன்றாகப் பேசத்தான் வருகிறதா ? கேட்பவர்களெல்லாம் விரும்பும்படியாகப் பேசுவதென்பது தனி. எல்லோருக்கும் அந்தப் பாக்கியம் கிடைப்பதில்லை. “ வார்த்தை பதினாயிரத்தொருவர்” என்று சொல்கிறார்கள். பதினாயிரம் பேருக்கு ஒருவரோ நன்றாகப் பேசத் தெரிந்தவர்கள் உலகத்தில் இருக்கக்கூடுமாம். மற்றவர்கள் எல்லாம் பேசத் தெரிந்தும் தெரியாதவர்கள் என்றுதானே கொள்ளவேண்டும் ?

பேசுவதைப்பற்றி அப்புறம் பேசிக் கொள்வோம். பேசாமல் இருப்பதைப்பற்றிக் கவனிக்கலாம். பெரியவர்கள் என்ன சொல்கிறார்கள்? பேசுவதைக் காட்டிலும் பேசாமல் இருக்கிறது பிரம்மப் பிரயத்தனமாம் ! இதென்ன வேடிக்கையாய் இருக்கிறதே ! நன்றாகப் பேச வேண்டுமென்ற ஆசை உடையவர்களுக்குத்தான் பாஷையில் பயிற்சி வேண்டும் ; உபமானங்கள் சொல்லத் தெரிய வேண்டும் ; பழமொழிகளை நடுநடுவே சொல்ல வேண்டும் ; பேரறிஞர்

களுடைய நூல்களிலிருந்து மேற்கோள் சொல்லத் தெரிய வேண்டும் ; உசிதமாகப் பேச, அளவாகப் பேச, ஹாஸ்யச் சுவை கலந்து பேசத் தெரிந்து கொள்ளவேண்டும் ; இப்படி எத்தனையோ இலக்கணங்களை வகுத்திருக்கிறார்கள். நாலு பேருடன் சம்பாஷணை செய்வதற்குத் தனியாற்றல் வேண்டும்; சபையில் நின்று பேசுவதற்குக் 'கட்டுரை வன்மை' இருக்கவேண்டும் என்று சொல்லி அவற்றைத் தனிக் கலைகளாகப் போற்றிப் பாராட்டுகிறார்கள்.

இந்தச் சங்கடங்களே வேண்டாமென்று வாயை மூடிக்கொண்டிருக்கலாமே என்றால், அப்படி இருப்பது முடியவே முடியாது என்றல்லவா பெரியவர்கள் சொல்கிறார்கள்? கடவுள் ஊமைகளுக்கு வாயைக் கொடுத்தாலும் பேசும் சக்தியைக் கொடுக்கவில்லை. ஆகையால் ஊமைகள் பேசாமல் ஜாடைகளாலே தங்கள் காரியங்களை நடத்திக் கொள்ளலாம். அவர்கள் அப்படிச் செய்வதில்லை. அவர்களும் பேசுகிறார்கள். ஆம் ; அந்தப் பேச்சு நமக்குப் புரிவதில்லையே யொழிய அவர்கள் என்னவோ பேசத்தான் பேசுகிறார்கள். கரா புரா என்று சத்தம் போடுகிறார்களே, அதுதான் அவர்கள் பேச்சு. கம்பர்கூட இதைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்.

**மூங்கையான் பேச லுற்றான்**
**என்னையான் மொழிய லுற்றேன்**

என்று சொல்கிறார். "வால்மீகி முனிவரும் கோசல நாட்டை வருணித்திருக்கிறார். அதே நாட்டை நானும் வருணிக்கப் போகிறேன். எல்லோரும் உதட்டை அசைத்து நாக்கைச் சுருட்டி என்னவோ செய்கிறார்களே என்று கவனித்த ஊமை இயல்பாகவே கரா புரா என்று கத்துவான். அதோடு அவன் கள்ளை வேறு குடித்து

விட்டால் அந்தச் சத்தம் ஊரறியப் பரவும். அவனுக்கு அது பேச்சு; மற்றவர்களுக்கு அது கூச்சல். அப்படித் தான் நானும் வருணிக்கத் தொடங்குகிறேன்" என்று பொருள் படும்படி அவர் அவையடக்கம் சொல்கிறார்.

**வாங்கரும் பாதம் நான்கும்**
**வகுத்தவான் மீகி என்பான்**
**தீங்கவி செவிகள் ஆரத்**
**தேவரும் பருகச் செய்தான்;**
**ஆங்கவன் புகழ்ந்த நாட்டை**
**அன்பெனும் நறவம் மாந்தி**
**மூங்கையான் பேசல் உற்றான்**
**என்னயான் மொழியல் உற்றேன்.**

ஊமைக்குக் கூடப் பேச வேண்டும் என்ற ஆசையும் முயற்சியும் இருக்கின்றன. வாயுள்ளவர்கள் பேசாமல் அரை நாழிகை சும்மா இருப்பார்களா? அது முடியவே முடியாது.

ஒரு கோவிலில் புதிய தர்மகர்த்தா ஒருவர் வந்து சேர்ந்தார். 'பழம் பெருச்சாளிக'ளைப் போக்கி விட்டு ஆற்றலுள்ள புதிய ஊழியர்களை நியமிக்கவேண்டும் என்ற தீவிர எண்ணத்தோடு அவர் வேலையை ஒப்புக்கொண்டார். பழைய கணக்குகளை வருவித்துப் பார்த்தார். கோவிலில் நிவேதனமாகும் பிரசாதங்களை எப்படி எப்படி விநியோகம் செய்கிறார்களென்பதை அறிய, அதற்குரிய கணக்குப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தார். கண்ணை ஓட்டி வருகையில், ஒரு வரியிலே அவர் பார்வை நின்றுவிட்டது. "இதென்ன அக்கிரமம்?" என்று அவர் வாய் முணு முணுத்தது. "சும்மா இருக்கிற சாமியாருக்கு ஒரு பட்டை" என்று அங்கே இருந்தது. 'வேலை செய்கிறவர்

களுக்குக் கொடுப்பதுதான் நியாயம். சும்மா இருக்கிற சோம்பேறிகளுக்குக் கொடுப்பது பைத்தியக்காரத்தனம்!' என்று எண்ணி, அதை ஆத்திரத்தோடு அடித்தார். "சும்மா இருக்கிற சாமியாருக்குச் சோறு இல்லை" என்று சொல்லிவிட்டார்.

புதிய தர்மகர்த்தாவிடம் பழைய வழக்கத்தை வற்புறுத்தும் தைரியம் ஒருவருக்கும் வரவில்லை. "சாமியார் மிகவும் பெரிய மகான். மௌனமாக இருக்கிறார். அவருக்குப் பிரசாதம் அளிக்காவிட்டால் பாவம்!" என்று எல்லோரும் கிசுகிசுவென்று பேசிக் கொண்டார்களே ஒழியத் தர்மகர்த்தாவை அணுகிச் சொல்லவில்லை. கடைசியில் யாரோ பேர் இல்லாமல் மொட்டைச் சீட்டு ஒன்றில், "சும்மா இருப்பது என்பது நீங்கள் நினைப்பது போல இழிவான காரியம் அல்ல. நீங்கள் ஒரு நாள் சும்மா இருந்து பாருங்கள். அப்போது அதன் அருமை தெரியும்" என்று எழுதித் தர்மகர்த்தா கையில் கிடைக்கும்படி செய்தார்.

அதைப் பார்த்த தர்மகர்த்தாவுக்கு முதலில் கோபம் வந்தாலும், உண்மையாகவே சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற நோக்கமுடையவராகையால் கோபத்தை விலக்கி யோசித்துப் பார்த்தார். 'அப்படியா சங்கதி! சும்மா இருக்கிறது அவ்வளவு பெரிய காரியமா? எங்கே, நான் பார்க்கிறேன்' என்று எண்ணி மறுநாள் சும்மா இருக்கும் விரதத்தை மேற்கொண்டார்.

பேசாமல் வீட்டில் உட்கார்ந்து கொண்டார். யாரோ வராத நண்பர் வந்தார். அவரை அறியாமலே, "வாருங்கள்" என்று கூற வாய் முந்தியது. அடக்கிக் கொண்டார். எப்படியோ சைகை செய்து அவரை

அனுப்பிவிட்டார். அவர் மனைவி எப்போதும் போல் அடிக்கொரு முறை என்ன என்னவோ பேச வந்தாள். அவருக்குக் கோபம் கோபமாக வந்தது. பேசவோ வழி இல்லை. குழந்தைகள் அன்றைக்கென்று அதிக விஷமம் செய்தன. ஒரு குழந்தை அவருடைய விபூதிப் பையை அவிழ்த்து விபூதியை வாரி இறைத்தது. கோபத்தோடு பளார் என்று அதன் முதுகில் ஓர் அறை அறைந்தார். அது வீல் என்று கத்திக்கொண்டு ஓடியது. "ஐயோ பாவம்!" என்று அவர் மனம் இரங்கியது. குழந்தைக்கு நல்ல வார்த்தை சொல்லிச் சமாதானம் செய்யவேண்டும் என்ற ஆவல் பொங்கிவந்தது. அவர்தாம் பேசக்கூடாதே!

இப்படி ஒன்றன்மேல் ஒன்றாக அவர் வாயைக் கிண்டச் சந்தர்ப்பங்கள் வந்தன. உலகம் முழுவதும் கட்சி கட்டிக்கொண்டு, "நீ பேசித்தான் ஆகவேண்டும்" என்று வற்புறுத்துவதுபோல அவருக்குத் தோன்றிற்று. காலை இரண்டு மணி நேரம் பேசாமல் இருப்பதற்குள் அவர் பொறுமையை இழந்தார். கடைசியில் பேசியே விட்டார். அவர் மைத்துனன், வீட்டுக்கு எதிரே நின்ற கழுதையின் மேல் ஒரு பெரிய கல்லை வீசி எறிந்தான். அந்த வாயில்லாப் பிராணிக்குக் காயம் உண்டாகி ரத்தம் ஒழுகியது. தர்ம கர்த்தாவின் ஜீவகாருண்யம் அதைக் கண்டு கொந்தளித்தது. "அட பாவி!" என்று வாய்விட்டுச் சொல்லிவிட்டார். அவர் மௌன விரதம் குலைந்தது.

அவ்வளவு நேரம் அடக்கிவைத்திருந்த வாக்கை ஒரு கழுதை வந்து வெளிப்படுத்திவிட்டது. அப்பொழுது தான் அவர் உண்மையை அறிந்தார். நேரே தேவஸ்தானக் காரியாலயத்துக்குப் போனார். "சும்மா இருக்கிற சாமி யாருக்கு இரண்டு பட்டைச் *சாதம்" என்று திருத்தி

விட்டுக் காணிக்கைகளுடன் அந்தச் சாமியார் எங்கே என்று அவர் காலில் விழ அவரைத் தேடிக்கொண்டு புறப் பட்டு விட்டார்.

இப்படி ஒரு கதை பலருடைய காதில் விழுந்திருக்கும். பேசுவதைவிடப் பேசாமல் இருப்பதுதான் மிகவும் சிரமமானது என்பதற்கு இந்தக் கதையை உதாரணமாகச் சொல்லுவார்கள்.

அதிகமாகப் படித்தவன் அதிகமாகப் பேசுவான் என்று பொதுவாக நினைக்கிறோம். கற்பதைவிடக் கற்றதை உணர்வது அருமை, உணர்ந்ததைவிட உணர்ந்ததைச் சொல்லுவது அருமை என்று புலவர்கள் சொல்லியிருக் கிறார்கள். ஆனாலும் அதற்கு மேலே ஒரு படி உண்டு என்றும் தெரிகிறது. விரிந்து பரவின ஞானத்துக்குப் பேச்சு ஓர் அடையாளமாக இருந்தாலும், ஞானத்தின் தலையளவுக்குப் பேசாமைதான் அடையாளமாம். ஞானத் தின் எல்லை மௌனம் என்று கூறுவர்;

மோன மென்பது ஞான வரம்பு

என்று ஔவைப்பாட்டி சொல்லியிருக்கிறாள்.

பேசாமல் இருப்பது கஷ்டம் என்று சொல்லும் போது ஒரு விஷயத்தை மறக்கக்கூடாது. கல் பேசாமல் இருக்கிறது; மரம் பேசாமல் இருக்கிறது; பிராணிகள் பேசாமல் இருக்கின்றன. அவைகள் எல்லாம் ஞான வரம்பில் நிற்கின்றன என்று சொல்லலாமா? பேசத் தெரிந்தவன், பேசும் ஆற்றலை முற்றப்பெற்றவன், பேசாமல் இருப்பது அருமை. பேசத் தெரிந்தவன் பேசப் பழகியதோடு, பேசாமல் இருக்கவும் பழகவேண்டும். பேசும் ஆற்றல் ஒரு கலையானால், பேசும் ஆற்றல் படைத் தவன் பேசாமல் இருத்தல் அதைவிடப் பெரிய கலை.

பேச்சினால் அவன் சிறந்த கல்வியுடையவன் என்று மக்கள் அறியலாம்; ஆனால் பேசாமையால், அவன் ஞானத்தின் தலைநிலத்தில் இருப்பவன் என்பதைப் பெரியோர் உணர்வர். 'சும்மா இருத்தல் சுகம்' என்று சொல்லும் மா ஞானியரெல்லாம் பேசாமலே பேசுபவர்கள்; தங்கள் தோற்றத்தினாலும் தவத்தினாலும் உணர்வுடையாருக்குப் பல அரிய உபதேசப் பொருள்கள் விளங்கும்படி செய்யக் கூடியவர்கள்.

# சொல்லாமற் சொன்ன துரை

**பே**சப் படித்த பெரியோர்கள் பேசாமல் இருக்கவும் படிக்கிறார்கள் என்பது முரண்பாடாகத் தோற்றுகிறது. பேசாத மோனத்திலே அவர்கள் படிக்காத படிப்பெல்லாம் படிக்கிறார்கள்.

பிரமபுத்திரர்களாகிய நான்கு முனிவர்கள் மெத்தப் படித்தவர்கள். சனகர், சனந்தனர், சநாதனர், சனத்குமாரர் என்ற அந்த நான்கு பேர்களும் நாலு வேதங்களையும் கரைகண்டவர்கள்; ஆறு சாஸ்திரங்களையும் முறையாகக் கற்றுக் கை வந்தவர்கள். தாங்களே ஆராய்ந்து கற்ற கல்வியோடு பல பல முனிவர்களிடம் பல அரிய செய்திகளைக் கேட்டும் தெளிந்தவர்கள். அவர்களே வேதங்களுக்கு வியாக்கியானமும் சாஸ்திரங்களுக்குப் பொருளும் வருஷக் கணக்காகச் சொல்லும் பேராற்றல் படைத்தவர்கள். பேச்சுலகத்தின் தலை எல்லையில் அவர்கள் நின்றார்கள். பேசப் படித்தவர்களின் பேச்சைக் கேட்டு இன்புற்றும், தாமே பேசியும் வாழ்ந்தவர்கள்.

அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. சாஸ்திரங்களில் அவர்கள் பாராதது ஒன்றும் இல்லை. பேசுபவர்கள் பேசும் பேச்சில் அவர்கள் அறியாதது யாதும் இல்லை. அவர்களுக்கே சந்தேகம் வந்துவிட்டால் அதை யார் எப்படித் தீர்ப்பது?

நான்கு முனிவர்களும் யோசித்தார்கள். 'நமக்கு இனிமேல் சந்தேகம் தீர்க்க யார் இருக்கிறார்கள்? கைலாசபதியாகிய பரமசிவனே நமக்கு அருள் செய்தாலன்றி

வேறு புகலில்லை' என்ற முடிவுக்கு வந்து கைலாசத்துக்குப் போனார்கள். சிவபெருமானை வணங்கிப் பேச்சிலே பெரிய நால்வரும் தங்கள் குறையை விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

இறைவன் புன்னகை பூத்தான். மலைமேல் வளரும் ஆலமரத்தில் ஒருவகை கல்லால் என்பது. சிவபிரான் அங்குள்ள கல்லால மரத்தின் நிழலை அடைந்தான். அதன் கீழே அமர்ந்துகொண்டு தன் திருக் கையால் சின்முத்திரையைக் காட்டியபடியே வீற்றிருந்தான். கலைவல்ல நான்கு முனிவரும் அப்பெருமானுடைய திருவடியின்கீழ் அமர்ந்தார்கள். தங்கள் கண்களையும் கருத்தையும் தென்முகமாக நோக்கி வீற்றிருந்த இறைவன் திருக்கரத்தில் காட்டிய ஞான முத்திரையிலே செலுத்தினார்கள். அவர்களுடைய சந்தேகம் தீர்ந்துவிட்டது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பேசினாலும் தெளிவிக்க முடியாத சந்தேகத்தைத் தக்ஷிணாமூர்த்தி மௌனமாக எழுந்தருளித் திருக்கரத்தால் மோன முத்திரை காட்டித் தெரிவித்தான்.

இது எப்படி நிகழ்ந்தது? பேச்சினாலா? இல்லை. தக்ஷிணாமூர்த்தி பேசவில்லை; ஆனாலும் உபதேசம் செய்தார்; பேசாமல் பேசினார். பேச்சு நிலையெல்லாம் கடந்த ஒன்றைப் பேச்சுக்குள்ளே அடக்குவது பேதைமையாகும். உயிரானது மும்மலங்களினின்றும் நீங்கி இறைவனோடு ஒன்றவேண்டும் என்ற குறிப்பைக் காட்டும் முத்திரையாகிய அதனைச் சின்முத்திரை என்று சொல்வார்கள். சித் என்பது ஞானம். ஆதலின் அதனை ஞான முத்திரை என்றும் சொல்வர். எல்லாம் அடங்கி முழு மோனத்தில்

இருக்கும் நிலைக்கு அறிகுறி ஆதலின் மோன முத்திரை என்ற பெயரும் அதற்கு உண்டு.

சின் முத்திரையின் பொருளை விளக்கும் நூல்கள் இருக்கின்றன. அவற்றைப் படித்தால் ஓரளவு அதன் பொருள் யாவருக்கும் தெரியவரும். தெரிந்துவிட்டால் நமக்கும் நான்கு முனிவர்கள் பெற்ற நிலை வந்துவிடுமென்று நினைத்துவிடவேண்டாம்.

தக்ஷிணாமூர்த்தி பேசாத பேச்சினாலே உபதேசித்ததை நாம் பேசுகின்ற புத்தகத்தின் மூலமாக அறிந்துவிட எண்ணலாமா? பேசாத பேச்சைப் பேசுபவனும் இங்கில்லை; அந்தப் பேச்சை உணர்ந்துகொள்ளும் பக்குவமும் நமக்கு இல்லை. சனகாதி முனிவருடைய பக்குவம் மிக உன்னதமானது. சின் முத்திரையைக் கண்ட மாத்திரத்திலே சொல்லாமற் சொன்ன பிரானது சக்தியும், அதைக் கேளாமல் உணர்ந்தாரது பக்குவமும் ஒன்றுபட்டு விளக்கத்தை உண்டாக்கின. மின்சாரப் பொத்தானை அமிழ்த்தினால் விசையும் விளக்கும் இணைந்து ஒளியுண்டாகின்றது. விசையைப் பற்றியும் விளக்கைப் பற்றியும் பொத்தானைப் பற்றியும் விடிய விடியப் புத்தகத்திலே படித்துப் படம் போட்டுப் பார்த்தாலும் ஒளி உண்டாக வழி உண்டா? சின்முத்திரையின் பொருளைப் பேச்சாக்கி எழுத்தாக்கிப் புத்தகமாக்கிப் படிப்பாக்கிக் கற்று, நமக்கு ஞானானந்தம் பிறக்கவில்லை என்று சொல்வதும் அத்தகைய கேலிக்கூத்தாகத்தான் முடியும்.

குருவும் பேசவில்லை; மாணாக்கர்களும் கேட்கவில்லை. ஆனாலும் பேசாத பேச்சினால் குரு உபதேசம் செய்தார். சிஷ்யர்கள் சந்தேகம் தெளிந்தார்கள். பேசாத பேச்சால் உபதேசம் செய்த பிரானை ஒருவர்,

**கல்லாலின் நீழற் கதிகாண நால்வர்க்கும்**
**சொல்லாமற் சொன்ன துரை**

என்று பாராட்டுகிறார். மற்றொருவர்,

**கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறை**
**ஆறங்கமுதற் கற்ற கேள்வி**
**வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த**
**பூரணமாய் மறைக்கப் பாலாய்**
**எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை**
**இருந்தபடி இருந்து காட்டிச்**
**சொல்லாமற் சொன்னவரை நினையாமல்**
**நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்**

என்று அழகாகப் பாடுகிறார்.

[ஆறு அங்கம்-ஆறு சாஸ்திரங்கள். மறைக்கு அப் பாலாய்–வேதத்தாலும் அறிய முடியாமல் அதற்குப் புறம்பாகி. இருந்த தன்னை. பவத் தொடக்கு-பிறப்பாகிய கட்டு.]

அறிவின் தலை நிலத்திலே எழுந்த ஐயத்தைப் பேசாத பேச்சு விடுவிக்கிறது. அந்தப் பேச்சைப் பேசத் தனி ஆற்றல் வேண்டும். அதைக் காட்டிலும் அதை உணர்ந்து கொள்ளப் பேரறிவு வேண்டும்.

# கண்ணும் பேசும்

**வா**யினாலே பேசாமல் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துவதற்குரிய வழிகள் பல இருக்கின்றன. தக்ஷிணாமூர்த்தி யோக நிலையிலே சின் முத்திரை காட்டிப் பேரின்பத்தின் தத்துவத்தைச் சனகாதி முனிவர்களுக்குச் சொன்னார். ஞான உலகில் பேசாத பேச்சு உச்ச நிலையில் இருக்கிறது. மனம் ஒருமைப்பட்டு வாக்கும் எண்ணமும் கடந்த தருணத்தில் பேசிப் பயன் இல்லை.

இவ்வாறே காதல் உலகத்திலும் வாக்கினாலே வெளியிடுவதற்கு அரிய உணர்ச்சிகள் பேசாத பேச்சினாலே வெளியாகின்றன. மலரானது செவ்வி வந்தபொழுது மலர்ந்து மணம் பரப்புவதுபோல, காதல் உணர்ச்சி தக்க தருணத்தில் வெளிப்பட்டு இன்பம் விளைவிக்கிறது. காதலர் தமக்குள் ஒருவரை ஒருவர் கண்டு உணர்ந்துகொள்ளும் இந்த அற்புதமான நிகழ்ச்சியில், பேச்சு மிகவும் தாழ்ந்த நிலத்தில் இருக்கிறது. பேசாத மௌனமே காதல் விளைநிலத்தின் கானமாக நிலவுகிறது.

அப்படியானால் பேச்சில்லாமல் ஒருவரை ஒருவர் உணர்ந்துகொள்ளும் வழி என்னவென்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? பேசாத பேச்சு அங்கே உதவுகிறது. அங்கே வாய் பேசுவதில்லை; கண் பேசுகிறது!

ராமன், விசுவாமித்திர முனிவருடைய யாகத்தைக் கெடுக்க வந்த தாடகையைச் சங்காரம் செய்து, அகலிகைக்கு முன்னை யுருக்கொடுத்து, அம் முனிவரோடும்

தம்பியோடும் மிதிலைக்கு வருகிறான். அந் நகரத்துக்குள் புகுந்து ராஜவீதிவழியே செல்லுகையில் கன்னிமாடத்தின் மேல் சீதை 'கல்லும் புல்லுங் கண்டுருக' நிற்கின்றாள். உலகத்தில் எங்கும் காண்பதற்கரிய பேரழகுடன் சீதை நிற்கையில், ராமன் அம் மாடத்தருகே செல்கிறான். செல்லும்போது அவன் சீதையைப் பார்க்கிறான். வீதி வழியே செல்பவர்கள் யாவருமே அவளைப் பார்க்கக்கூடும். ஆனால் அவன் பார்த்த பார்வை வேறு. அவன் கண் மாத்திரம் பார்க்கவில்லை. அவனது உள்ளம் கண் என்னும் வாய் வழியே பேசியது.

இந்த நயன பாஷையை எல்லோரும் பேசிவிட முடியாது. பேசுபவருடைய உள்ளம் உணர்ச்சி மயமாக இருக்க வேண்டும். அந்த உணர்ச்சி கண் வழியே மலர வேண்டும். ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா? இந்தப் பேச்சை வாங்கிக்கொள்ள ஒருவர் வேண்டும். அவர் அதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் படைத்திருக்க வேண்டும். ஒரு பாஷையை ஒருவன் பேசினால், அதைக் கேட்கிறவனும் அந்தப் பாஷை தெரிந்தவனாக இருந்தால் தான் அவனுக்கு விஷயம் விளங்கும்; பேசுகிறவனுடைய கருத்து இன்னதென்று உணர்ந்துகொண்டு ஆவன செய்வான். இல்லாவிட்டால் பேசிய பேச்சு வெறும் ஒலியாகிக் காற்றோடு கலந்து வீணாகிவிடும். மனிதர்களோடு பழகியும் காதாலே கேட்டும் பயிலும் பாஷைக்கே இந்தப் பரஸ்பரப் பக்குவம் வேண்டுமென்றால் பேசாத பாஷைக்கு இன்னும் உயர்தரமான பக்குவம் வேண்டுமே.

காதலர் இருவர் சந்திக்கையில், துணிவுடைய ஆடவன்தான் காதல் சம்பாஷணையை ஆரம்பிப்பான். ராமன் பேசாத பேச்சினாலே தன்னுடைய உள்ளத்தை

வெளிப்படுத்தினன். அதை ஏற்றுத் தெளிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவள் சீதாபிராட்டி. பேச்சுக்குப் பதில் கொடுக்கும் சக்தி உடையவள். ராமன் பேசாமல் பேசிய நயன பாஷையிலேதான் விடை அளிக்கவேண்டும்; அதற்குக் கண் மட்டும் ஆடினல் போதாது; இமை சுருங்கினல் போதாது; கருத்து முந்த வேண்டும்; ராமன் பார்த்த பார்வையூடே சென்று உள்ளத்தை உணரும் உணர்ச்சி வேண்டும். அந்த உணர்ச்சி ஒன்றினல்தான் தக்க விடை எழும். சீதை ராமனுக்கு ஏற்ற விடை கொடுத்தாளாம்.

**எண்ணரும் நலத்தினள் இனையள் நின்றுழி**
**கண்ணொடு கண்ணிணை கௌவி ஒன்றைஒன்று**
**உண்ணவும், நிலைபெருது, உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினன், அவளும் நோக்கினள்.**

[நலம் - அழகு. நின்றுழி - நின்ற சமயத்தில். கண் இணை - இரண்டு கண்கள்.]

பிறரால் எண்ணிப் பார்த்தற்கும் அரிய பேரழகும் அருங் குணமும் படைத்தவள் ஜானகி. அவளுடைய அழகு முழுவதையும் பார்க்க யாராலும் முடியாது. கண் கூசும். ராமனுடைய அழகும் அத்தகையதே. 'வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார் ?'

சீதை நின்றபொழுது அவளுடைய பேரழகிலே பிறர் கண் சென்றால் அப்படியே நின்றுவிடும். ராமனுடைய கண் அவளுடைய திருமேனியை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு அவள் விழிக்கடையிலே சென்று பதிந்தது. பம்பரம் வட்டமிட்டு அங்கும் இங்கும் போய்க் கடைசியில் ஓர் இடத்திலே நின்று தூங்குகிறதே, அதுபோல ராமனுடைய கண்கள் சீதையின் கண்களிலே பதிந்தன. அண்ணல்

நோக்கினன்; அவனுக்கு விடையளிக்கும் காதலும் குறிப்பும் உள்ள சீதையும் நோக்கினள்.

வெறும் பார்வையளவிலே இந்த நிகழ்ச்சி நின்றுவிடவில்லை. பார்வையில் கண்ணாகிய பொறி உணர்ச்சி மாத்திரம் இருந்தால், புற அழகைக் காண்பதோடு நின்றிருப்பார்கள். அந்தப் பார்வைதான் மற்றவர் பார்க்கும் பார்வையைப் போல இருக்கவில்லையே! கண் என்னும் சாளரத்தின் வழியே உள்ளமல்லவா பார்த்தது? பார்வையென்னும் நயன பாஷையால் உணர்ச்சியல்லவா பேசியது? கண்களும் கண்களும் சந்தித்தன. உள்ளத்திலே காதல் உடையவர்களுடைய கண்கள் சந்திப்பது இரண்டு கடல்கள் சந்திப்பதற்குச் சமானம். ஒருவர் கண்கள் மற்றவர் கண்களை உண்டனவாம்! கண்களே தெரியவில்லை; கண்களுக்கு ஊடே உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரும் பேசாத பேச்சிலே நாட்டம் இருக்கையில், "இவை கண்கள்; இது பார்வை" என்ற ஞாபகம் இருக்க நியாயம் இல்லையே! ஆகவே அங்கே கண்களே இல்லை. சாளரத்தின் வழியே பார்க்கிறவன் சாளரத்தைப் பார்ப்பானா? சாளரத்துக்குள்ளே நிற்கும் பொருளைப் பார்ப்பானா? காதல் உலகத்தில் கண்கள் பார்க்க வந்தன அல்ல; பேச வந்தன. அங்கே பார்வையாகிய பாஷைக்குத் தலைமை இல்லை; அதன் அர்த்தமாகிய உணர்ச்சிக்கே தலைமை.

ராமனும் சீதையும் பார்த்தார்கள். கண் இணை ஒன்றை ஒன்று கௌவின. அதோடு நிற்கவில்லை; உண்டன. அப்பொழுதும் நிலை கொள்ளவில்லை; உணர்வு ஒன்றுபட்டது. ராமனுடைய பார்வையின் பொருளை, பேசாத பேச்சிலே உள்ள அர்த்தத்தை, சீதை உணர்ந்து கொண்டாள்; அவளும் கண்ணாலே உணர்வை வெளியிட்டாள். இருவரும்

பேசாமலே தங்கள் சம்மதத்தைத் தெரிவித்துக் கொண் டார்கள். உள்ளம் மாத்திரமல்ல, உயிரே மாறிப் புகுந்து விட்டனவாம்!

இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.

இப்படி மாறிப் புகும்படியான காரியத்தை வாய்ப் பேச்சினாலே சாதித்துக் கொள்ள முடியுமா ? ஆயுள் முழுவதும் பேசினால்கூட முடியாது. காரணம் அந்தப் பேச்சிலே அடங்காத விஷயம் பல இருக்கின்றன. பேச்சுல கத்துக்குப் புறம்பே உணர்ச்சி உலகம் இருக்கிறது. அந்த உலகத்தின் நிழலை, நிறமற்ற, உருவத்தின் விவரமற்ற பிண்டமான நிழலையே வாய்ப் பேச்சு வெளியிடுகிறது. உணர்ச்சியை உள்ளவாறு வெளியிட வேண்டுமானால் பேச்சினாலே பயன் இல்லை.

பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ

என்று கம்பர் சொல்கிறார். பேச வேண்டிய அவசியம் இல்லை ; பேசவும் வேட்கை இராது. வாய்ப் பேச்சுக்கு மேற்பட்ட பாஷை ஒன்று இருக்கும்போது இந்த உபயோகமற்ற பேச்சுக்கு அங்கே வேலை இல்லை.

காதல் உலகத்தில் நயன பாஷைக்கு உள்ள மதிப் பைத் தமிழர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இலக்கணப் புலவர்கள் தமிழ்ப் பாஷைக்கு இலக்கணம் வகுத்ததோடு இந்தப் பாஷையைப் பற்றியும் சிறிது சொல்லியிருக் கிறார்கள்.

எல்லாப் பிறப்பினும் இன்றியமையாமையால், உள்ள மும் உணர்வும் உயிரும் ஒன்றி, ஒரு காலைக்கு ஒரு கால் அன்பு முதலியன சிறந்து நிற்கும் காதலனும் காதலியும் தங்கள் ஊழ்வினையின் வசத்தால் ஓரிடத்தில் சந்திப்பார்கள்,

ஒருவரை ஒருவர் கண்டு மனம் ஒன்றுபடுவார்கள். இது 'கண்டதும் காதல்' என்ற வகையைச் சார்ந்தது அன்று. பிறவிதோறும் காதலராக இருந்த வாசனையினால் உள்ளத்துள்ளே மறைந்து கிடந்த காதல் ஒருவரை ஒருவர் கண்டபோது வெளிப்படுகிறது. 'இவனுக்காகவே இவள் படைக்கப்பட்டாள்; இவளுக்காகவே இவன் படைக்கப்பட்டான்' என்ற நியதியின்படியே நடப்பவர்கள், இந்த லட்சியக் காதலர்கள். அவர்கள் முதல் முதலில் காண்பதைப் பழைய இலக்கணமாகிய தொல்காப்பியம் பின்வருமாறு சொல்கிறது:

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப;**
**மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே.**

[பால்வயின் - பகுதியில். பாலது ஆணையின் – ஊழ் வினையின் கட்டளையாலே. கிழவன் – காதலன். கிழத்தி– காதலி. காண்ப – காணுவார்கள். கடிவரை இன்று- விலக்கு இல்லை.]

காதலர் ஒரே ஊர்க்காரராக இருந்தாலும் இருக்கலாம்; வேற்றூர்க்காரர்களாகவும் இருக்கலாம்; இதைத் தான் முதல் அடி சொல்கிறது.

> 'ஒன்றே வேறே என்று இருபால் வயின் - இருவருக்கும் ஓரிடமும் வேற்றிடமும் என்று கூறப்பட்ட இருவகை நிலத்தின் கண்ணும்'
>
> —**நச்சினார்க்கினியர் உரை.**

காதலரைக் கூட்டி வைக்கத் தெய்வம் முன்னே நிற்கிறதாம். ஒவ்வொரு பிறவியிலும் அவ்விருவரையும்

ஒன்றுபடுத்துவது அதன் வேலை: அவன் காதலை அவள் உணரும் செவ்வி வந்ததும், இந்த ஊழ்வினையாகிய பால் அவ்விருவரையும் எங்கே இருந்தாலும் நெட்டித் தள்ளிக் கொண்டுவந்து, "இதோ இவளைப் பார்" என்று அவனுக்கும், "இவனைப் பார்த்துக் கண்ணால் பேசு" என்று அவளுக்கும் ஆணையிடுகிறது. இந்தக் காதல் நாடகத்துக்குச் சூத்திரதாரி பால்வரை தெய்வம்.

> 'ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின் - உம்மைக் காலத்து (முன் காலத்து) எல்லாப் பிறப்பினும் இன்றியமையாதது, உயிரொன்றி ஒரு காலைக்கு ஒரு கால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால் வரை தெய்வத்தின் ஆணையாலே.'

பால்வரை தெய்வம் என்பது ஊழ்வினையை வரையறுக்கும் கடவுளைச் சுட்டியது. பால் என்பதும் பால் வரை தெய்வமென்பதும் விதிக் கடவுளைக் குறிப்பவை. அந்தத் தெய்வத்தின் கட்டளையாலே காதலனும் காதலியும் காண்பார்கள்.

காதலனும் காதலியும் ஒருவருக்கு ஒருவர் இன்றியமையாதவராகிப் பத்துப் பொருத்தம் உடையவர்களாக இருக்கவேண்டுமாம். இந்தக் காலத்தில் கல்யாணத்துக்கு நட்சத்திரப் பொருத்தம் முதலிய பத்துவகைப் பொருத்தங்களைப் பார்க்கிறார்கள். தொல்காப்பியர் கூறும் பொருத்தம் வேறு. பிறப்பு, ஒழுக்கம், ஆண்மை, பிராயம், உருவம், அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் என்ற பத்தும் ஒத்தவர்களாகக் 'காதலர்கள் இருக்கவேண்டும். பால்வரை தெய்வம் இத்தகைய காதலர்களையே ஒன்று படுத்தும். இந்தப் பொருத்தங்களுள் சில விஷயங்களில் காதலன் உயர்ந்தவனாக இருந்தாலும் குற்றம் இல்லையாம்.

'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப; மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே-பிறப்பு முதலிய பத்தும் ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்ப்படுப; அங்ஙனம் எவ்வாற்றானும் ஒவ்வாது தலைவன் உயர்ந்தோனாயினும் கடியப்படா.'

—நச்சினார்க்கினியர் உரை.

அவன் அவளைப் பார்க்கும்போது முதலில், 'இவள் இந்த உலகத்துப் பெண்தானா?' என்று ஐயுறுவானாம். அவ்வளவு சிறந்த அழகுடையவளை இந்த உலகத்திலே பார்ப்பது அரிது. பிறகு அவன், 'இவள் மானிட மங்கையே' என்று தெரிந்துகொள்வான். தனக்காகப் பிறந்து வளர்ந்தவள் என்று உணர்ந்துகொண்ட காதலன் தன் காதலை வெளிப்படுத்த முற்படுகிறான். அவளும் அதை ஏற்றுக்கொண்டு தன் கருத்தைப் புலப்படுத்துகிறாள். எப்படி? பேசவில்லை. பேசாமலே அவர்கள் பேசுகிறார்கள். அவர்கள் உள்ளக் கருத்தை ஒன்றுபடுத்துவதற்குக் கண்கள் பேசுகின்றன.

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்

என்று தொல்காப்பியர் சொல்கிறார்.

அவர்களுடைய அறிவை உடம்படுத்தற்கு, இருவருடைய பார்வைகளே ஒன்றுபடுத்திப் பேசும் குறிப்புப் பாஷை ஆகிவிடுகின்றன.

'அங்ஙனம் மக்களுள்ளாள் எனத் துணிந்து நின்ற தலைவன் பின்னர்ப் புணர்ச்சி வேட்கை நிகழ்ந்துழித் தலைவியைக் கூடக் கருதி உரை நிகழ்த்துங்கால் கூற்று மொழியான் அன்றிக் கண்ணான் உரை நிகழ்த்தும் என்பதூஉம், அதுகண்டு தலைவியும் அக்கண்ணாலே தனது

வேட்கை புலப்படுத்திக் கூறும் என்பதூஉம் கூறுகின்றது' என்று நச்சினார்க்கினியர் இந்தச் சூத்திரத்தின் கருத்தை வெளிப்படுத்துகிறார்.

அறிவு என்பது இங்கே ஒருவரை ஒருவர் உணர்ந்து கொண்ட உணர்ச்சி ஆகும். தெய்வம் கட்டளையிடச் சந்தித்தமையால் ஒருவரை ஒருவர் கண்டு, 'நம் வாழ்க்கைக்கு இன்றியமையாதவர் இவர்' என்று உணர்ந்து கொண்டு, அவ்வாறு உணர்ந்த உணர்வைத் தம்முள்ளே பரிமாறிக்கொள்ள எண்ணுகிறார்கள். அதற்கு வாய்ப் பேச்சுப் போதாது. வாய்ப் பேச்சுக்கு ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையைக் கடந்து நிற்பது காதல். காதலர் தம் உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்தாமல் இருப்பதும் முடியாத காரியம். இவ்வளவு காலம் அவன் உயிர் அவளுக்காகத் தனித்து நின்று, 'அவள் எங்கே, எங்கே?' என்று தேடியது. அவளும் அதே நிலையில்தான் இருந்தாள். இப்போது சந்தித்தார்கள். "உன்னைத்தான் நான் தேடுகிறேன்" என்று உள்ளமும் உள்ளமும் பேசிக்கொள்ள முந்துகின்றன.

உலகத்தில் வழங்கும் எந்தப் பாஷைக்கும் அறிவை உடம்படுத்தும் ஆற்றல் இல்லை. காதலர் கண்கள் சந்திக்கின்றன. அவை பேசிக்கொள்கின்றன. அந்தப் பார்வையே அவர்கள் உணர்ச்சியைப் பரிமாறிக்கொள்ளும் பாஷையாக விளங்குகிறது. அந்தப் பாஷை பேசாத பாஷை; குறிப்புரை; அவ்விருவருக்குமாத்திரம் விளங்குமேயன்றி வேறு யாருக்கும் விளங்காதது. அந்த மோனக் காதலில், கண்ணோடு கண் சந்தித்துப் பேசும் பாஷைக்குச் சமானமாக வேறு ஒன்றும் இல்லை. லட்சக்கணக்கான மக்களை வசப்படுத்தும் கவர்ச்சியுள்ள பேச்சு

அந்த உலகத்துக்குப் புறம்பே நிற்கவேண்டியதுதான். 'நான், நீ' என்று வேறு பிரித்துப் பேசும் சம்பாஷணையின் நிழல்கூட அங்கே வரக்கூடாது; வர முடியாது. அங்கே வாய்ச் சொற்களால் கடுகளவுகூடப் பயன் இல்லை. இதைத்தான் திருவள்ளுவர் மிக அழகாகச் சொல்கிறார்.

> **கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்**
> **என்ன பயனும் இல.**

பெரும்பாலும் வாய்தான் பேசுமென்று சாமான்ய உலகம் அறிகின்றது. கண்ணும் பேசும் என்பதைக் கவிஞர் உலகம் தெரிந்துகொண் டிருக்கின்றது. கண்தான் அங்கே பேசும், வாய்ப் பேச்சுக்கு இடமே இல்லை என்பது காதலர் உலகத்து அநுபவம். இந்த விஷயத்தையே தொல்காப்பியர் இலக்கணமாகச் சொன்னார். கம்பர் காவியமாகப் பாடினார்.

# முகமும் கண்ணும்

ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் படைத்த முகம் வெவ்வேருக இருக்கிறது. அநாதி காலமாகப் பிரம சிருஷ்டியில் எத்தனை கோடி மக்கள் பிறந்து மடிந்திருக்கின்றனர்! அத்தனை மக்களிலும் ஒருவர் முகம் ஒருவருக்கு இருப்பதில்லை. முகத்திலே கண்ணும் மூக்கும் வாயும் நெற்றியும் ஒரே மாதிரியாகத்தான் எல்லோருக்கும் அமைந்திருக்கின்றன. அந்த அமைப்பில் பொதுமையாகிய வரையறை ஒன்று இருக்கின்றது. ஆனாலும் முகத்துக்கு முகம் வெவ்வேறு தோற்றத்தைத்தான் பார்க்கிறோம். இது எத்தகைய ஆச்சரியம்! முகம் உடம்பில் தலைமையான அங்கம். அழகினாலும் ஞானேந்திரியங்கள் ஐந்தில் கண் காது மூக்கு நாக்கு என்னும் நான்கும் பொருந்தியிருப்பதனாலும் முகத்திற்குப் பெருமை உண்டாகியிருக்கிறது.

இதைக்காட்டிலும் சிறந்தது ஒன்று உண்டு. மனிதன் உள்ளப் பெருமையால் உயர்ந்தவன். 'தக்க இன்ன, தகாதன இன்ன' என்று சிந்தித்து ஆராய்ந்து பார்க்கும் தனியறிவு படைத்தவன் அவன். அவன் உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சியாகிய எண்ணம் கண்ணால் காண இயலாதது. அதன்கண் நிலவும் உணர்ச்சி காட்சிக்குப் புலப்படாதது. எல்லா உணர்ச்சிகளையும் பேச்சாலே வெளிப்படுத்த இயலாது. ஆயினும், உள்ளத்தினூடே நிகழ்வன எல்லாவற்றையும் வெளிப்படுத்தும் கண்ணாடிபோல உதவுகின்றது முகம். அகத்திலே தோற்றும் உணர்ச்சிக்கு உருவம்

இல்லை; தன்னுடைய ஒளியினாலும் நிழலினாலும் முகமானது அதற்கு உருவம் வகுத்துக் காட்டுகின்றது. பேச்சாலே உணர்த்தற்கு அரிய உள்ளத்து உணர்ச்சியை முகம் பேசாத பேச்சினாலே உணர்த்துகிறது.

கண்ணாடிக்கு எதிரே எந்தப் பொருளைக் கொண்டு போனாலும் அந்தப் பொருளின் நிறத்தையும் வடிவையும் அப்படியே அது காட்டுகிறது. முகமும் அத்தகையது தான். கண்ணாடிக்கு எதிரில் உள்ள பொருளை நாம் காண முடியும். முகத்தில் குறிப்பிக்கப் பெறும் கருத்தை நாம் காண முடியாது. உள்ளத்தின் ஆழத்தே புதைந்திருப்பது அது.

**அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்.** —குறள், 706.

[கடுத்தது - மிக்க உணர்ச்சியை.]

ஒருவருக்கு அளவற்ற கோபம் வருகிறது. வார்த்தைகள் எழுவதில்லை. கைகால்கள் பதறுகின்றன. அந்தக் கோபத்தைச் செயற்கையாற் காட்ட அவர் தொடங்குவதற்கு முன்பே அறிவாளியாக இருக்கிற ஒருவன் அவர் கோபத்தை உணர்ந்துகொள்ளலாம். 'முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடிக்கும்' என்று சொல்வதில்லையா? உள்ளத்தில் குமுறும் வெப்பமானது முகத்திலே கொப்புளிப்பதை அறிந்துகொள்ளலாம்.

அப்படியே மகிழ்ச்சி உண்டாவதையும் முகத்தாலே உணர்ந்து கொள்ளக்கூடும். உரையும் செயலும் அந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு முன்பே, முகமானது விரைவில் அவற்றைப் புலப்படுத்திவிடும். ஆகையால் முகத்தைக் காட்டினும் அறிவுடைய பொருள் வேறில்லை என்று திருவள்ளுவர் சொல்கிறார்.

**முகத்தின் முதுக்குறைந்த துண்டோ ? உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்.** —குறள், 707

மனமாகிய அரசனுக்கு முன்னே செல்லும் தூது வனைப்போலப் பராக்குச் சொல்லுகின்றதாம் முகம். 'ஒருவன் உள்ளத்துள்ளே மகிழ்ச்சியை அடைந்தாலும் கோபத்தை அடைந்தாலும் அதனைத் தான் தெரிந்து கொண்டு முன்னாலே வந்து புலப்படுத்தி நிற்கும்; ஆகையால் முகத்தைக் காட்டிலும் புத்திசாலி யார் இருக்கிறார்கள்?' என்று கேட்கிறார் வள்ளுவர்.

பெரிய மனிதர்கள் அதிகமாகப் பேசமாட்டார்கள். அவர்களுடைய குறிப்பை அறிந்து வேலை செய்யும் ஏவலாளர்கள் அருகில் இருக்கவேண்டும். பெரிய மன்னர்களாக இருந்தால் அதிக மௌனம் சாதிப்பார்கள். அவர்கள் அப்படி இருப்பதுதான் அழகு. எடுத்ததற்கெல்லாம் ஒரு பிரசங்கம் செய்வதாக இருந்தால் அரசியற் காரியம் ஒன்றும் நடைபெறாது. செய்யவேண்டியவற்றைக் குறிப்பினாலே உணர்த்தத் தெரிந்த அரசனும், அவன் குறிப்பை உணரும் அமைச்சர்களும் இருந்தால் அரசியல் ஒழுங்காக நடைபெற்றுவரும். அரசனுடைய குறிப்பை உணரும் ஆற்றல் அமைச்சர்களுக்கு இருக்கவேண்டும் என்று **'குறிப்பறிதல்'** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் வற்புறுத்துகிறார்.

அரசன் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கிறான். பிற நாட்டுப் பெரியார் பலரோடு பேசிக்கொண்டிருக்கிறான். அப்போது வேறு நாட்டிலிருந்து தூதன் ஒருவன் வந்து எதையோ சொல்கிறான். அவனுக்குத் தக்க விடை கொடுத்து அனுப்பவேண்டும். பெரியவர்கள் மிகவும் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மன்னனும்

அந்தப் பேச்சில் ஈடுபட்டிருக்கிறான். தூதன் நின்று கொண்டே இருக்கிறான். காரியம் நடக்கவேண்டுமே. அரசன் தூதனைப் பார்த்துப் பேசுவது உசிதம் அன்று; பெரியவர்களை அவமதித்ததுபோல் ஆகும். இந்த நிலையில் அமைச்சன் அரசனது உள்ளக் கருத்தை உணர வழி தேடுகிறான். "இவனுக்கு விடை சொல்லவில்லையே!" என்று இடைமறித்துக் கேட்கலாமா? அதைக் காட்டிலும் அநுசிதம் வேறு இல்லை. தானாகத் தீர்மானம் செய்து ஒரு காரியத்தைச் செய்யலாமா? அதுவும் நீதியன்று. அரசன் கருத்தைத் தெரிந்து அதன்படி செய்வதே அமைச்சனது கடமை. அவன் கருத்தை உணர்வது எப்படி? அரசனுடைய அகத்தை நோக்கவேண்டும். அகத்துக்குள்ளே புகுந்து நோக்க அமைச்சனால் முடியுமா?

அரசன் அமைச்சன் பக்கம் திரும்புகிறான். பார்த்த அளவிலே அரசனது உள்ளக் குறிப்பை அமைச்சன் உணர்ந்துகொள்ளுகிறான். தூதனுக்கு என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லி அனுப்பி விடுகிறான்

தன்னுடைய முகத்தை நோக்கின மாத்திரத்திலே அதன் மூலமாக அகத்தையும் நோக்கும் ஆற்றலையுடைய அமைச்சர் இருந்துவிட்டால் அரசன் வாயினாலே 'இது செய்' என்று சொல்லவேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் தன் முகத்தை நோக்கும்படியாக அவர்களைப் பார்த்தாலே போதும்.

**முகம்நோக்கி நிற்க அமையும், அகம்நோக்கி**
**உற்ற துணர்வார்ப் பெறின்.** குறள், 708

'அரசியலில் ஒரு காரியம் செய்யவேண்டுமென்ற கருத்தை உடைய அரசன், தன் மனத்தைக் குறிப்பினால் அறிந்து, செய்யவேண்டுமென்று தான் நினைத்த காரி

யத்தை நிறைவேற்றும் நல்ல அமைச்சரைப் பெற்றால், அந்த அமைச்சர் தன் முகத்தை நன்றாகப் பார்க்கும்படியாக அவர்கள் முகத்தைப் பார்க்கும் அளவிலே நிற்றலே போதும்' என்பது இந்தக் குறளின் பொருள்.

'அவ்வெல்லையைக் கடந்து சொல்லுமாயின், இவர்க்கும் சிறுமை ஆகலின், அது வேண்டா வென்பதாம்' என்று இந்தக் குறளுக்கு விசேஷ உரை எழுதுகிறார் பரிமேலழகர். புத்திசாலியாகிய மந்திரிக்குத் தன் முகத்தைக் காட்டுவதே போதுமானதாக இருப்ப, அதை விட்டுவிட்டு அரசன் பேசினால் இரண்டு பேருக்கும் இழிவு உண்டாகி விடுகிறதாம். தன் கருத்தைக் குறிப்பாகப் புலப்படுத்தத் தெரியாதவன் என்று அரசனுக்கும், குறிப்பை உணராத ஜடம் என்று அமைச்சனுக்கும் தாழ்வு வரும் அல்லவா?

இயற்கையாகச் சில சமயங்களிலும் செயற்கையாகச் சில சமயங்களிலும் பேசாத பேச்சாகிய குறிப்பு நிகழ்கிறது. உள்ளத்திலே கோபம் உண்டானால் அதை இயற்கையாகவே முகம் உணர்த்துகிறது. ஏதாவது யோசனை இருந்தால் அதை அரசன் ஓரளவு செயற்கையாக முகக் குறிப்பால் உணர்த்துகிறான். இருவகைக் குறிப்பையும் உணர்ந்து ஒழுகும் திறமை அமைச்சனுக்கு இருக்கவேண்டும். அத்தகைய அமைச்சனை உலகத்துக்கே ஆபரணம் என்றும், தெய்வத்துக்குச் சமானம் ஆனவனென்றும் திருவள்ளுவர் பாராட்டுகிறார்.

* * *

முகத்தைப் பார்த்து உணர்வதிலும் கண்ணைப் பார்த்துக் கருத்தை உணர்வதில் பின்னும் சிறந்த நுண்ணறிவு வேண்டும். அரசன் வாயாலே பேசமாட்டான்; கண்ணாலே பேசுவான்.

**கண்ணிற் கூறி**
**இருநிலம் புரக்கும் ஒருபெரு வேந்தன்**
—சிதம்பர மும்மணிக் கோவை, 26

என்று ஒரு புலவர் சொல்கிறார்.

அரசன் தன் கருத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற சங்கற்பம் கொள்ளாவிட்டாலும் கண் அதனை வெளிப்படுத்திவிடும். அதை உணரும் ஆற்றல் உடைய அமைச்சரே நுண் அறிவுடையவர் ஆவர். இங்கிதம், வடிவு, தொழில், சொல் முதலிய பல வகைகளால் ஒருவர் தம் கருத்தை உணர்த்தலாம். அவற்றைத் தம் விருப்பத்திற்கு இசைய மாற்றிக்கொள்ளலாம்; கருத்து ஒன்று இருக்க இங்கிதம் முதலியவற்றை வேறாகக் காட்டலாம். ஆனால் கண் மாத்திரம் கருத்தோடேதான் செல்லும். ஆகையால் கருத்தை அளப்பதற்குக் கண் சிறந்த அளவு கோலாக நிற்கிறது. அந்த அளவுகோலைக் கொண்டு உள்ளத்தை அளப்பதற்கு மிக நுண்ணிய அறிவு வேண்டும்.

**நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணுங்கால்**
**கண் அல்லது இல்லை பிற** குறள், 710

என்று குறள் கூறுகிறது.

'யாம் நுண்ணறிவுடையேம் என்றிருக்கும் அமைச்சர் அரசர் கருத்தினை அளக்கும் கோலாவது, ஆராயுமிடத்து அவர்கண் அல்லது பிற இல்லை' என்பது இதன் பொருள்.

'இங்கிதம், வடிவு, தொழில், சொல் என்பன முதலாகப் பிறர் கருத்தை அளக்கும் அளவைகள் பல; அவையெல்லாம் முன் அறிந்த வழி அவரால் மறைக்கப்படும்; நோக்கம் மனத்தோடு கலத்தலால் ஆண்டு மறைக்கப் படாது, என்பதுபற்றி அதனையே பிரித்துக் கூறினார்;

என்று பரிமேலழகர் எழுதியிருக்கும் விசேஷ உரை, பேசாத பேச்சை நிகழ்த்துவதில் கண் சிறந்து நிற்கும் என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகிறது.

*　　*　　*

காதலன் காதலியரிடையே பேசாத பேச்சு, செயற்கையாகவும் இயற்கையாகவும் நிகழ்வதுண்டு. இயற்கையாக நிகழ்வதை முன்பு கண்டோம். செயற்கையாக நிகழ்வதை இனிப் பார்க்கலாம்.

காதலனும் காதலியும் சந்தித்து இன்புற்றுப் பிறகு பிரிகிறார்கள். காதலி தோழியர் கூட்டத்தை அணுகுகிறாள். காதலனோடு இன்புற்ற உணர்ச்சியினால் அவள் நிலை இப்போது வேறுபட்டிருக்கிறது. அவளிடத்தில் உண்டான அந்தப் புதுமையை மற்றத் தோழிமார் உணரா விட்டாலும் அவளுடைய ஆருயிர்த் தோழி உணர்ந்து கொள்வாள். அப்படி உணர்ந்தால் மேற்கொண்டு காதலனை அவள் சந்திக்க அநுகூலம் உண்டாகும். ஆகையால் அவள் தன் காதல் தோழியைப் பலமுறை கடைக்கண்ணாலே பார்க்கிறாள். அந்தப் பார்வையே காதலனுக்கு ஒரு பெரிய ரகசியத்தைச் சொல்லுகிறது. "இவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் நிற்கிறேனே என்று நீ பிரமிப்பை அடையாதே. இவ்வளவு பேரும் வெறும் பொம்மைகள்; இதோ நிற்கிறாளே, இவள்தான் என் உயிர்த் தோழி. எங்கள் உயிர் ஒன்று; உள்ளம் ஒன்று; எங்களுக்குத் தாய் தந்தையர் செய்யும் சிறப்புகளும் ஒன்று" என்று பேசாத பேச்சினாலே கண்கள் சொல்லுகின்றன.

உலகத்தினருக்குத் துன்பத்தை உண்டாக்கும் குற்றத்தைச் செய்துகொண்டு ஆகாயத்தே திரிந்துகொண்

டிருந்த திரிபுரத்தைச் சங்காரம் செய்தவன் சிவபிரான். அவன் தில்லைச் சிற்றம்பலத்தே தாண்டவம் புரிந்தருள் கிறான்; அந்தக் கூத்தனுக்கு ஆட்பட்டவன் இந்தக் காதலன். தனக்கு இன்பம் அளித்த காதலியை அந்தக் கூத்தப்பிரானுடைய திருவருளே என்று எண்ணுகிறான். அவளுடைய மெல்லிய மொழிகளைக் கேட்டுக் கேட்டு அவன் உள்ளம் குளிர்கிறான்.

**விண்வாய்ச்**
**செயிர்ஒன் று முப்புரம் செற்றவன்**
**தில்லைச்சிற் றம்பலத்துப்**
**பயில்கின்ற கூத்தன் அருள்என**
**லாகும் பணிமொழி**

என்று அவளைப் பாராட்டுகிறான்.

மெத்தென்ற மொழியை உடையவளாகிய காதலி யானாலும் இப்போது அந்த மொழியை அவன் கேட்க வில்லை. வாய் பேசவில்லை. அவளுடைய கண்கள் பேசுகின்றன. அவை அவள் காதளவும் நீண்டன. வேற்படையைப்போலக் கூர்மையானவை. அவை தோழியினிடத்தே சென்று உலவுகின்றன. அப்படி உலவும்போது அவன் அதன் குறிப்பை உணர்ந்துகொள்கிறான். 'இவளுக்கு என்னோடு உயிர் ஒன்று, உளமும் ஒன்று, ஒன்றே சிறப்பு என்ன, சென்று பயில்கின்ற' என்பதை உணர்ந்து களி கூர்கிறான். இந்தக் களிப்பிலே வருகிறது பாட்டு:

**உயிர்ஒன் றுளமும்ஒன் றொன்றே சிறப்பிவட்கு**
**என்னொடென்னப்**
**பயில்கின்ற சென்று செவியுற நீள்படைக்**
**கண்கள்; விண்வாய்ச்**

**செயிர்ஒன்று முப்புரம் செற்றவன் தில்லைச்சிற்**
**றம்பலத்துப்**
**பயில்கின்ற கூத்தன் அருள்என லாகும்**
**பணிமொழிக்கே.**

—திருக்கோவையார், 18.

[சிறப்பு – தாய் தந்தையர் செய்யும் உபசார வகை. பயில்கின்ற – பழகுகின்றனை. செயிர் - குற்றம். பணி மொழி – மெல்லிய வார்த்தைகளைப் பேசுபவள்.]

* * *

**நா**யகன் சில காலம் வேறு ஊருக்குப் போய்ப் பணம் சம்பாதித்துக்கொண்டு வந்து தன் நாயகியுடன் இன்புற்று வாழ்கிறான். முன்னாலே பிரிந்தபொழுது என்றைக்கும் இல்லாதபடி அதிக அன்பைக் காட்டினான்; அதிகமாகக் கொஞ்சினான். இப்போது அவன் அதிகமான அன்பு பாராட்டும்போதெல்லாம் அவளுக்குப் பழைய ஞாபகம் வருகிறது. 'மறுபடியும் பிரிந்து போவதற்குரிய அறி குறியோ?' என்று அஞ்சுகிறாள்.

அவள் அச்சத்தை நாயகன் உணர்ந்துகொள்கிறான். "பைத்தியமே, நான் பிரியப் போகிறதில்லை. வேண்டிய அளவுக்கு நான் சம்பாதித்துக்கொண்டு வந்துவிட்டேன். இனி நான் உன்னைப் பிரியவேண்டுவதில்லை" என்று சொல்லுகிறான். அவள் இதுகேட்டு நாணம் அடைகிறாள். 'நம் கருத்தை இவர் எப்படி அறிந்துகொண்டார்? நாம் சொல்லாமல் இருந்தும் இவர் அறிய வகை யாது?' என்று நினைக்கிறாள்; "நான் அப்படிப் பயப்படவில்லையே!" என்று தன் குயில்மொழியாலே கூறுகிறாள்.

அவள் பொய் சொல்லுகிறாள். தன் அச்சத்தை வெளிப்படுத்தாமல் மறைத்தவள் ஆகையால், அதனை

அவன் உணர வழியில்லை என்று எண்ணிச் சொன்ன வார்த்தை இது. பேசும் பேச்சைக் கேளாவிட்டாலும், பேசாத பேச்சை உணரும் அறிவுடையவன் அவன். ஆகவே, அவள் அச்சத்தை உணர்ந்துகொண்ட முறையைச் சொல்கிறான்.

"நீ உன் கருத்தை வெளியிட விரும்பவில்லை. அடக்கப் பார்த்தாய். ஆனாலும் என் செய்வது! நீ அடக்க அடக்க உன்னையும் மீறிக்கொண்டு சொல்லிவிட்டாய். உன் வாய் சொல்லவில்லையே அன்றி உன் கருத்தைக் காட்டும் கண்கள் சொல்லிவிட்டன" என்கிறான்.

**கரப்பினும் கையிகந்து ஒல்லா நின் உண்கண்**
**உரைக்கல் உறுவதொன் றுண்டு.**

[நீ சொல்லாமல் மறைத்தாலும் உன்னோடு உடன் படாமல் நின் செயலையும் கடந்து உன் மையுண்ட கண்கள் எனக்குச் சொல்லக்கூடிய காரியம் ஒன்று இருக்கிறது.]

* * *

மகளிர் தம் காம நோயைக் கண்ணாலே சொல்லுவார்களாம். அவர் தம் கருத்தை வெளிப்படையாகப் புலப்படுத்துவதில்லை! நாணம் அவ்வாறு செய்ய இடங்கொடாது. உத்தம மகளிருடைய உள்ளக் கருத்துக்கள் மலரில் மென்மை போலவும், தென்றலில் தண்மை போலவும் உற்றறிவாருக்குப் புலப்படும்.

வெளிப்படையாகத் தம் கருத்தைப் புலப்படுத்தல் ஆண்மைக் குணம்; குறிப்பினால் வெளியாக்குதல் பெண்மைக் குணம். காதல் உணர்ச்சியைக் கண்ணால் புலப்படுத்துவது பெண்தன்மைக்குள்ளே சிறந்த பெண் தன்மை. பேசாத பேச்சினாலே அதனை உணர்த்தும் நாகரிகம் பண்பட்ட உள்ளத்தை உடையாரிடந்தான் காணப்படும்.

**தாம்உறு காமத் தன்மை**
**தாங்களே உரைப்ப தென்ப**
**தாமெனல் ஆவ தன்றால்**
**அருங்குல மகளிர்க் கம்மா !**

என்று சூர்ப்பணகை சொல்வதாகக் கம்பர் அமைக்கிறார். ராக்ஷஸியாகிய அவள் தன் காமத்தைப் புலப்படுத்தினாலும், அங்ஙனம் வெளிப்படுத்தல் நாகரிகம் அன்று என்பதை அவளும் தெரிந்துகொண்டிருக்கிறாள்.

பெண்மையினும் பெண்மையாகிய இந்தத் தன்மையை வள்ளுவர் அழகாகச் சொல்கிறார்.

**பெண்ணினாற் பெண்மை உடைத்தென்ப, கண்ணினால்**
**காமநோய் சொல்லி இரவு.**

[பெண்ணினால்-பெண்மைக்குள்ளே. இரவு-இரத்தல்.]

வாயாலே தம் காதலைச் சொல்லாமல் கண்ணினாலே சொல்லி யாசிக்கும் இயல்பு, பெண்மைக்குள்ளே பெண்மை எங்கே இருக்கிறதோ அங்கே காணப்படுமாம். காதல் பிச்சையை யாசிக்கும் நாகரிக யாசகர்களுக்குக் கையும் வாயும் பயன்படுவதில்லை. கண்களே பேசாத பேச்சால் இரக்கின்றன.

அதை உணர்ந்து விடை கூறுவார் பின்னும் அதிக நயமுடைய நாகரிகராக இருத்தல் வேண்டும். கண்ணாலே குறிப்பை உணர்த்தும் அரசனுக்கு அந்தக் குறிப்பை உணரும் அறிவு படைத்த அமைச்சன் வேண்டும். அவ் விருவரும் அரசியலை நன்கு நடத்துவார்கள். அப்படியே கண்ணாலே காதல் உணர்த்தும் காதலிக்கு அதனை உணரும் காதலன் வேண்டும். அவர் இருவரே இன்ப இயலுக்கு உரியவர்கள்.

# ராமாயணத்தில்

அநுமனை முதல் முதலில் கண்ட ராமபிரான் அவனது அறிவின் திறத்தையும், பேச்சின் செம்மையையும் கண்டு வியக்கின்றான். "யார்கொல் இச் சொல்லின் செல்வன்!" என்று யோசிக்கிறான். முனிவர்களினும் வானவர்களினும் அவனைப் போன்ற சொற்றிறம் உடையவர் வேறு யாரும் இலர் என்று கருதுகின்றான். சுருங்கிய சொற்களிலே செறிந்த பொருளை உணர்த்தும் ஆற்றல் உடையவன் அநுமன். இடத்துக்கும் காலத்துக்கும் மக்களுக்கும் ஏற்பப் பேசும் அவனது பேராற்றலைக் கம்பர் நன்றாகப் புலப்படுத்திச் செல்கிறார்.

பேசவேண்டிய இடத்தில் நன்றாகப் பேசும் ஆற்றல் பெற்றவர்கள், பேச வேண்டாத இடத்தில் பேசாமலே இருக்கவும் சக்தி உடையவர்களாக இருப்பார்கள். பேசாத பேச்சாகிய குறிப்புக்களால் விஷயத்தைப் புலப்படுத்தும் திறமையும் அவர்கள்பால் காணக்கிடக்கும். அநுமன் பேசும் பேச்சிலும் வல்லவன்; பேசாத பேச்சிலும் வல்லவன்.

மாருதி கடலைத் தாண்டி இலங்கைக்குச் சென்றான். ஊரெல்லாம் தேடிய பிறகு அசோகவனத்தில் சீதையைக் கண்டு ராமனது நிலையை அறிவித்துச் சூளாமணியை அப் பிராட்டியினிடமிருந்து பெற்று, சென்ற காரியத்தை நிறைவேற்றினான். அதுகாறும் ராமதூதனாக இருந்த அவன் தன் வீரத்தைப் புலப்படுத்தும் சந்தர்ப்பம் நேர்ந்தது. பொழிலை இறுத்து, ராவணன் அனுப்பிய கிங்கரரை

வதைத்து, சம்புமாலியைக் கொன்று, பஞ்ச சேனாதிபதிகளை அழித்து, அட்சகுமாரனைத் துகைத்து, பாசத்தாற் கட்டப்பட்டு, ராவணனைக் கண்டு, ராமன் பெருமையைத் தெரிவித்து, இலங்கையை எரியூட்டிவிட்டு மீட்டும் கடலைத் தாண்டி மகேந்திர பர்வதத்தை அடைந்தான்.

அங்கே அவனுடைய வரவை எதிர்நோக்கி வானர வீரர்கள் நின்றுகொண்டிருந்தனர். பறவைக் குஞ்சுகள் தம் தாயைக் கண்டாற்போல அநுமனைக் கண்டவுடன் அவர்கள் ஆனந்தக் கூத்தாடினர். மகிழ்ச்சி மிகுதியால் அழுதனர்; ஆர்த்தனர்; தொழுதனர்; ஆடித் துள்ளினர். அநுமனைச் சுற்றி மொய்த்துக்கொண்டனர். சிலர் அவனை இறுகத் தழுவினர். சிலர் அவனை அப்படியே தூக்கிக் கொண்டார்கள். சிலர் தேனும் கிழங்கும் கனியும் கொணர்ந்து வைத்து, "அண்ணலே, இவற்றை நுகர்ந்து மெலிவு தீர்வாயாக" என்று உபசரித்தனர்.

அநுமன் முதலில் அங்கதனை வணங்கிப் பின் ஜாம்பவானைத் தொழுது ஏனைய வானரர்களுக்கும் அவரவர் தகுதிப்படி வணக்கத்தைப் புலப்படுத்தினான். "இங்கே இருக்கின்ற அனைவருக்கும் பிராட்டி நன்மை சொன்னாள்" என்று ஆரம்பித்தான். வீரர்கள் யாவரும் கரங்கள் கூப்பி இறைஞ்சி எழுந்தனர். அவர்களுக்கு உண்டான ஆனந்தத்துக்கு எல்லை இல்லை. உவகை பொங்க நிமிர்ந்த மார்போடு, "போனது முதல் வந்தது வரையில் விடாமல் சொல்ல வேண்டும்" என்று ஆவலாகக் கேட்டார்கள்.

அநுமன் அவ்வாறே சொல்லத் தொடங்கி, சீதா பிராட்டி அருந்தவ நிலையில் அசோகவனத்தில் இருக்கும் செய்தியையும், தான் கண்டு அடையாளம் பெற்றுவந்த

தையும் சொன்னான். சென்ற காரியத்தை நிறைவேற்றிய பகுதி அவ்வளவையும் ஒன்றுவிடாமல் சொன்னான். ஆனால் சொல்லாமல் விட்ட பகுதியும் ஒன்று இருந்தது. அரக்கர்களைக் குலைத்து இலங்கையை எரியூட்டிய தன் வீரச் செயலை மாத்திரம் அவன் கூறவில்லை.

பெரியவர்கள் தங்கள் பெருமையைத் தாங்களே சொல்லிக்கொள்ள மாட்டார்கள். "நம் பெருமையை உணர்பவர்கள் இல்லையே! ஒருவருக்கும் தெரியாமல் போய் விட்டால் என் செய்வது!" என்ற கவலையை உடைய வர்களே தங்கள் சிறப்பைத் தாங்களே சொல்லிக்கொள் வார்கள். 'அவர்களே தங்களைப் பற்றிச் சொல்லிக்கொள் கிறார்களே; நாம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை' என்று மற்றவர்கள் நினைத்துச் சும்மா இருக்கும்படியாக அவர்கள் செய்துவிடுகிறார்கள். "போரில் நீண்ட வாள் அரக்கரோடு நிகழ்ந்ததும், நெருப்புச் சிந்தி மீண்டதும், விளம்பான்; தான் தன் வெற்றியை உரைப்ப வெள்கி' என்று கம்பர் சொல்கிறார். தன் வெற்றிச் செயலைத் தன் வாயினாலே சொல்வதற்கு அநுமனுக்கு நாணம் உண்டா யிற்றாம். பிறர் தம்மைப் புகழ்ந்தாலே சான்றோர் நாணு வராம். அப்படி இருக்கத் தம் புகழைத் தாமே சொல்லும் இயல்பை அவரிடம் காண முடியுமா ?

சொல்லின் செல்வன் தன் வெற்றிச் செயலைச் சொல்லாவிட்டாலும் அவனுடைய நண்பர்கள் அறிந்து கொண்டார்கள். அநுமனோடு பழகும் அவர்களும் சிறந்த அறிவு படைத்தவர்களே. சொல்லாமலே குறிப்பினால் செய்திகளை உணரும் ஆற்றல் அவர்களிடம் இருந்தது. ஆகவே அவர்கள், அநுமன் எதை உரைக்க வெள்கினானோ அதனை உணர்ந்துகொண்டனர். எப்படி ?

மாருதியின் மேனி முழுதும் புண்கள் இருந்தன. வானர வீரர் அவற்றைக் கூர்ந்து நோக்கினர். அவனுடைய தாள்களிலும் மார்பிலும் தோளிலும் தலையிலும் கைகளிலும் புண்களைப் பார்த்தனர்; வாளாலே வெட்டிய புண்கள் சில; வேலாலே குத்தியன சில; அம்பு துளைத்ததனால் உண்டானவை சில. இப்படி இருந்த புண்களை யெல்லாம் பார்த்து 'உயிர் உக உலைந்து உயிர்த்தார்.' அவை எப்படி வந்தன என்று யோசித்தனர். 'ஆம்! பொல்லாத அரக்கர்கள் சும்மா விடுவார்களா? இவன் ஒருவன். அவர்கள் பலர். பலவகை ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்திருக்கிறார்கள். இந்த மகா வீரன் ஒருவனே அவ்வளவு பேருக்கும் ஈடு கொடுத்திருக்கிறான். இவனுடைய திருமேனியிலுள்ள புண்கள் அவ்வளவும் இவன் வீரத்தைக் காட்டும் ஆபரணங்கள். வேறு யாராவது சென்றிருந்தால் அதோ கதிதான். இவன் அவர்களை வென்று இங்கே மீண்டான். இவன் வெற்றியை இதிலே கண்டோம்' என்று உணர்ந்து அவ் வீரர் ஆரவாரித்தனர்.

தெற்கே பார்த்தார்கள். ஒரே புகை மயமாக இருந்தது. அந்தப் புகை அவர்களோடு பேசியது. "அநுமன் இலங்கையைக் கொளுத்திவிட்டு வந்திருக்கிறான்" என்று அது ஓதியது.

'போனானே, உடனே சீதையைக் கொண்டுவரவில்லையே!' என்ற எண்ணம் முதலில் அவர்களுக்கு உண்டாகியிருக்கலாம். அடுத்தபடி, "ராட்சசர்கள் மிக்க வலியுடையவர்கள்; அவர்களை இவ்வொருவனே வெல்ல முடியாது போலும்! ராமபிரானது அம்பு பசித்திருக்கிறது. அதற்கு இரையாக அரக்கர் இருக்கின்றனர்" என்ற எண்ணம் தோன்றியது.

இவ்வாறு, குறிப்பறியும் கண்ணும கருத்தும் உடைய அவ் வானர வீரர்களுக்கு, அநுமன் பொருதமையை அவன் மேனிமேல் உள்ள புண்கள் சொல்லின; அவன் வென்றமையை அவன் மீண்டு போந்த தன்மை உரை செய்தது; ஊருக்குத் தீயிட்ட செய்தியை வானளவும் ஓங்கிய புகை ஓதியது; அரக்கர் பலத்தைத் தேவி மீண் டிலாச் செய்கை காட்டியது. இவற்றைத் தெரிதர உணர்ந் ததை அவர்களே சொல்கிறார்கள்:

**"பொருதமை புண்ணே சொல்ல,**
**வென்றமை போந்த தன்மை**
**உரைசெய, ஊர்தீ இட்டது**
**ஓங்கிரும் புகையே ஓத,**
**கருதலர் பெருமை தேவி**
**மீண்டிலாச் செயலே காட்ட,**
**தெரிதர உணர்ந்தேம்; பின்னர்**
**என்இனிச் செய்தும்?—என்றார்."**

[பொருதமை - போர் செய்தது. கருதலர் - பகைவர். செய்தும் - செய்வோம்.]

சொல்லின் செல்வன் சொல்லாவிட்டாலும் நிகழ்ந்த வற்றைக் குறிப்பறியும் கண்ணுடையார் கண்டுகொண் டார்கள்.

* * *

**அ**நுமன் ராமபிரானை அணுகினன். என்ன செய்தி வரப்போகிறதோ என்று ஏங்கி நின்றான் ராகவன். அவன் முன்னே தென் திக்கிலிருந்து ஒரு சூரியன் உதயமாவது போல அநுமன் தோன்றினன். அவனைக் கண்டதும் மிக அமைதியாக ராமபிரான் பார்த்தான்.

அநுமன் வந்துவிட்டான். சூழ நின்றவர்கள் அனைவரும் அவன் என்ன சொல்லப்போகிறான் என்று ஆவலோடு எதிர்பார்த்து நின்றார்கள். இயற்கையாகவே இனிமை பொழியப் பேசும் அச் சொல்லின் செல்வன் ஓர் இனிய செய்தியைச் சொல்லப்போகிறான் என்ற ஆர்வம் மூண்டது.

ஆனால், இது என்ன? அவன் ஒன்றும் பேசவில்லையே! ராமனை வணங்கிச் சொல்வான் என்று எதிர்பார்த்தார்கள். கீழே விழுந்து நமஸ்காரம் செய்தது உண்டு. ஆனால் ராமனை அல்ல. தென்திசையை நோக்கித் தலையின் மேல் கைவைத்து அஞ்சலித்துப் பூமிமேல் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான். இது யாவருக்கும் புதுமையாகத் தோன்றியது.

சொல்லின் செல்வனாக இருந்தாலும் அநுமன் பேசாத பேச்சாகிய குறிப்பினாலும் கருத்தை அறிவிக்கும் செல்வன். சீதையைக் கண்டதையும், அவள் நிலையையும் விரித்துணர்த்தினாலும் உரைக்கு அடங்குவன அல்ல. அவன் பிராட்டியைக் கண்டபோது அவனது உள்ளத்தே ததும்பிய பக்தியைச் சொல்ல வார்த்தைகள் இல்லை. அவள் பெருமையைப் பேசாத பேச்சினாலேதான் ஒருவாறு உணர்த்தலாம். ஆகவே அநுமன் இது செய்தான்:

**எய்தினன் அநுமனும்; எய்தி, ஏந்தல்தன்**
**மொய்கழல் தொழிலன்; முளரி நீங்கிய**
**தையலை நோக்கிய தலையன், கையினன்**
**வையகம் தழீஇநெடிது இறைஞ்சி வாழ்த்தினான்.**

[தாமரையினின்றும் நீங்கி வந்த திருமகளாகிய சீதா பிராட்டி இருந்த திக்கை நோக்கி அவன் விழுந்து வணங்கி

ஞன். ஏந்தல் - ராமபிரான். மொய் - வலிமை. முளரி - தாமரை.]

குறிப்பை உணரும் பெருமான் ராமன். அநுமன் செயலைக் கண்டான். அந்தப் பேசாத பேச்சின் பொருளை உணர்ந்துகொண்டான். 'இவன் தென்திசை நோக்கித் தொழுவதனுல் சீதை உயிருடன் இருக்கிருளென்று தெரிகிறது. இவன் அவளைப் பார்த்திருக்கிருன். அவள் இவனுல் தொழத்தக்க கற்புடையவளாக விளங்குகிருள்' என்று அவன் தேர்ந்தான். உடனே அவனுக்கு உவகை மிகுதியாயிற்று. தோள்கள் பூரித்தன. கண்ணில் நீர் துளித்தது. பெருமூச்சு விட்டான். சீதையின் காதல் நினைவிலே ஆழ்ந்தான்.

**திண்திறல் அவன்செயல் தெரிய நோக்கினுன்**
**வண்திறல் ஓதியும் வலியள்; மற்றிவன்**
**கண்டதும் உண்டு; அவள் கற்பும் நன்றெனக்**
**கொண்டனன். குறிப்பினுல் உணரும் கொள்கையான்.**

[திண்ணிய திறலையுடைய அவன்: அநுமன். வண் திறல்ஓதி - மிக்க வலிமையையும் அழகிய கூந்தலையும் உடைய சீதை.]

போய் வந்த செய்தியை இவ்வாறு தெரிவித்து விட்டாலும் மற்றவர்கள் தெளிவாக உணரவேண்டும் அல்லவா? அதன் பொருட்டும், ராமனுடைய உவகை மிகும் பொருட்டும் தன் வியப்பை வெளிப்படுத்தும் பொருட்டும் வார்த்தைகளாலும் செய்தியைச் சொல்லப் புகுந்தான் அநுமன்.

**''கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்''**

என்று தொடங்குகின்றுன். சீதையினுடைய கண்களைக் கொண்டு அநுமன் அவளைத் தெளிந்தானும்.

இலங்கையில் புகை புகா வாயிலிலும் புகுந்து புகுந்து தேடிய அநுமன் எளிதிலே சீதையைக் காணவில்லை. இலங்கைமா நகரின் ராட்சச நாகரிகத்தை முதலிலே நன்ருக ஊடுருவிப் பார்த்தான். "களிக்கின்ருர் அலால் கவல்கின்ருர் ஒருவரைக் காணேன்" என்று மனம் உடைந்து புலம்பினுன்.

ஒவ்வொருவர் கண்ணையும் பார்த்தான். எல்லாம் அரக்கர் கண்கள்; "காரணம் இன்றியேயும் கனலெழச் சிவக்கும் கண்கள்." இந்தக் கூட்டத்தில், கவல்கின்றவளாகிய சீதையைக் காண்பது மிகவும் அரிதாகவே, எங்கே தன் காரியம் நிறைவேருமற் போய்விடுமோ என்று கலங்கினுன்; கடைசியிலே கண்டான்.

சீதையின் உள்ளத்தை அவள் கண்கள் காட்டின. எப்பொழுதும் அழுதவண்ணமாகவே இருந்தமையால் மழைபொழியும் கண்களாக அவை இருந்தன. இடை இடையே திக்கெலாம் அளந்து பார்க்க விரியும் கண்களாக இருந்தன. கடல் போல ஆழ்ந்த கண்கள் அவை. அவற்றைப் பார்த்தால் சீதையின் உள்ளப் பெருமை நன்ருகத் தெரியும். கடலைப்போல் ஆழ்ந்த கண்ணிலிருந்து பெருகும் நீர் நிரம்பிய தடாகத்தில் அவள் அன்னத்தைப் போல இருந்தாள்.

**கடல்துணை நெடியதன் கண்ணின் நீர்ப்பெருந்**
**தடத்திடை இருந்ததோர் அன்னத் தன்மையாள்.**

அந்தக் கண்களைக் கொண்டு, 'இவளே சீதை' என்று தெளிந்தான் அநுமன். அவற்றின் தோற்றத்தில் அவளுடைய துயரத்தையும், அவற்றின் ஒளியிலும் ஆழத்திலும் அவள் உள்ளப் பெருமையையும் உணர்ந்துகொண்டான்.

சீதையை முன்பின் கண்டறியாதவன் அவன்; அவள் தன் நிலையை வாய்விட்டும் கூறவில்லை. இந்த நிலையில் அவள் கண்களே அவனுக்கு உண்மையைப் புலப்படுத்தின. அதனை உணரும் ஆற்றலுடையவன் அநுமன். உணர்ந்து சீதையைப் பலபடியாகத் தன்னுள்ளே வியந்து பாராட்டினான்.

சீதையைக் கண்டதை ராமனுக்கு விரிவாகச் சொல்லுமிடத்துக் கண்களின் புறத் தோற்றத்தை நினைவு கூர்ந்து, கண்ணீர்ப் பிரவாகத்தில் அவள் வீற்றிருந்ததைக் கூறுகின்றான் :

**..................அணங்க னாளைக்**
**கலங்குதெண் திரையிற் றூய**
**கண்ணினீர்க் கடலிற் கண்டேன்.**

அவள் ராமனையே எண்ணி வாடினாள். ராமன் வருவான் வருவான் என்று திக்கெல்லாம் நோக்கியிருந்தாள். அவள் கண்ணிலே அவள் கருத்து - ராமனையே எதிர் நோக்கிக் காத்துத் தவம் புரியும் கருத்து - எழுதியிருந்தது போலும்!

**கண்ணினும் உனை நீ தையல் கருத்தினும் உனை**

என்று சொல்லுகின்றான்.

இப்படிப் புறங் காணவும் அகங் காணவும் சீதையின் கண்கள் உதவியமையால்,

**கண்டெனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்**

என்று கூறினன் அநுமன். குறிப்பினால் உணரும் கொள்கையில் அவனும் சிறந்து நிற்பவன் அல்லவா?

# கண்ணன் செய்த தந்திரம்

தருமபுத்திரர் ராஜசூய யாகம் செய்ய எண்ணிக் கண்ணபிரான் முதலியவர்களோடு ஆலோசனை செய்தார். "உலகத்தில் உள்ள மன்னர்களில் பலரை ஜராசந்தன் சிறைப்படுத்தி யிருக்கிறான். அவனை முதலில் வெல்ல வேண்டும். அந்தக் காரியத்திற்கு வாயுப்புத்திரனாகிய வீமனே ஏற்றவன்" என்று கண்ணன் கூறினான். அறத்தின் சேயாகிய தருமர் அது கேட்டு, "அங்ஙனமே செய்ய லாம்" என்று உடன்பட்டார்.

"நாம் அரசக் கோலத்தோடு அவன் நகரத்தை அணுக முடியாது. நம்மையும் பிடித்துச் சிறையிட்டு விடுவான். ஏதேனும் தந்திரம் செய்து அவனை அணுகி வீமனைக் கொண்டு அவனை வெல்லவேண்டும். நானும் அர்ஜுனனும் வீமனும் அந்தணர்களைப் போல வேஷம் பூண்டு செல்கிறோம்" என்று கோபாலன் கூறி மற்ற இரு வரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

பிராமண வேஷம் புனைந்த அம்மூவரும் மகத நாட்டுள் ஜராசந்தனுடைய ராஜதானி நகரமாகிய கிரிவிரஜத்தை அடைந்தனர். அவன் அரண்மனையை அடைந்து வாயில் காவலரிடம், "மூன்று அந்தணர் உன்னைப் பார்க்கும் பொருட்டு வந்திருக்கின்றனர் என்று தெரிவிப்பாயாக" எனச் சொல்லி அனுப்பினர். அரசன், "அழைத்து வாருங்கள்" என்று சொல்ல மூவரும் உட்புகுந்து அவன் இட்ட தவிசில் அமர்ந்து ஆசியும் கூறினார்கள்.

அப்போது மகத மன்னன் அவர்களைக் கூர்ந்து நோக்கி அவர்கள் தோளில் வில் தழும்பு இருப்பதையும், அவர்கள் தோற்றத்தையும் கண்டு ஐயுற்று, "உங்களைப் பார்த்தால் அந்தணர் என்று தோன்றவில்லை. உண்மையைச் சொல்லுங்கள்; நீங்கள் யார் ?" என்று கேட்டான்.

"நான் யாதவ குலத் தலைவனாகிய கண்ணன்; இவ்விருவரும் குருகுலத்தரசனாகிய தருமபுத்திரனுக்குத் தம்பியர்: வீமனும் அர்ஜுனனும். உன்னுடைய வளநகரைக் காணும் பொருட்டு வந்தோம். அரசர்கள் இதை அணுகுவது அரிதாதலின் மறையவர் உருப் புனைந்து புகுந்தோம்" என்றான் கண்ணன்.

ஜராசந்தன், "அப்படியா! என் தோள்கள் பகைவரைப் பெறாமல் தினவு கொண்டிருக்கின்றன. அமர் புரிய வாருங்கள்" என்று ஊக்கத்தோடு கூறி, அப்பால் கண்ணனை நோக்கி, "நீ பகைவர்களுக்கு அஞ்சி மதுரையை விட்டுத் துவாரகைக்கு ஓடினவன். உன்னோடு போர் செய்தல் வீரமன்று. அசுரர்களுக்குத் தோற்றோடும் இந்திரன் மகனாகிய அர்ஜுனனோ இளையவன். ஆகவே அவனோடும் போர் புரியமாட்டேன். எனக்கு ஏற்றவன் வீமன்தான். அவனோடு நான் போர் இடுவேன்" என்று அறைகூவினான். தன் மந்திரிகளை அழைத்துத் தன் மகனுக்கு முடிசூட்டிவிட்டு வீமனுடன் மல்யுத்தம் புரியத் தொடங்கினான்.

அவ்விருவரும் சிங்கமும் சிங்கமும் பொருதாற் போலத் தாக்கினர். காலாலும் கையாலும் தோளாலும் தலையாலும் முட்டி மற்போர் நடத்தினர். இவ்வாறு பதினைந்து நாள் பகலும் இரவும் விடாமல் யுத்தம் செய்

தார்கள். பூதலம் நடுங்க எழுகிரி நடுங்கத் திசையெல்லாம் நடுங்க வானமெல்லாம் நடுங்க இருவரும் போர் செய்து தளர்ச்சியை அடைந்தனர். ஒருவரை ஒருவர் கொல்ல வேண்டுமென்ற ஆத்திரம் மிக்குப் போர் செய்த அவ்விருவரும் தங்கள் கருத்து நிறைவேருமல் களைப்புற்றுக் கீழே விழுந்தனர்.

அப்போது வாயுதேவன் தன் மகனுகிய வீமன்மேல் மெல்லென வீசி அவனுக்கு உணர்வும் ஊக்கமும் வரச் செய்தான். உடனே வீமன் எழுந்து தன் பகைவன் கால்களை இரு கைகளாலும் பற்றித் தூக்கி, இரணியனைப் பிளந்த நரசிங்கத்தைப்போலக் கிழித்து வெற்றியாரவாரம் செய்து நின்முன்.

இரண்டாகப் பிளந்து வீசிய ஜராசந்தனுடைய உடலம் மீளவும் பொருந்தி ஒன்முகியது. ஜராசந்தன் பண்டுபோல் எழுந்து தோள் கொட்டி ஆர்த்தான். வீமன் அதுகண்டு வியந்து மறுபடியும் போர் செய்யத் தொடங்கினன். முன்னையினும் ஏழு மடங்கு பலம் கொண்டு உதைத்துத் துகைத்தான். ஜராசந்தன் உடல் மீண்டும் இரண்டு பிளவாயிற்று.

அந்த இரண்டு பிளவுகளும் மறுபடியும் ஒன்றுபட்டுத் தோற்றியது. வீமனும் அர்ஜுனனும் உண்மை உணராதவர்கள். மாயனே ஜராசந்தன் உடல் மீண்டும் ஒன்முகி விடும் என்பதை உணர்ந்தவன். அவை அங்ஙனம் சேராதவாறு செய்தால்தான் வீமன் வெற்றி அடைவான். இன்னவாறு செய்தால் பிளந்த பிளவுகள் ஒன்றுபடாமல் கிடந்தபடியே கிடக்கும் என்ற உண்மை கண்ணனுக்குத் தெரியும். அதை வீமனுக்கு வெளிப்படையாகக் கூறுவது

உசிதமாக இராது. வீமன் உணராவிட்டாலோ, போருக்கு முடிவே இல்லை. இந்த நிலையில் பேசாத பேச்சினால் குறிப்பிக்க எண்ணினான் கண்ணன்.

அருகிலே கிடந்த ஒரு துரும்பை எடுத்து அதை இரண்டாகக் கிழித்து, பிளவுகள் இரண்டையும் தலை மாற்றிக் கீழே போட்டான் மாயன். குறிப்புணரும் அறிவு மிக்க வீமன் சூக்ஷ்மத்தை உணர்ந்துகொண்டான். ஜராசந்தனுடைய உடலின் பிளவுகளைத் தலையும் காலும் மாறிக் கிடக்கும்படியாக விரைவிலே மாற்றிப் போட்டான். ஜராசந்தன் மீள வழியில்லாமற் போயிற்று.

**சீறிஅக் குரிசில் கீண்டபேர் உடலைச்**
**சென்னிதாள் செவ்வையின் இடாமல்**
**மாறியிட் டிடுகென் றுருயிர்த் துணையாய்**
**வந்தமா மரகத வடிவோன்**
**கூறியிட் டிடாமல் குறிப்பினால் உரைப்பக்**
**குறிப்பையக் குறிப்பினாற் குறித்து**
**வேறிடப் புவியின் மிசையெறிந் தனனால்**
**வீமன்வல் லபத்தையார் உரைப்பார்.**

—வில்லி பாரதம்

[செவ்வையின் இடாமல் – நேராகப் போடாமல். மரகத வடிவோன் – கண்ணன். வேறு இட - வேறாகத் தலை கால் மாற்றி இட.]

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அர்ஜுனனுக்கு வியப்பின்மேல் வியப்பு ஓங்கியது. அவன் கண்ணனை நோக்கி, "இன்று ஆர் அமரில் இவன் கையால் இறந்தோன் உடலம் ஒன்றியதும், ஒன்றாது இரண்டுபட்ட

தும் யாம் உண்ணும்படி நீ உரைத்தருள்வாய்" என்று வேண்டவே, குன்றால் 'அன்று மழை தடுத்த கொற்றக் கவிகைக் கோபாலன்' சொல்லத் தொடங்கினான்.

"தேவர்களுக்குப் பகைவனாகிய பிருகத்ரதன் என்பவன் இந்த மகத நாட்டுக்கு அரசனாக இருந்தான். அந்தக் கொடியோனுடைய மைந்தனே ஜராசந்தன். உலகத்து அரசர் எண்ணாயிரம் பேரைப் பசுவாகக் கொண்டு நரமேதம் செய்ய வேண்டுமென்ற ஆசையினால் கைப்பட்ட அரசர்களையெல்லாம் பற்றிச் சிறை வைத்தான் இவன். அதனால் தேவர்கள் முதலியோர் இவன் பேரைச் சொல்லவே அஞ்சுவார்கள்.

"இவன் பிறந்தது ஆச்சரியமான செய்தி. பிரகத்ரதனாகிய இவன் தந்தை பல காலம் மகவு ஒன்றுமின்றி வாடி, அப்பால் சண்டகௌசிகன் என்னும் முனிவனைப் பணிந்து பிள்ளை வரம் கேட்டான். அந்த முனிவன் ஒரு மாம்பழத்தைக் கொடுத்து அதை அவன் மனைவிக்கு அளிக்கும்படிக் கூறினான். பிருகத்ரதன் அதனைப் பெற்றுச் சென்று தன் அந்தப்புரத்தை அணுகித் தன் மனைவியர் இருவரிடமும் அளித்தான். காசிராஜன் மகளிராகிய அவ்விருவரும் அந்த மாங்கனியை இரண்டாகப் பிளந்து ஆளுக்கு ஒன்றாக உட்கொண்டார்கள். அது முதல் அவ்விருவரும் கரு வாய்த்தனர். இருவர் வயிற்றிலும் பாதிப் பாதி வடிவம் வளர்ந்து வந்தன. கருப்பம் முற்றியவுடன் இருவரும் ஈன்றனர். ஒரு குழந்தையின் ஒரு பாதியை ஒருத்தியும் மற்றொரு பாதியை மற்றொருத்தியும் ஈனவே, 'இது ஏதோ உற்பாதம்' என்று அஞ்சிய மகத வேந்தன் அவ்விரண்டு பாதிகளையும் தன் ராஜதானி நகரத்துக்கு வெளியே எறியும்படி செய்துவிட்டான்.

"அன்று இரவு மாமிச பக்ஷணம் செய்யும் ஜரை யென்னும் அரக்கி ஒருத்தி மதில் வாயிலிலே உலவிய போது, அந்தப் பிளவுகளைக் கண்டு இரண்டையும் ஒன்றாகப் பொருத்திப் பார்த்தாள். பொருத்தின மாத்திரத்தில் இரண்டும் ஒன்றுபட்டு உயிரோடு குழந்தையாகி விளை யாடத் தொடங்கவே, அரக்கி அதனை அரசனிடம் அளித்து, 'ஜரை என்ற என்னால் பொருத்தப்பட்டமையால் ஜரா சந்தன் என்னும் பெயரிட்டு வழங்குவாயாக' என்று கூறிச் சென்றாள். அது முதல் அப்பெயரே வழங்கலா யிற்று. அவன் உடலில் இரு பிளவும் தனித் தனியாகக் கூறுபட்டாலும் ஒன்றுபட்டு எழுவதற்கு இதுதான் காரணம்" என்று கண்ணன் கூறி முடித்தான்.

அர்ஜுனனும் வீமனும் கேட்டு மகிழ்ந்து, பேசாத பேச்சினால் வீமனுக்கு வெற்றியை வழங்கிய மாய கோபா லனைப் புகழ்ந்தார்கள்.

* * *

**பா**ண்டவர்கள் ஐவரும் பன்னிரண்டு ஆண்டுகள் வன வாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் செய்த பிறகு, மீட்டும் தங்களுக்குரிய நாட்டை அடைய எண்ணினார்கள். முதலில் கிருஷ்ணனைத் தூது அனுப்பி, துரியோதனன் தான் கூறிய வாக்குப்படியே நாட்டை அளிப்பதையும் அளிக்காததையும் தெரிந்துகொள்ள எண்ணினார் தரும புத்திரர். கண்ணன் தூது சென்று பாண்டவர் கருத்தை உணர்த்தினான்.

நாட்டை வழங்க மறுத்தான் துரியோதனன். "ஐந்து ஊரேனும் கொடு; ஐந்து வீடுகளாவது தா" என்று கேட்டான். அரவக் கொடியோன் உடன்படவில்லை. "அப் படியானால் போர் செய்வதற்குக் கை வழங்கு" என்று

கண்ணன் கேட்கவே சினங்கொண்டு துரியோதனன் பல பல கூறி ஏசினன். அவற்றைக்கேட்டு நல்லோர் நடுங்கினர்.

அன்று இரவு துரியோதனன் முதலியோர் கூடி மறு நாள் கண்ணனை அரசவைக்கு வருவித்து வஞ்சகமாகக் கொல்ல வேண்டுமென்று தீர்மானித்தனர். அரசவையில் குழி பறித்து, அதில் மல்லர்களை வைத்து, அக் குழியை மறைத்து, அதன் மேல் ஆசனம் இட்டுக் கண்ணனை அங்கே அமரச் செய்து கொல்வதாக யோசனை செய்தார்கள்.

அடுத்த நாள் துரியோதனனுடைய தூதுவர்கள் கண்ணபிரானை அணுகி மிகவும் பரிவுடன் தம் அரசன் அழைப்பதாகக் கூறவே, அப் பிரான் அரசவையை அடைந் தான். அவனோடு அரசர் பலரும் வரவே, அவரை உள்ளே விடாமல் அவனை மாத்திரம் விடச் செய்து முன்பே அமைத்திருந்த ஆசனத்தில் இருக்கும்படி துரியோதனன் வேண்டினன். ரத்தின கசிதமான அந்த ஆசனத்தில் அமர்ந்தவுடனே நெறுநெறென மேலிட்ட கால்கள் ஒடியக் கண்ணன் நிலவறையில் விழுந்தான். அப்பொழுதே அரவக் கொடியோனது வஞ்சகத்தை நினைந்து சினம் மூண்டு விசுவரூபம் கொண்டான். வானை முடி முட்ட நின்றான். வானவரும் பிறரும் அஞ்சி நடுநடுங்கினர். நில வறையிலே ஆயுதபாணிகளாக நின்றவர்கள் யாவரும் காலால் தேய்க்கப் பெற்று அழிந்தனர். அண்டகடாகம் முழுதும் சிலையோடப் பேருருவங் கொண்ட பிரான், கண்ணில் நெருப்பெழச் சிரித்தனன்.

பலபல கைகளோடு அப் பேருருவம் படைத்த பெரு மான் விளங்கினன். உலகமெலாம் சூரியனுடைய ஒளி மாறி ஒரே மரகத சோபை பரவியது. அந்த விசுவ ரூபத்தைத் தரிசித்து அண்டரும் மாதவரும் வேதம்

பாடிப் பணிந்து புகழ்ந்தனர். "உன் கோபத்தை ஆற்றிக் கொள்" என்று வேண்டினர்.

அரசவையிலிருந்து பீஷ்மரும் பிற மன்னரும் எழுந்து கை குவித்துப் பணிந்து, "எங்கள் பிழையை இன்று பொறுத்தருள வேண்டும்" என்று வேண்டினர். இவ்வளவு ஆரவாரத்தினிடையே கண்ணனது பேருருவைக் கண்டு துரியோதனன் சிறிதும் 'அஞ்சி அயர்ந்திலன். நெஞ்சு பெயர்ந்திலன், சென்னியிலும் கரம் வைத்திலன். புகழ் சிறிதும் மொழிந்திலன்.'

கண்ணன் துரியோதனனை நோக்கி, "நீ துன்மதியால் என்னைக் கொல்ல நினைந்தது நன்று! உன் குலம் முற்றும் ஒரு கணத்தில் அழித்துவிடுவேன். நின்னோடு அன்று ஆயுதம் ஒன்றும் எடுப்பதில்லை என்று வாக்களித்திருக்கிறேன். அன்றியும் பாண்டவர் கூறிய சபதமும் வீணாகி விடும். அதனால் இன்று உயிரோடு விட்டேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான். துரியோதனனை அல்லாத பிற மன்னர்கள் யாவரும் உடன் சென்று வழி அனுப்பினர். கண்ணன் கர்ணனைத் தனியே அழைத்து அவன் பிறப்பின் உண்மையை உணர்த்தினான். பிறகு ஒரு காரியம் செய்யலானான்.

துரோணாசாரியாருடைய புத்திரனாகிய அசுவத்தாமா மிகவும் பலசாலி. அஸ்திர வித்தையில் இணையற்ற திறமை உடையவன். அவன் துரியோதனன் படையில் சேனாதிபதியாக அமர்வானாகில் பாண்டவர் வெற்றியடைதல் அரிது.

அரசவையிலிருந்து வந்தவர்களுள் அசுவத்தாமாவைக் கண்ணன் தனியே அழைத்து, "துரியோதனன் முன்பு சொன்ன நிபந்தனைப்படியே பாண்டவர்கள் கானம் பல திரிந்து, புகன்ற விரதம் பொய்யாதோராகி வந்து, ஐந்து

ஊராவது தா என்று வேண்டிக்கொண்டார்கள். அதனை நான் தூது வந்து இவனிடம் கூறினேன். இவன் மறுத்து விட்டான். அங்ஙனம் இவன் மறுத்ததற்கு நாளைக்குப் போர் மூளும்போது நீயே சாக்ஷியாக வேண்டும்" என்று சொல்லிப் பிறகு மெல்லத் தன் கருத்தை வெளியிடலானான்; "உன்னுடைய குறைவில்லாத ஆண்மைக்கு நிகர் இந்தப் பூமியில் வேறு உண்டோ? ஞானவானாகிய அசுவத்தாமாவே, அரவக்கொடியோன் உன்னைப் பணிந்து சேனாதிபதியாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டாலும் நீ மறுப்பாயானால் பஞ்ச பாண்டவர் உய்வார்கள். அவர் கள்பால் இயல்பாகவே உனக்கு அன்பு உண்டென்பதை யான் அறிவேன்."

இவ்வாறு சொல்லிக்கொண்டே மாயோன் தன் விரலில் இருந்த மணியாழியை மண்ணிடை வீழ்த்தினான். அசுவத்தாமா, மோதிரம் தானே நழுவியது என்றெண்ணி அதனை எடுத்துக் கொடுத்தான். கண்ணன் அதனை உடனே வாங்கிக் கொள்ளாமல், "இதென்ன, சூரியனைச் சுற்றிப் பரிவேடம் சூழ்ந்திருக்கிறதே!" என்று வானத்தைச் சுட்டிக் காட்டிக் கூறவே, அசுவத்தாமாவும் கையில் மோதிரத்துடனே சூரியனைப் பார்த்தான்.

இந்தச் செயல் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாமல் நடந்தாலும், தூரத்தில் அரசவையில் இருந்தவர்களுக்கு வேறு பொருளுடையதாகப் பட்டது. மோதிரத்தைத் தொட்டுச் சூரியனைச் சுட்டிக்காட்டிச் சத்தியம் செய்து கொடுப்பது வழக்கம். "நீ சேனாதிபதியாகாமல் இருக்க வேண்டும்" என்று கண்ணன் சொல்லவும் உடனே அசுவத்தாமா மோதிரத்தைத் தொட்டுக் கதிரவனைக் காட்டி அந்தப்படியே ஒப்புக்கொண்டான் என்று, பேசாத பேச்

சாகிய அந்தச் செய்கைகளுக்குப் பொருள் செய்து கொண்டார்கள் துரியோதனன் முதலியோர். "இனிமேல் இவனை நம்பிப் பயன் இல்லை", என்று தீர்மானித்தான் துரியோதனன்.

கண்ணன் பேசாத பேச்சினால் தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டான்.

* * *

**பார**தப் போரில் பதினேழு நாட்கள் சென்றன. துரியோதனன் தனக்குத் துணையாவாரை யெல்லாம் இழந்து தனித்து நின்றான். வீமசேனன் அவனைத் தொலைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு ஆரவாரம் செய் தான். துரியோதனனை நோக்கி, "இன்று கதாயுதப் போர் செய்வோம். என் கதையால் இடியுண்டு இன்று உன் உடலம் துடிக்கப் போகின்றது. உன் உயிர், துறக்கங் குடியேற முடிப்பதுவும் இன்றுதான். துரோபதை கூந்தல் முடிப்பதும் இன்றே. நான் நின் குருதிநீர் குடிப்பதுவும் இன்றே" என்று வீரவாசகம் இயம்பினான். இருவருக்கும் இடையே கதாயுதப் போர் தொடங்கியது.

இடியும் இடியும் எதிர்த்தாற் போலவும் மலையும் மலையும் முட்டினாற்போலவும் போரிட்டனர். அவர்கள் போரிட்டபோது கதைகளின் அரவம் மேலிட, 'ஆதவனும் தடுமாறி நின்றனன்; வானவர் தானவர் நா அடங்கினர்; மாமுனிவரொடு நாகர் அஞ்சினர்; நான்முகன் ஆதிய மூவரும் செயல் ஏது என நாடினர். அண்டகோளம் மூடியது.

இந்தச் சண்டையில் துரியோதனன் முடிமேல் வீமன் தாக்க, சிரம் பிளந்து ரத்தம் கக்க அவன் வீழ்ந்தான். அப்போது அவனை மோதாமல், "நீ இளைப்பாறு" என்று

சொல்லி, அவன் மீட்டும் எழுந்தவுடன் வீமன் போர் செய்யத் தொடங்கினன்.

இருவரும் இணை வேறு யாரும் இன்றிப் போர் செய்யும்போது, வீமன் சிறிது இளைப்பான் என்று தோற்றியது. அங்கே அருகில் இப் போரைக் கவனித்துக்கொண்டிருந்த அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி, "வீமன் தளர்கின்றான். இனி என்ன செய்வது?" என்று பரிவுடன் கேட்க, "அப்பா அர்ஜுனா, இந்த இருவரில் வீமன் பலவான்; துரியோதனன் போர் முறையிலே வலியவன். இருவரும் ஆயிர நாள் மலைந்தனராயினும் தோல்வியுற மாட்டார்கள். வீமன் வெல்ல ஒரு வழி உண்டு. அதை நான் இயம்புதல் தகாது" என்றான். அர்ஜுனன் பின்னும் வேண்ட, "வீமன் தன் கதையினால் துரியோதனன் துடையில் அடித்தால் அவன் உலைவான். இதை வாயால் வெளிப்படையாகச் சொல்லுதல் இங்கிதமே அல்ல; ஓர் உரை கூறில் வஞ்சகமாம்" என்று கூறினான். அதைக் கேட்ட அர்ஜுனன் என் செயலாம் என்று யோசித்துக் கண்ணன் உள்ளம் உணர்ந்து, குறிப்பினால் இதனை வீமனுக்கு உணர்த்தலானான். வீமன் தன்னைப் பார்க்கும்படியாக நின்று தன் கையைத் துடையின்மேல் தட்டிக் காட்டினான். அது போரை வியக்கும் குறிப்புப் போலத் தோற்றினாலும், கண்ணன் கூறிய உண்மையைப் புலப்படுத்தும் பேசாத பேச்சாக உதவியது.

குறிப்பை வீமன் உணர்ந்துகொண்டான்.

**ஞான பண்டிதன் வாயு குமாரனும்**
**நார ணன்பணி யால்இளை யோன்மொழி**
**மோன வண்குறி தான்உண ரா, எதிர்**
**மோதினான் கதை பூபதி ஊருவின்.**

[வாயுகுமாரன் - வீமன். இளையோன் - அர்ச்சுனன். மோனவண்குறி - மௌனமான குறிப்பு. பூபதி - துரியோதனன். ஊரு – துடை.]

ஒரு முறை துடையில் அடித்தபோது துரியோதனன் அவ்வடி படாதவாறு தப்பினான்; ஆயினும் மீண்டும் வீமன், துடையைக் கதாயுதத்தால் எறிந்து பிளக்கவே துரியோதனன் வலியிழந்தான்.

இங்கும் கண்ணன் குறிப்பினாலே காரியத்தைச் சாதிக்கும் தந்திரத்தை மேற்கொள்ளச் செய்தான்.

பேசுகின்ற பேச்சு எங்கே பயன்படவில்லையோ, எங்கே உசிதமற்றதென்று தெரிகிறதோ, அங்கே பேசாத பேச்சுத் துணை நிற்கின்றதென்பதை இந்த மூன்று நிகழ்ச்சிகளும் விளக்குகின்றன.

# அழிந்த கண்

**வ**த்தவ நாட்டு மன்னனாகிய உதயணன் பகைவருடைய சூழ்ச்சியால் சிறைப்பட்டான். அவந்தி நாட்டு அரசனாகிய பிரச்சோதனன் அவனைச் சிறையிலிட்டான்.

உதயணனுக்கு உயிரினும் சிறந்தவர்களாக நான்கு நண்பர் இருந்தனர். அவர்களுள் மதியினாலும் ஆற்றலாலும் சிறந்தவன் யூகி என்பவன். அவன் தன் தோழனும் மன்னனுமாகிய உதயணன் சிறைப்பட்டதை அறிந்து எவ்வாறேனும் அவனை விடுவிக்க எண்ணித் தந்திரம் பல புரியலானான். தன்னைச் சேர்ந்த பலரை வெவ்வேறு உருவத்தோடு அவந்தியின் ராஜதானி நகரமாகிய உஜ்ஜயினியில் இருக்கச் செய்து, தான் பேய் பிடித்தவனைப் போல நடித்துத் தெருக்களின் வழியே திரிந்து வந்தான்.

ஒரு நாள் பட்டத்து யானைக்கு மதம் கொள்ளும்படியான உணவை ஊட்டி, அதை மதம் பிடித்து உழலச் செய்தான் யூகி. அரசனாகிய பிரச்சோதனன் அதனை அடக்குவதற்கு எத்தனையோ முயற்சிகளைச் செய்தும் இயலாமல் அது நகரத்தை அழிக்கலாயிற்று. யானை வீணைக்கு அடங்கும் என்பதை உணர்ந்த பிரச்சோதனன், மதகரியை அடக்கும் வீணைப் புலமை உதயணனிடம் இருப்பதைத் தெரிந்து; அவனை விடுவித்து, யானையை அடக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அவ்வாறே உதயணன் தன் வீணைத் திறத்தால் யானையைப் பணிய வைத்தான். அது முதல் பிரச்சோதனன் உதயணன்பால் பெருமதிப்பு வைத்து அவனுக்கென்று தனி மாளிகை நிருமித்து உதவி,

தன் மகளாகிய வாசவதத்தைக்கு யாழ் கற்றுக்கொடுக்கும் படி செய்தான். உதயணன் அவ்வாறே வாசவதத்தைக்கு வீணை கற்றுக் கொடுத்து வந்தான். அழகுடைய அக் காரிகையும் வீரமுடைய அக் காளையும் ஒருவரை ஒருவர் விரும்பலாயினர். இருவரிடையே காதல் முளைத்து வளர்ந்தது.

தன் தோழனை விடுவிக்க வேண்டும் என்று தீர்மானித்தான் யூகி. ஊரினர் யாவரும் நீர் விழாக் கொண்டாட நதிக்குப் போயிருந்த சமயத்தில் ஊருக்குத் தீ வைத்து மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கினான். அக் குழப்பத்திடையே உதயணனை வாசவதத்தையோடு யானை யொன்றின் மேல் ஏறி விரைவாகப் புறப்படச் செய்து, தான் பின் வருவதாகச் சொல்லி அனுப்பினான்.

உதயணன் வாசவதத்தையோடு புறப்பட்டு மிக்க விரைவாகப் பிரயாணம் செய்து, நண்பருள் ஒருவனாகிய உருமண்ணுவா என்பவன் இருந்த சயந்தி நகரத்துக்குச் சென்றான். அங்கே யூகியை யொழிந்த மற்ற நண்பர்களும் ஏவலரும் வேண்டியன செய்ய, தன் அருமைக் காதலியுடன் இன்பம் நுகர்ந்து தங்கியிருந்தான்.

அவன் நாட்டை ஆருணி என்பவன் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்தான். உதயணனுடைய சகோதரர்களாகிய பிங்களன், கடகன் என்பார் எங்கோ மறைந்திருந்தனர். தன் நண்பனாகிய யூகி எங்கே எவ்வாறு இருக்கிறான் என்பதையே உதயணன் அறியான். இந்த நிலையில் தன் கடமைகளை யெல்லாம் அறவே மறந்துவிட்டு, தந்தையால் கண்டிக்கப்படாமல் மனம்போன போக்காக வாழும் பிள்ளையைப் போலச் சிற்றின்ப நுகர்ச்சியிலே அவன் ஈடு

பட்டிருந்தான். இது கண்ட அவன் நண்பர்கள் வருந்தி ஞலும், ஒரு வழியும் செய்ய இயலாமல் வாளா இருந் தனர்.

*　　　　*　　　　*

யூகி தான் செய்யவேண்டிய காரியங்களை யெல்லாம் நன்கு முடித்துக்கொண்டு பிறர் அறியாவாறு உஜ்ஜயி னியை விட்டுப் பொறியினுல் இயங்கும் ஒரு வண்டியில் ஏறிப் புறப்பட்டான். உதயணனிடத்தும் வாசவதத்தையி னிடத்தும் அன்புடைய தவமகளாகிய சாங்கியத்தாய் என் பவளையும் தன்னுடன் அழைத்து வந்தான். நெடுந் தூரம் பிரயாணம் செய்து, இடவகன் என்னும் நண்பன் வாழும் புஷ்பகம் என்ற நகரத்தை வந்தடைந்தான். அங்கே இட வகனைக் கண்டு, உஜ்ஜயினியிலிருந்து உதயணனை வெளிப் படுத்திய செயலை விரிவாகக் கூறி, " உதயணன் வாசவ தத்தையுடன் பத்திராவதி என்ற யானையின் மீதேறிப் புறப்பட்ட பிறகு நிகழ்ந்தவற்றை நீ சொல்வாயாக " என்று கேட்டான். இடவகன் சொல்லத் தொடங்கினுன்.

" பத்திராவதி ஐந்நூறு காவதம் ஓடிப் பிறகு ஆற்ரு மல் ஒரு பாலை நிலத்தில் உயிரை விட்டது. அப்பால் உதய ணனும் பிறரும் நடக்கலாயினர். பகற்காலம் முழுவதும் ஒரு முள்ளிலவந் தோப்பில் தங்கியிருந்தனர். உதயண னுடன் வந்த வயந்தகன் துணைப் படைகளை அழைத்துச் செல்லும் பொருட்டு இங்கே வந்தான். உதயணனும் வாசவதத்தையும் தோழி காஞ்சனையும் தனியே இருந் தார்கள். இரவு முழுவதும் அங்கே இருந்தனர்.

" சூரியன் உதயமாயிற்று. காட்டில் வாழும் சவரரும் புளிஞருமாகிய கொடியவர்கள் வேற்று மனிதர்கள் வந் திருக்கிருர்க ளென்பதை அடிச் சுவடுகளால் அறிந்து

தொடர்ந்துவந்து உதயணனைச் சூழ்ந்துகொண்டனர். அவனோடு போர் செய்ய ஆரம்பித்தார்கள். உதயணன் வாசவதத்தையைக் காஞ்சனையோடு ஓரிடத்தில் நிறுத்தி விட்டு, அம் மறவரை எதிர்த்து நாற்பத்தொன்பது பேரை அம்புக்கு இரையாக்கினான். எஞ்சி யிருந்தவர்கள் யாவரும் போரிடுதலை நிறுத்திவிட்டு அந்தத் தோப்பின் நாற்புறத்திலும் பெரிய தீயை மூட்டிவிட்டு ஓடிப் போனார்கள்."

இடவகன் இப்படிச் சொல்லி வருகையில், உத யணனைச் சூழத் தீ வைத்தார்கள் என்று சொல்லி முடித்தானோ இல்லையோ, கேட்டுக்கொண்டிருந்த யூகி திடீரென்று மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான்.

உதயணன் எரியிடையே அகப்பட்டான் என்ற செய்தி யூகியின் உணர்வைப் போக்கியது. அவ் விருவரிடையே அத்தகைய அன்புப் பிணைப்பு இருந்தது. இடவகன், "உதயணன் உயிருடன் இருக்கின்றான் என்று முதலில் கூறாமல் கதையை அடிமுதல் சொல்லிவந்தது பிழை" என்று நொந்துகொண்டு, யூகிக்குச் சைத்தியோப சாரங்களைச் செய்து தெளிவித்தான். தெளிவித்தவுடன், "உதயணன் வாசவதத்தையுடன் சுகமாக இருக்கிறான்" என்பதைக் கூறிப் பழங் கதையை விட்ட இடத்திலிருந்து தொடங்கினான்.

"மீட்டும் உதயணனை வேடர் கூட்டம் வளைந்து நின்றது. அப்போது நாங்கள் படையுடன் செல்லவே, அவர்கள் அஞ்சி ஓடினர். நாங்கள் நம் மன்னனைச் சயந்தி நகருக்கு அழைத்துவந்து வாசவதத்தைக்கும் அவனுக்கும் திருமணம் நிகழ்த்தினோம். இப்பொழுது அவ்விருவரும் இன்ப மயமான உலகத்தில் வாழ்கிறார்கள். சூரிய

சந்திரர் உதயமாவதும் அஸ்தமிக்கிறதும் அவர்களுக்குத் தெரிவதில்லை; தன் நாட்டை ஆருணி கைப்பற்றிக் கொண்டதையும் உதயணன் மறந்தான்; உயிரைப்போன்ற தம்பியரைப் பற்றிய நினைவே இல்லை. இந்திர பதவியைப் பெற்ற நகுஷன் எப்படி இந்திராணியின் சுகபோகத்துக்காகப் பறந்தானே, அப்படி ஆர்வம் மீதூர வாசவதத்தையுடன் இன்புற்றிருக்கிறான். அவனைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பமே கிடைப்பதில்லை. நாங்கள் என்ன செய்வோம்!'' என்றான்.

இப்படி இடவகன் முடித்ததைக் கேட்ட யூகி புன்னகை பூத்து, "பாவம்! எவ்வளவோ துன்பங்களுக்கு ஆளான நம் அரசர் பெருமான் கொஞ்ச காலம் இப்படியே இன்பத்தில் ஆழ்ந்து கிடக்கட்டும். அதனால் குற்றம் ஒன்றும் இல்லை!'' என்று சொல்லி அயலில் இருந்த யாவருக்கும் ஒவ்வொரு வேலையைச் சொல்லி அனுப்பினான். பிறகு சாங்கியத் தாயைத் தனியே அழைத்து, "தாயே, உதயணனை இனிமேல் பாதுகாப்பது உம்முடைய கடமையாகும். அவன் இப்போது காமமென்னும் சேற்றுள் ஆழ்ந்திருக்கிறான். அவனையும் வாசவதத்தையையும் பிரிக்க வேண்டும். அவலை உண்டு நான் இறந்துவிட்டதாக அவனுக்குத் தெரிவிக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் அவனுக்கு ஊற்றம் உண்டாகும். காம உணர்ச்சி கழல, என் துணையும் இல்லாமையால், இனித் தானே முயல வேண்டும் என்ற உணர்ச்சியைப் பெறுவான். இப்படிச் செய்தாலன்றி அவனை வழிக்குக் கொண்டு வருவது அருமை'' என்று கூறி, மேற்கொண்டு நடக்கவேண்டிய முறைகள் இன்ன இன்னவென்று தன் நண்பர்களுக்கும் தெரிவித்தான்.

பிறகு, அவலை உண்டு விக்கி இறந்து பட்டவனைப் போலக் கிடந்தான். முன்னே தீர்மானம் செய்தபடியே இடவகனும் பிற உயிர் நண்பரும் யூகி இறந்துபோனதற்கு வருந்துபவர்போல வருந்தி அழுது, "மெய்ஞானியாகிய இவன் உடலைச் சுடுதல் தகாது. கங்காநதியில் ஜல சமாதி செய்துவிடவேண்டும்" என்று சொல்லிப் போக்குக் காட்டி யூகியை மறைத்து வைத்தனர்.

சாங்கியத்தாய் மேலே நிகழ வேண்டியவற்றைச் செய்ய எண்ணி உதயணனைக் காணும் பொருட்டுச் சயந்தி நகரத்துக்குச் சென்றாள். அங்கே உதயணனைக் கண்டு அவனால் உபசரிக்கப் பெற்றாள்.

* * *

உதயணன் அவளை நோக்கி, "உஜ்ஜயினியை விட்டு நீங்கள் வந்திருக்கிறீர்களே; என் உயிருக்குயிராகிய யூகி வரவில்லையா?" என்று கேட்டான்.

யூகிக்கும் உதயணனுக்கும் உள்ள அன்பின் ஆழத்தை அத் தவ முதுமகள் உணர்ந்தவள். யூகி இறந்தான் என்பதை அவனுக்குத் தெரிவிக்கவேண்டும். அதைத் தெரிவித்தால் உதயணன் உடனே மனம் உடைந்து இறந்து பட்டாலும் படலாம். ஆனால் யூகி இறந்தான் என்பதைத் தெரிவித்தால்தான் மேலே காரியங்கள் ஒழுங்காக நடைபெற முடியும். இந்தத் தர்ம சங்கடத்தில் என்ன செய்வது?

உதயணன் கேட்ட கேள்விக்கு அவள் உடனே விடை கூறவில்லை. சிறிது நேரம் கழித்து, "நீ வாசவதத்தையுடன் புறப்பட்ட அன்று இரவு யூகி அங்கே எதிர்த்து வெல்ல வேண்டியவர்களையெல்லாம் வென்றுவிட்டு என்னையும் அழைத்துக்கொண்டு வந்தான். ஆனால் இடையே ஓரிடத்

தில், 'இங்கே வேடர்கள் இருக்கிறார்கள். நான் கவனிக்க வேண்டிய காரியங்கள் சில இருக்கின்றன. நீங்கள் முன்னாலே சென்று அரசனை அடையுங்கள். நான் பிறகு வருவேன்' என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டான்'' என்றாள்.

உதயணன் அது கேட்டு யூகி வருவான் என்று எதிர் நோக்கியிருந்தான். சாங்கியத்தாய் அந்தப்புரம் சென்று வாசவதத்தையைப் பார்த்து அன்போடு தழுவிக்கொண்டு உரையாடினாள். பிறகு அவளிடம் ரகசியமாக யூகி கூறிய வற்றைச் சொல்லி, ''நம் அரசன் தன் அரசுரிமையை எய்தி நிலையான இன்பத்தைப் பெற இத்தகைய தந்திரங்களை மேற்கொள்வது அவசியம்'' என்றாள். வாசவதத்தையும் முதலில் மயங்கினாலும், முடிவில் இன்பத்தைத் தருமென்ற துணிவினால் அவ்வாறே செய்ய உடன்பட்டாள்.

சாங்கியத்தாய் செய்யவேண்டிய ஒரு காரியத்தை இன்னும் செய்யவில்லை; யூகி இறந்தான் என்ற செய்தியை உதயணனுக்குச் சொல்லவில்லை. அவன் முன் வாய் திறந்து கூறுவது சாத்தியமாகத் தோன்றவில்லை. உதயணன் வேடர்களால் சூழப்பட்டான் என்ற செய்தியைக் கேட்ட மாத்திரத்திலே, மன வலியுடைய யூகி மயங்கி விழுந்ததை அவள் கண்ணாரப் பார்த்தவள் அல்லவா? துணிவும் மன வலியும் உடைய யூகியின் நிலையே அதுவானால் உதயணன் என்ன பாடு படுவானோ !

இவற்றையெல்லாம் எண்ணிய அத் தவ முதுமகள், 'இதற்கு என்ன செய்யலாம்' என்பதை யூகியினிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று நிச்சயித்தாள். அவன் மறைந்திருந்த இடத்தை நண்ணிச் சிக்கலான தன் நிலையைப் புலப்படுத்தினாள்.

யூகி பேசாத பேச்சினால் இந்தச் சிக்கலை விடுவிக்க எண்ணி, உதயணனைப் போலவே சித்திரம் ஒன்றை எழுதினான். அதில் நான்கு கண்கள் இருப்பதாக அமைத்து மேலே உள்ள ஒரு கண் அழிந்து மழுங்கியிருக்கும்படி வரைந்தான். அதைச் சாங்கியத்தாயிடம் கொடுத்து, "நீங்கள் வாய் திறந்து பேசவேண்டாம். மதி நிறைந்த மன்னனுக்கு முன் இதனைக் கொண்டு சென்று காட்டுங்கள்; போதும்" என்றான். அவள் அவ்வாறே அதனை எடுத்துச் சென்றாள்.

உதயணனும் வாசவதத்தையும் உல்லாசமாக வார்த்தையாடிக்கொண்டு ஓரிடத்தில் அமர்ந்திருந்தனர். அங்கே சென்று ஓவியத்தைச் சாங்கியத்தாய் காட்டினாள். அதைக் கண்டவுடன் உதயணன் அதன் அழகில் ஈடுபட்டு, மகிழ்ந்தான். உருவமெல்லாம் உலகில் உள்ள மக்களுக்கு ஏற்றபடி இருக்க, நெற்றியில் மாத்திரம் நான்கு கண்கள் இருந்தன. அவற்றிலும், மேலே இருந்த கண் மழுங்கியிருந்தது. "இது என்ன? மற்றவையெல்லாம் எழில் பொருந்தி விளங்க, இக்கண்கள் மாத்திரம் உலக இயல்புக்கு மாறுபட அமைந்துள்ளனவே?" என்று சிந்திக்கத் தொடங்கினான்.

பல கலை விற்பன்னனாகிய உதயணனுக்குச் சித்திரக் கலையின் நுட்பம் நன்றாகத் தெரியும். உள்ளூற ஒரு கருத்தை அமைத்து எழுதும் பாவ சித்திரங்களின் உயர்வையும் அவன் அறிவான். ஆகவே அந்த ஓவியம் எதையோ பேசாத பேச்சால் சொல்லுகிறது என்று தெளிந்தான். அதன் பொருள் யாது? - அவன் அறிவு படர்ந்தது.

உறுப்புக்களைப் போன்றவர்கள் உறவினர்கள்; உடம்போடு ஒன்றுபடாத உறுப்புக்கள். சுற்றத்தார் கால்களுக்குச் சமானம் ஆனவர்கள்; மனைவி தோளுக்கு ஒப்பான

வள்; மக்கள் பல்லுக்கு இணையானவர்கள்; தோழர் கண்ணைப் போன்றவர்கள்; ஏவலர் பாதங்களைப் போன்றவர்கள். இந்த முறையில் கண்களாகச் சொல்லப் பெறுபவர்கள் தோழர்கள்.

உதயணன் இந்தக் குறிப்பைச் சிந்தனை செய்தான். "இந்த உருவம் நம்மைப்போல இருக்கிறது. நம்முடைய தோழர் நால்வரும் நான்கு கண்கள். மேலே உள்ள கண் அழிந்திருக்கிறதே! நம் தோழர்களுக்குள் மேலான யூகிக்கு...." இப்படி ஓடின உள்ளம் திடீரென நின்றது. அதற்குமேல் அவனால் நினைக்க முடியவில்லை. கண் சோர்ந்து மெய்ம்மறந்து வீழ்ந்தான். அவன் மயங்கி விழுந்தது கண்டு அருகில் இருந்த வாசவதத்தையும் அவன் மார்பில் விழுந்து மயக்கம் அடைந்தாள்.

அப்பால் ஏவலாளரும் பிறரும் சைத்தியோபசாரம் செய்து அவ்விருவருக்கும் உணர்வு வரச் செய்தனர். "பேசாத பேச்சினால் புலப்படுத்தியதற்கே இத்துணைத் துயரம் அடைந்தானெனின், சட்டென்று வாயாற் கூறினால் உயிரே போயிருக்கும் போலும்! என்னே அன்பின் ஆற்றல்!" என்று சாங்கியத்தாய் வியந்தாள்.

பிறகு மெல்ல மெல்ல, அவல் தொண்டையில் சிக்கியதால் யூகி இறந்தான் என்ற செய்தியை உதயணன் உணர்ந்தான். தொடர்ந்து வாசவதத்தையைப் பிரியவும் நேர்ந்தது.

யூகி இப்படிப் பல சாமர்த்தியச் செயல்களைச் செய்தும் செய்வித்தும் இறுதியில் உதயணனை மீட்டும் வத்தவ தேசத்துக்கு அரசனாக்கி இன்புறச் செய்தான்.

சித்திரத்தால கருத்தைப் புலப்படுத்திய இந்த நிகழ்ச்சியைப் பெருங்கதை என்னும் தமிழ்க் காவியம் மிக அழகாக எடுத்துரைக்கின்றது.

# இரண்டு பொருள்

பேச்சில் வல்லவர்கள் சில சமயங்களில் இரண்டு பொருள் தோன்றும்படி பேசுவார்கள். தர்ம சங்கடமான நிலையில், இரண்டு கட்சிகளுக்கும் சமாதானமாகப் பேச வேண்டிய சந்தர்ப்பத்தில், இரண்டு வகையினரும் தம் கட்சிக்கு அநுகூலமென்று நினைக்கும்படியாகப் பேசுவது சில சாமர்த்தியசாலிகளின் இயல்பு.

இலக்கியத்தில் இரண்டு பொருள் படும்படியாகப் பேசுவதைச் சிலேடை என்று சொல்வார்கள். சிலேடை யணி என்பது ஓர் அலங்காரத்துக்குப் பெயர். ஒவ்வொரு பாட்டிலும் சிலேடை வரும்படியாக அமைத்து வெண் பாக்களால் பாடிய ஒருவகைப் பிரபந்தத்துக்குச் சிலேடை வெண்பா என்று பெயர். தெலுங்கில் ஒரே காவியம் ராமாயணமாகவும், பாரதமாகவும் இரு பொருள் தரும்படியாக அமைந்திருக்கிறது. ராகவ பாண்டவீயம் என்னும் அந்த நூலில் ஒவ்வொரு பாடலிலும் ராமாயண சம்பந்தமான பொருள் ஒன்றும் பாரத சம்பந்தமான பொருள் ஒன்றும் ஒருங்கே தோன்றும்.

காளமேகப் புலவர் சிலேடை பாடுவதில் வல்லவர். சமீப காலத்தில் ராமநாதபுரம் சம்ஸ்தானத்தில் புலவராக இருந்த வேம்பத்தூர்ப் பிச்சுவையர் என்பவர் சிலேடைப் புலி என்னும் பட்டம் பெற்றவர். ஒரே நாளில் பன்னி ரண்டு சிலேடைகள் பாடிப் பாஸ்கர சேதுபதி யரசரிடம் பரிசு பெற்றவர் அவர்.

பழங்காலப் புலவர்கள், பேசும்போதே சிலேடை நயம் தோன்றும்படி பேசுவார்கள். அந்தப் பேச்சின் சமற்காரத்தை அறிந்து தமிழ் மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

பேசாத பேச்சிலும் சிலேடை உண்டு. கேட்பதற்கு இது ஆச்சரியமாக இருக்கும். 'பேச்சே இல்லாதபோது, சிலேடை எங்கே வந்தது?' என்றுகூடத் தோன்றும். பேசாத பேச்சுக்குப் பொருள் இருக்கிறதல்லவா? ஒரு பொருள் தோன்றுமானால் இரு பொருளும் தோன்ற இடம் உண்டு.

இது சம்பந்தமாகப் பழைய கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஓர் ஊரில் சைகையினாலே உள்ளக் கருத்தைப் புலப்படுத்தும் நிபுணர் ஒருவர் இருந்தார். அவர் தம் கலையைப் பற்றிப் பிரமாதமாக அளந்துகொண்டே இருந்தார்; இறுமாப்பு மிகுந்தவராகிப் பிறரை மதியாமல் இருக்க ஆரம்பித்தார்.

அவர் செருக்கை எப்படியாவது அடக்கிவிட வேண்டுமென்று சிலர் எண்ணினார்கள். அவரோடு பழகுபவர்களால் ஒன்றும் செய்ய முடியாதாகையால், அயலூரிலிருந்து தக்க பேர்வழி யாராவது வந்தால், அவரைக் கொண்டு தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாமென்று தீர்மானித்து அதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்கள்.

ஒரு முரட்டு ஆசாமி அவ்வூருக்கு வந்து சேர்ந்தான். உருட்டலும் மிரட்டலும், வாயடி கையடியும், விதண்டா வாதமுமே அவனுடைய கலைத் திறமை. அவனால் என்

லோரையும் வெருட்டி அடித்துவிடும் ஆற்றல் அவனிடம் இருந்தது. அவன் ஒற்றைக் கண்ணன்.

அவனைக் கண்டவுடன், சைகைக் கலைஞரை அடக்க இவனே சரியான ஆயுதம் என்று அவ்வூரார் எண்ணி அவனுக்கு உற்சாகம் உண்டாக்கினர். "அவர் தமக்குத் தான் சைகை யெல்லாம் தெரியுமென்று கர்வம் பிடித்து அலைகிறார். நீ எப்படியாவது அவரை மடக்கினால் உனக்கு நல்ல பரிசு அளிப்போம்" என்று சொன்னார்கள்.

"அப்படியே ஆகட்டும்" என்று அவன் அபயம் தந்தான்.

"வெளியூரிலிருந்து ஒரு சைகை சாஸ்திரி வந்திருக்கிறார். அவர் நம்முடைய பாஷையே அறியாதவர். பல நாடுகளில் சென்று தம் கலைத் திறமையைக் காட்டிப் பரிசு பெற்றவர்" என்ற செய்தியை உள்ளூர்ச் சைகை சாஸ்திரியினிடம் ஒருவர் சொன்னார்.

"இந்த மூவுலகங்களிலும் எனக்கு மிஞ்சி எவனும் இல்லை. அப்படி இருந்தால் இங்கே வரச் சொல்லுங்கள், பார்க்கலாம். அவன் பல்லைப் பிடித்துப் பார்த்து விடுகிறேன்" என்று கலைஞர் பெருமிதத்தோடு கூறினர்.

இருவரும் சந்தித்தனர். பெரிய சபையின் நடுவிலே இருவரையும் உயர்ந்த ஆசனத்தில் அமரச்செய்து, பேசாத பேச்சில் வாதம் நடத்தும்படி வேண்டிக்கொண்டனர்.

இருவரும் உற்சாகமாகத் தலை நிமிர்ந்து வீற்றிருந்தனர். உள்ளூர்க் கலைஞரே முதலில் சைகை வாதத்தை ஆரம்பிக்கட்டும் என்று ஒற்றை விழிக் கலைஞன் தெரிவித்தான். அப்படியே அவர் தொடங்கினார். முதலில் ஒரு விரலைக் காட்டினார். அயலூரான் உடனே இரண்டு விரலை

நீட்டினான். அது கண்ட சைகை சாஸ்திரி மூன்று விரலை அவசரமாக நீட்டினார். எதிரே இருந்தவன் தன் கையால் ஓங்கி மேஜைமேல் ஒரு குத்துக் குத்தினான்.

மறுகணமே உள்ளூர்க் கலைஞர், "சபாஷ்!" என்றார். "உங்களைப் போல விஷயம் தெரிந்தவரை நான் பார்த்த தில்லை; மிகவும் சந்தோஷம்" என்று சொல்லி உபசார வார்த்தைகள் பேசினார். அவனோ ஒன்றும் பேசாமல் கனைத்துக்கொண்டு வெளியேறினான்.

சபையில் இருந்தவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அயலூர் மனிதன் எப்படியோ அவரை மகிழச் செய்து பாராட்டு வார்த்தையையும் பெற்றான் என்பதில் அவர் களுக்கு உண்டான ஆச்சரியம் எல்லை கடந்து சென்றது. தம் ஊர்க் கலைஞரை அணுகினார்கள். "சுவாமி, வந்த கலைஞர் எத்தகையவர்?" என்று கேட்டார்கள்.

"விஷயத்தை நன்றாகத் தெரிந்து கொள்கிறார். சுருக்கமாகப் பதில் சொல்லுகிறார். பேசாத பேச்சின் ரகசியத்தை அவர் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்" என்ற பதில் வந்தது.

"தாங்கள் என்ன சொன்னீர்கள்? அவர் என்ன சொன்னார்? தயைசெய்து எங்களுக்கு விளக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள்.

"நான் முதலில் கடவுள் ஒருவரே என்பதை ஒரு விரல் நீட்டிக் குறிப்பித்தேன். அவர் அதை ஒப்புக் கொண்டவரைப் போலத் தலை அசைத்து, ஒருவராக இருந் தாலும் சக்தி சிவம் என்று இரண்டாகப் பிரித்துச் சொல்ல லாம் என்பதை இரண்டு விரல் காட்டித் தெரிவித்தார் அப்படிப் பிரித்துப் பார்ப்பதானால் மும்மூர்த்திகள் என்று

சொல்லக் கூடாதா என்று மூன்று விரல் நீட்டிக் கேட்டேன். ஆயிரம் சொன்னாலும் முடிவில் ஒருவர் என்பதே சித்தாந்தம் என்பதை நான் வற்புறுத்துகிறேன் என்று கையால் மேஜைமேல் குத்திக் காண்பித்தார். உயர்ந்த தத்துவத்தைப் பேசாத பேச்சினால் நாங்கள் பேசினோம்" என்று அந்தக் கலைஞர் விளக்கினார்.

கேட்பவர்கள், "இவ்வளவு விஷயம் தெரிந்தவனா அந்த ஒற்றைக் கண் முரடன்!" என்று நினைத்து வியப்பு மேலிட்டு, நேரே அவனிடம் சென்று, "பெரிய ஆச்சரியமாக இருக்கிறதே! உன்னை அவர் வானளாவப் புகழ்கிறாரே! என்ன காரணம்?" என்று கேட்டார்கள்.

"உங்கள் முகத்துக்காகப் பார்த்தேன். இல்லாவிட்டால் அந்த மனுஷனை அங்கேயே சட்டினி பண்ணியிருப்பேன். முதலில் கொஞ்சம் வால் ஆட்டினான். அப்புறம் பயந்து நடுங்கிப் பல்லை இளிக்க ஆரம்பித்துவிட்டான்."

கேட்பவர்களுக்கு அது என்னவோ மூடு மந்திரமாக இருந்தது. "சபையில் அப்படி ஒன்றும் நடக்கவில்லையே! விஷயத்தை விவரமாக விளக்க வேண்டும்" என்றார்கள்.

"விளக்க வேண்டியது என்ன இருக்கிறது? அந்தக் குறும்புக்காரன் எடுத்ததும், 'உனக்கு ஒரு கண்' என்றான். எனக்குக் கோபம் வராதா? 'நீ இரண்டு கண்களை வைத்துக்கொண்டு என்ன சாதித்துவிட்டாய்?' என்று கேட்டேன். அவன் மறுபடியும், 'உனக்கும் எனக்கும் மூன்று கண்' என்றான். என்னால் சகிக்க முடியவில்லை. 'இப்படிப் பேசினால் பல்லை உடைத்து விடுவேன். ஜாக்கிரதை' என்று ஓங்கிக் குத்திக் காட்டினேன். அவன் அப்புறம் ஏன் பேசுகிறான்? வாலை மடக்கிக்கொள்ளும்

நாய் பல்லை இளிப்பதுபோல, கெக்கப்புக்கே என்று என்னவோ உளறினன்.''

அவனிடமிருந்து வந்த விளக்கத்தைக் கேட்டபோது அவர்கள் ஆச்சரியந்தான கொண்டார்கள்? வயிறு வெடிக்கச் சிரித்துத் தீர்த்தார்கள்.

பேசாத பேச்சில் இது ஒரு சிலேடை.

* * *

இலக்கியத்திலும் இப்படி ஒரு வரலாறு உண்டு. மூடர்களைப் பகடி பண்ணிப் பாடும் ஔவைப் பாட்டியைப் பற்றி எத்தனையோ கதைகள் தமிழ்நாட்டில் வழங்குகின்றன. அவைகளில் இந்தக் கதை ஒன்று.

ஓர் ஊரில் இரண்டு புலவர்கள் இருந்தார்கள். இரண்டு பேரும் நினைத்தமாத்திரத்தில் கவி பாடுவார்கள். அவர்களில் ஒருவர் அடக்கமானவர். மற்றொருவர் கர்வம் உள்ளவர்.

ஒரு நாள் ஔவைப்பாட்டி அந்த ஊருக்கு வந்தாள். அவளைச் சுற்றி ஜனங்கள் மொய்த்துக் கொண்டார்கள். தமிழ் படிப்பவர்களும் கூடினர்கள். முன்னே சொன்ன புலவர்களும் அவளைத் தரிசனம் செய்து கொண்டார்கள். மிடுக்குள்ள புலவர் அவளுக்குப் பக்கத்தில் எப்போதும் இருந்துகொண்டு தம்முடைய பிரபாவத்தையும் புலமையையும் அவள் காது கடுக்கும்படி சொல்லிக்கொண்டே இருந்தார். மற்றொரு புலவர் வயசில் இளைஞர். அவ் விளம் புலவர் பாட்டியினிடம் பயபக்தியாக நடந்து கொண்டார். அவள் ஏதாவது கேட்டால் விநயமாக விடை சொன்னர்.

பாட்டி மிகவும் கெட்டிக்காரி அல்லவா? இந்த இரண்டு புலவர்களையும் பார்த்தாள். மூத்தவர் தலைக்கிறுக்குப் பிடித்தவரென்பதையும், இளையவர் பணிவுடையவர் என்பதையும் உணர்ந்துகொண்டாள். நெட்டைப் புலவரை மட்டந்தட்ட வேண்டும் என்று தீர்மானம் செய்தாள்.

இருவரையும் அழைத்து, "நான் வாயினால் பேசாமல் என் உள்ளக் கருத்தைப் பேசாத பேச்சினால் வெளியிடுகிறேன். நீங்கள் அதை உணர்ந்து அதன் பொருளைப் பாட்டாகச் சொல்லுங்கள்" என்று சொல்லிச் சைகைகளால் புலப்படுத்தத் தொடங்கினாள்.

முதலில் வலது கை விரல்களைச் சேர்த்து ஒரு பக்கமாகச் சாய்த்துக் காட்டினாள்; பிறகு விரல்களை மடக்கிப் பிடித்துக் காட்டினாள்; பின்பு இரண்டு உள்ளங் கைகளையும் சேர்த்து விரல்களை விரித்துக் காண்பித்தாள். அப்பால் ஒற்றை விரலைக் காட்டிப் பின் ஐந்து விரல் நுனிகளையும் சேர்த்துக் காட்டினாள். "இந்தக் குறிப்புக்குப் பொருள் சொல்லுங்கள். பெரியவராகிய நீங்களே உங்கள் கவியை முதலில் சொல்லுங்கள்" என்று உத்தரவிட்டாள்.

பெரிய புலவர் யோசனை செய்தார். காதல் சம்பந்தமான காட்சி ஒன்று அவர் அகக்கண்ணில் தோற்றியது. பாட்டின் குறிப்புக்களில் ஒவ்வொன்றும் அந்தக் காட்சியின் பகுதியாகவே பொருள்பட்டது. பாட்டி கையை முதலில் காட்டினாள். பெண்களின் கண்கள் கையகலம் இருப்பதாகச் சொல்வது புலவர் மரபு. பாட்டி ஒரு பெண்ணைப் பற்றிப் பேசாமற் பேசுகிறாள் என்று எண்ணிய புலவர், அவள் கண் மிகப் பெரிது என்பதைச் சொல்வதாகப் பொருள் செய்துகொண்டார். "**இவ்வளவு கண்ணினாள்**" என்ற குறிப்பாகவே அது புலவருக்குப்

பட்டது. பிறகு கையைப் பிடித்துக் காட்டியபோது, அந்தப் பெண்ணின் இடை ஒரு கைப்பிடியளவுதான் என்று சொல்வதாக அர்த்தம் செய்தார். மற்றக் குறிப்புக்களுக்கும் இவற்ருேடு தொடர்புடைய பொருளைச் செய்துகொண்டார். "இவ்வளவு பெரிய கண்ணுடையவள். இவ்வளவு சிறிய இடையை உடையவள்; இவ்வளவு பருத்த தனத்தை உடையவள். அத்தகையவள் இப்படி ஒரு விரலைப்போல இளைத்துப் போனுள்; மன்மதன் விட்ட ஐந்து பாணங்களால் அப்படி ஆனுள்" என்று பாட்டி புலப்படுத்தினதாகப் புலவர் ஊகித்தார். உடனே பாட்டு வெளிப்பட்டது.

**இவ்வளவு கண்ணினுள் இவ்வளவு**
**சிற்றிடையாள்**
**இவ்வளவு போன்ற இளமுலையாள்—**
**இவ்வளவாய்**
**நைந்த உடலாள் நலமேவு மன்மதன்றன்**
**ஐந்துகணை யால்வாடி னுள்.**

பாட்டி காதில் பாட்டு விழுந்தது. உடனே, "எங்கே, உங்கள் பாட்டு?" என்று இளம் புலவரைப் பார்த்துக் கேட்டாள். பெரிய புலவருக்கு, "நம்முடைய பாட்டைக் கேட்டு ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே!" என்று கோபம் வந்தது. பாட்டியை அவர் என்ன செய்யக்கூடும்?

இளம் புலவர் உள்ளம் சிற்றின்பத்திலே செல்லவில்லை. வயசான பாட்டி பேரின்பத்தைத்தான் சொல்வாளென்று அவர் ஊகித்தார். அதற்கு ஏற்றபடியே அவர் கற்பனை சென்றது. பெரிய புலவருக்கு எந்தக் கை ஒரு பெண்ணினது கண்ணின் விசாலத்தைக் குறிப்பதாகத் தோற்றியதோ அதே கை, "பிச்சை இடுங்கள்"

என்று சொல்வதாக இளம் புலவருக்குப் பட்டது. அவருக்குச் சிற்றிடையை நினைக்கும்படியாக இருந்த கைப்பிடி இவருக்கு, "தர்மத்தைக் கடைப்பிடியுங்கள்" என்று உபதேசிப்பதாகப் புலப்பட்டது. இப்படியே, இரு கையையும் சேர்த்து விரித்த குறிப்பில், "இவ்வளவு சோறுவது போடுங்கள்" என்ற அர்த்தத்தையும், ஒற்றை விரலில் "தெய்வம் ஒன்றே" என்ற பொருளையும், ஐந்து விரல் நுனிகளைச் சேர்த்துக் காட்டின குறிப்பில், "ஐம் புலன்களாலும் செய்யும் பாவங்கள் போய்விடும்" என்பதையும் தெளிந்தார். எல்லாவற்றையும் சேர்த்துப் பாட்டாக அமைத்தார்.

**ஐயம் இடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்**
**இவ்வளவே னும்அனத்தை இட்டுண்மின்—தெய்வம்**
**ஒருவனே என்ன உணரவல் லீரேல்**
**அருவினைகள் ஐந்தும் அறும்.**

[ஐயம் - பிச்சை. வல்லீரேல் - சாமர்த்தியம் உடையவர்களாக இருந்தால். அருவினைகள் ஐந்தும் - ஐம்பொறிகளாலும் உண்டாகும் ஐந்து பாவங்களும்.]

இளம் புலவர் பாடலைச் சொல்லி முடித்தாரோ இல்லையோ, "நன்று! நன்று! இதுதான் நான் நினைத்தது" என்று ஔவை மகிழ்ச்சியோடு கூறினாள்.

நெட்டைப் புலவர் உளங்கருகி முகங்கருகி நின்றார்.

# இங்கித அழைப்பு

**வி**க்கிரமாதித்த அரசன் ஒரு சமயம் தன் மந்திரியாகிய பட்டியுடன் காடாறு மாசம் சென்றபொழுது ஏதோ ஓர் ஊரில் தங்கினான். அங்கே உள்ள தடாகத்தில் நீர் அருந்தி விட்டு வெயிலுக்கு ஆற்றாமல் அருகிலுள்ள மரத்தின் நிழலில் இளைப்பாறத் தொடங்கினான். பட்டி அமர்ந்திருக்க, விக்கிரமாதித்தன் அவன் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தான்.

அப்பொழுது அந்தக் குளத்தில் நீராடும் பொருட்டு ஒரு பெண் பல்லக்கில் ஏறி வந்தாள். அவளுடன் பல தோழிமார் வந்தனர். யாரோ பெரிய செல்வருடைய மகளாக இருக்க வேண்டுமென்று எண்ணும்படியான நிலையில் அவள் வந்து இறங்கினாள். குளத்தில் இறங்கி நீராடும்பொழுது கரையில் மரத்தடியில் இருந்த விக்கிரமாதித்தன், பட்டி என்னும் இருவரையும் கண்டாள். பேரழகனாகிய விக்கிரமாதித்தனுடைய அங்க லாவண்யத்தில் அவள் கண்களும் கருத்தும் சிக்கிக் கொண்டன. அவனுடைய திருமேனி அழகு முழுவதையும் கண்களால் பருகினாள்.

அவள் உள்ளத்தே விக்கிரமாதித்தன்பால் எழுந்த ஆசை தீயைப்போலப் பொங்கிக் குமுறியது. துணிவும் சாமர்த்தியமும் உடைய அந்த மங்கை விக்கிரமாதித்தன் தன்னைப் பார்க்கும்படியான இடத்தில் நின்று அங்கிருந்த வாடாமல்லிகை மலரை எடுத்துத் தன் மார்பில் வைத்துக் கொண்டு, தன் காலின்மேல் போட்டாள். பிறகு மணலைக்

குவித்து அதன்மேல் ஓர் ஓட்டாஞ் சில்லை வைத்து அதன் எதிரே தன் தலையிலிருந்து ஒரு மயிரை அறுத்துச் சுருட்டி வைத்தாள். அவற்றைக் கண்ணால் காட்டிய படியே மருண்ட நோக்கோடு விக்கிரமாதித்தனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். அப்பால் பல்லக்கேறித் தன் தோழிமாருடன் சென்றுவிட்டாள்.

முதலில் அந்த நங்கையைக் கவனிக்காமல் இளைப் பாறியிருந்த விக்கிரமாதித்தன் சிறிது நேரங் கழித்து அவளைப் பார்த்தான். அவள்தான் அவன் கண்களை இழுத் தாளே! முதலில் அவள் ஏதேனும் பூஜை செய்யப் போகிறாளோ என்று நினைத்தான். பூவைக் காலிலே போட்டுக்கொண்டா பூஜை செய்வார்கள்? ஓட்டாஞ்சில் பூஜைக்கு உபயோகமாகும் பண்டமா? மணலைக் குவிக்கக் காரணம் என்ன? எதற்காக மயிரைச் சுருட்டி வைத் தாள்? பேய் ஓட்ட வந்தவளா? அன்றிப் பித்துப் பிடித்தவளா?

அரசனுக்கு ஒன்றும் விளங்கவே இல்லை. 'இவள் பித்துப் பிடித்தவளாக இருந்தால் கட்டுக் காவல் இல் லாமல் இருப்பாளா? வாய் பேசாமல், பிதற்றாமல் மௌனமாக இருக்க முடியுமா?' என்று யோசித்தான். 'அருகில் அறிவிற் சிறந்த பட்டி இருக்கும்போது அவனுக்குச் சொல்லாமல் என்ன யோசனை வேண்டியிருக் கிறது!' என்று நினைந்து, உடனே அவனிடம் எல்லா வற்றையும் சொன்னான்.

பட்டி கேட்டுப் புன்முறுவல் பூத்தான். "உங்களுக்கு எங்கே போனாலும் இன்ப வாழ்வு காத்திருக்கிறது. அந்தப் பெண் உங்களிடத்தில் வைத்திருக்கும் ஆசையை

உணர்த்தி, நீங்கள் என் வீட்டிற்கு வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறாள்" என்றான்.

"அவள் ஒன்றும் பேசவில்லையே! ஊமையைப் போல அல்லவா இருந்தாள்? மலரையும் மணலையும் மயிரையும் கொண்டு விஷமம் செய்தாளே, அது எதற்காக?"

"அதுதான் அவள் பேசாமல் பேசின பேச்சு. உங்களுக்கு அழைப்பு அனுப்பினாள். நீங்கள் ஏற்றுக் கொண்டு அவள் விருப்பத்தை நிறைவேற்றவேண்டும்."

"அவள் எங்கே இருக்கிறாள்? அவளை எப்படிக் கண்டுபிடிப்பது?" என்று ஆவலுடன் அரசன் கேட்டான்.

"எல்லாவற்றையும் அவளே சொல்லியிருக்கிறாள். அவள் பெயர் தன அமராவதி. அவள் ஊர் காலிங்கப் பட்டணம். அவள் தகப்பனார் பெயர் மயிர் மாணிக்கம் செட்டியார். அவள் வீட்டுக்கு எதிரில் ஓட்டு வில்லை போட்ட வீடு இருக்கிறது. அங்கே உங்களை வரும்படியாக அழைப்பு விடுத்திருக்கிறாள்" என்றான் பட்டி.

"இதென்ன அப்பா, ஜோசியம் சொல்கிற மாதிரி அடுக்கிக்கொண்டு போகிறாயே! உனக்கு அவளை முன்பே தெரியுமா? உள்ளதைச் சொல்லிவிடு" என்று அரசன் கேட்டான்.

"அவள் முதலில் மலரை எடுத்துத் தனத்தில் வைத்துக்கொண்டாள். அதனால் தன அமராவதி என்ற தன் பெயரைத் தெரிவித்தாள். அந்த மலரைக் காலிலே போட்டுக்கொண்டதால் அவள் இருப்பது காலிங்கப் பட்டணம் என்பதை உணர்த்தினாள். மணலைக் குவித்து மேலே ஓட்டை வைத்தது, தன் வீட்டுக்கு எதிரில் உள்ள

வீடு ஓட்டு வில்லை வீடென்று குறிக்கவும், மயிரைச் சுருட்டி வைத்தது தன் தந்தை மயிர்மாணிக்கம் செட்டி என்று புலப்படுத்தவும் ஆகும்" என்று அமைச்சன் அந்தப் பேரழகியின் பேசாத பேச்சுக்குப் பொருள் விரித்துரைத்தான்.

உடனே அவ்விருவரும் அந்தணர்களைப் போல வேஷம் புனைந்துகொண்டு காலிங்கப் பட்டணத்துக்குப் போனார்கள். அந்தப் பெண்ணின் வீட்டைக் கண்டு பிடித்துச் சென்று மயிர்மாணிக்கஞ் செட்டியாரைக் கண்டு தாங்கள் யாத்திரிகர்கள்என்றுதெரிவித்துக்கொண்டார்கள். செட்டியார் அவர்களை உபசரித்து, "இங்கே இருந்து விட்டுப் போங்கள். நீங்கள் விருந்து சமைத்து உண்ண அரிசி பருப்புத் தருகிறேன்" என்று சொல்லி ஏவலாளர் களிடம் அவ்வாறு கொடுக்கச் சொன்னார். ஏவலாளர்கள் வீட்டுக்குள் சென்று செட்டியார் கருத்தைத் தெரி விக்கவே, அங்கிருந்த தன அமராவதி அரிசி பருப்பு முதலியவற்றோடு இடையே ஒரு கரும்புத் துண்டத்தையும் வைத்து அனுப்பினாள்.

அவற்றைப் பெற்றுக்கொண்ட இருவரும் புறத்தே சென்று, வாங்கிவந்த பண்டங்களைப் பார்த்தபோது, கரும்புத் துண்டத்தையும் கண்டார்கள். பட்டி, "அரசே, இந்தப் பெண்மணி மிகவும் சாமர்த்தியசாலி; நம்மை இன்னாரென்று தெரிந்துகொண்டு மற்றொரு செய்தியை அனுப்பியிருக்கிறாள். தன்னுடைய காரியத்தைச் சாதித் துக்கொள்ள ஒரு தோழி உண்டென்பதைக் காட்டியிருக் கிறாள். கரும்பினியாள் என்ற பெண் அவள் உயிர்த் தோழியாக இருப்பதை இந்தக் கரும்பு புலப்படுத்து கிறது. இனி அவளைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்"

என்று சொல்லி, அவ்வாறே அத்தோழியைக் கண்டு பிடித்தார்கள். பிறகு பல பல தந்திரங்கள் செய்து வணிகர் மகளாகிய அமராவதியை அணுகி இன்புற்று விக்கிரமாதித்தன் தன் ஊருக்கு அழைத்துச் சென்றான்.

விக்கிரமாதித்தன் கதையில் இது ஒரு வரலாறு. காதல் கொண்ட மங்கையர் தம் கருத்தை இங்கிதத்தால் வெளிப்படுத்தும் முறையை இந்தக் கதை சொல்கிறது. பழம் பாடல்களில் இத்தகைய இங்கிதக் காட்சிகள் வருகின்றன.

* * *

காதலனும் காதலியும் இன்னும் மணந்துகொள்ளவில்லை. பூம்புனத்திலே சந்தித்து இன்புறும் வழக்கத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். வழக்கம்போல ஒரு நாள் காதலன் காதலியைக் காண வந்தான். அன்று அவள் வீட்டிலிருந்து பலர் அவளுடன் வந்திருக்கிறார்கள். இனிமேல் அவள் அந்தப் புனத்துக்கு வரமாட்டாள். ஆகவே காதலன் அவளைப் பகற்காலத்திலே அங்கே வந்து கண்டு செல்லும் காரியம் இனி நடக்காது.

அவனோ வந்துவிட்டான். யார் யாரோ அங்கே இருப்பதைக் கண்டு, அங்கே தற்செயலாக வந்தவனைப் போல நிற்கிறான். அவள் மார்பு படபடக்கிறது. நாளைக்கு இங்கே வந்து ஏமாந்து போவாரே என்று எண்ணுகிறாள். "இனிமேல் ராத்திரி காலத்தில் வந்தால் சந்திக்கலாம்" என்று அவனுக்குச் சொல்லவேண்டும். வாய் திறந்து சொல்லுவதென்பது நடக்கிற காரியமா ?

அறிவுமிக்க அம் மங்கை சட்டென்று அருகே கிடந்த தாமரை மலரை எடுத்தாள். அது மலர்ந்து விரிந்

திருந்தது. அதன் இதழ்களைச் சேர்த்துக் கூப்பியபடியே, தற்செயலாகத் திரும்புபவளைப் போலத் தன் காதலன் மேல் ஒரு கணம் கண்ணை ஓட்டினாள். அவனும் தெரிந்து கொண்டான். "தாமரை மலர் குவியும் காலத்தில் வா" என்ற காதற்கட்டளையே அந்தப் பேசாத பேச்சின் பொருளென்பதைத் தெளிந்தான். குவிந்த மலரைக் கண்டு அவன் உள்ளம் மலர்ந்தது.

**கணவர்க்கு வந்தெய்தும் காலம் அவர்முன்**
**உணர்வுசெய மாட்டாது உணர்ந்து—துணர்மலிந்த**
**தாளார் முளரித் தடமலரைக் கூப்பினாள்**
**வாளார் திருநெடுங்கண் மாது.**

[அவர் - பக்கத்தில் இருப்பவர்கள். உணர்வு செய - உணர்த்த. துணர்-கொத்து. தாள்-காம்பு. முளரி-தாமரை. கூப்பினாள் - மூடினாள். வாள்ஆர் - ஒளியையுடைய.]

* * *

மற்றொருத்தி இதே நிலையில் இருந்தாள். அவளும் மாலைக் காலத்தில் கதிரவன் அஸ்தமனமாகும் சமயத்தில் தன் காதலனை வரும்படி சொல்ல எண்ணினாள். சூரியனைப் பார்த்து, மேற்குத் திசையைப் பார்த்தாள். "கதிரவன் மேல் கடலில் குளிக்கும் சமயத்தில் வா" என்பது அந்தக் குறிப்பின் பொருளென்று காதலன் தெரிந்து கொண்டான். அவன் உயிர் தளிர்த்தது. அவள் செய்த அந்தக் குறிப்பு அவனுடைய தளர்ந்த உயிருக்குப் பாதுகாப்பாயிற்று.

**காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்**
**பேதையர் ஆயம் பிரியாத—மாதர்**
**படரிருள் கால்சீக்கும் பகலவனை நோக்கிக்**
**குடதிசையை நோக்கும் குறிப்பு.**

[பேதையர் ஆயம் - மகளிர் கூட்டம். மாதர் - காதலி. படர் இருள் கால் சீக்கும் பகலவனை-படருகின்ற இருட்டைத் துடைக்கும் சூரியனை. குடதிசையை - மேற்குத் திக்கை. குறிப்பு - காவல் புரிந்தது.]

* * *

அவள் யாழில் வல்லவள். மிகவும் அருமையாக யாழிசையும் தீங்குரலும் இழைந்துவரப் பாடுவாள். பலர் கூடியிருக்கும் இடத்தில் இனிமை கொப்புளிக்கப் பாடிக் கொண்டிருந்தாள். அந்தக் கூட்டத்தில் அவளுடைய காதலனும் அமர்ந்திருந்தான். அவன் கண்கள் காதலை வெளிப்படுத்தின. அது கண்ட அவள் உள்ளத்தும் காதல் உணர்ச்சி பொங்கியது. அவனோடு அளவளாவ வேண்டும் என்று எண்ணினாள்.

கானமுதத்தைப் பொழிந்து கொண்டு வரும்பொழுது ரசிகர்கள், 'அடுத்தபடி இது பாடுவாள், இது பாடுவாள்' என்று பேசிக்கொள்கிறார்கள். ஒவ்வொரு பண்ணின் ஆரோகண அவரோகண கதிகளிலும் அவள் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்து வந்தாள். காதலனைக் கண்டவுடன் அவள் குறிஞ்சிப் பண்ணை எடுத்துப் பாட ஆரம்பித்தாள். "இதென்ன, இதைத் திடீரென்று எடுத்துப் பாடுகிறாளே!" என்று அருகில் இருந்தவர்கள் யோசித்தார்கள். அவர்கள் அதை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் பண்ணும் அதில் அமைந்த பாட்டும் அவர்கள் உள்ளத்தைக் குழைவிக்காமல் போகவில்லை.

அந்த மங்கைநல்லாள் குறிஞ்சியைத் தொடங்கும் பொழுது தன் கண் பார்வையைக் காதலன்மேல் வீசினாள்; அதை முடிக்கும்போதும் அப்படியே செய்தாள்.

குறிஞ்சிப்பண் நடு யாமத்துக்கு உரியது; காதலர் உறவு செய்து ஒன்றுபடும் திணையாகிய குறிஞ்சிக்கு உரியது. அதனை அவள் எதிர்பாராதபடி பாடியதற்குக் காரணம் மற்றவர்களுக்கு விளங்கவில்லை. அவளது கண் வீச்சிலே குளிர்ந்து அமர்ந்திருந்த காதலனுக்குத் தெளிவாக விளங்கியது.

**பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோள்**
**கூடல் அவாவாற் குறிப்புணர்த்தும்—ஆடவற்கு**
**மென்றீந் தொடையாழின் மெல்லவே தைவந்தாள்**
**இன்றீங் குறிஞ்சி இசை,**

[பணிமொழி - மெத்தென்ற பேச்சையுடையவள். பணைத்தோள் - மூங்கிலைப் போன்ற தோள். குறிப்பை உணர்த்தும் - உள்ளக் குறிப்பை உணர்த்திய. ஆடவர்க்கு- காதலனுக்கு. தொடை - நரம்புக் கட்டு. தைவந்தாள் - வாசித்தாள்.]

இத்தகைய இங்கித அழைப்புகள் காதலுலகத்துக் காட்சிகளென்பதைக் கதையும் கவிதையும் நமக்குப் புலப்படுத்துகின்றன.

# கோபத்தின் கோலம்

நம்முடன் பழகும் மனிதர்களுள் ஒருவன் ஊமை. அவன் தன்னுடைய கருத்தை நம்மைப்போல வெளியிட இயலாத 'வாயில்லாப் பிராணி.' அவனுக்கு நம்முடைய பாஷை விளங்காது. நமக்கு விளங்கும் பாஷையில் அவனால் பேசவும் முடியாது. இந்த நிலையில் ஊமையுலகம் முழுவதும் பேசாத பேச்சினால்தான் ஜீவித்திருக்கிறது.

நமக்குத் தெரிந்த ஊமைக்கு இன்ன வேண்டும் என்பதை அவனுடைய சைகைகளைக் கொண்டு நாம் உணர்ந்து கொள்கிறோம். நாம் நம் கருத்துக்களைப் பேச்சின் மூலமாக வெளிப்படுத்த முயல்கிறோம். அதே மாதிரி அவன் தன் கருத்தைச் சைகை மூலம் வெளிப்படுத்த முயல்கிறான். கருத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று சங்கற்பித்துக்கொண்டு அதற்குரிய முயற்சியை மேற் கொள்வதில் இருவரும் ஒரே அளவில்தான் நிற்கிறோம்.

நம்முடைய சங்கற்பம் இல்லாமலே நம் உள்ளத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஊமைக் கும் அத்தகைய சந்தர்ப்பங்கள் உண்டு. வழக்கமாக நம் பேச்சையும் அவன் சைகைகளையும் துணையாகக் கொண்டு கருத்தை வெளிப்படுத்துவது போன்றதல்ல இது. உள்ளத் திலே பொங்கியெழும் உணர்ச்சியை உடம்பின் உறுப்புக் கள் தாமே வெளிப்படுத்திவிடும். வார்த்தை மூலமாக அந்த உணர்ச்சி வெளிப்படுவதற்கு முன்பே, உடம்பில் ஏற்படும் சிலவகை மாறுபாடுகளால் அது வெளியாகும். உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி வாய்மூலம் வரும்

பேச்சாக இன்றி, உடம்பின் வழியே தோற்றும் பேசாத பேச்சாக மலர்வதைக் கவிஞர்களும் கலைஞர்களும் ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். அந்தக் குறிப்புக்கு மெய்ப்பாடு என்று தமிழர் பெயர் வைத்தனர். மனத்திலே எழும் உணர்ச்சிகளின் விளைவாக உடம்பிலே உண்டாகும் தோற்றம் என்பது அத்தொடருக்குப் பொருள். மெய்-உடம்பு. பாடு - படுதல்; உண்டாதல். இதனைச் சத்துவ மென்றும், விறல் என்றும், பாவம் என்றும் வழங்குவதுண்டு. மெய்ப்பாடு என்பதற்கு, "உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்" என்று பழைய உரைகாரர் கூறுவர். வேம்பு தின்றவனுக்கு அதன் கசப்பு, தலை நடுக்கம் முதலியவற்றை உண்டாக்குகின்றது. அந்தத் தலை நடுக்கம் முதலியவற்றைச் சத்துவம் என்று கூறுவர்.

முன்னே சொன்ன ஊமைக்குக் கோபம் வந்துவிட்டால் அது நமக்குத் தெரிகிறது. அவன் நம்மைப் போல் கோபம் மிக்க வார்த்தைகளைச் சொல்லத் தெரியாதவன். ஆனாலும் அவன் கண் சிவக்கிறது; உடம்பு படபடக்கிறது; பல்லைக் கடித்துக்கொள்கிறான். இந்தக் குறிப்புகளைக் கொண்டு அவனுக்குக் கோபம் உண்டாகியிருக்கிறதென்று தெரிந்துகொள்கிறோம். பேசும் இயல்புடைய நமக்கும் இந்தக் குறிப்புகள் உடம்பில் நிகழும். கோபம் எப்படி ஊமைக்கும் நமக்கும் பொதுவோ, அப்படியே கோபத்தின் விளைவாகிய சத்துவங்களும் இரு வகையினருக்கும் பொது. ஊமை இந்தச் சத்துவங்களோடும், அர்த்தம் இல்லாத சத்தங்களோடும் நின்று விடுகிறான். நாமோ அவ்வற்றிற்குமேல், நமக்குத் தெரிந்த கோபச் சொற்களைப் பிரயோகம் செய்கிறோம். ஆகவே,

கோபம் என்ற உணர்ச்சி எழும்போது முதலில் உள்ளம் தொழிற்படுகிறது; அது மெய்யில் சுத்துவமாக வெளியாகிறது; அப்பால் உரையாக விளைகிறது. இந்த மூன்றில் முன் இரண்டும் இயற்கையாக விளைவன; உரை செயற்கையாக வருவது.

நாடகங்களில் நடிப்பவன், தனக்குக் கோபம் வந்ததாகக் காண்பவர்கள் உள்ளத்தில் ஒரு தோற்றத்தை எழுப்புவதற்கு உதவுபவை சத்துவங்களும் உரையும் ஆகும். பேசுகின்ற பேச்சைக் காட்டிலும், பேசாத பேச்சாகிய சத்துவத்தையே சிறப்பாகக் கொள்வார்கள். கோபம் உண்டானதுபோல் ஒருவன் நடிக்க, அதனைக் காண்போர் உள்ளத்தில், "இவன் கோபம் கொண்டவன்" என்ற உணர்ச்சியும், அது நாடகக் கோபம் என்ற நினைப்பும் எழும்போது ஒருவகை இன்பம் உண்டாகிறது. அந்த இன்பத்தை ரஸமென்றும் சுவையென்றும் சொல்வார்கள்.

மனிதனுடைய உணர்ச்சிகள் பல படியாக விரிந்திருந்தாலும் அவற்றை ஒன்பதுக்குள் அடக்கி, அந்த ஒன்பதையும் தலைமையாக்கி, மற்றவைகளை அவற்றை வளப்படுத்த வரும் இனமாக்கி வகுத்திருக்கின்றனர், சுவை தேர்ந்த புலவர்கள். இந்த ஒன்பது வகை உணர்ச்சிகளையும் சத்துவம் முதலியவற்றால் ஒருவன் புலப்படுத்த, அதனைக் காண்பவர் இன்புறுங்கால் பிறக்கும் ரஸங்களும் ஒன்பதாகும். வீரம், பயம், இழிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரம் எனச் சுவை ஒன்பதென்று வகுத்தார்கள்.

உலகத்தில் நிகழும் உண்மை நிகழ்ச்சியைக் காணும் போது உண்டாகும் உணர்ச்சி ரஸமாகாது. அதுவும் ஓர் உணர்ச்சிதான். போலி நிகழ்ச்சியிலே பிறக்கும் இன்பந்

தான் ரஸம். ரஸம் உருவத்தால் ஒன்பது வகைப்பட்டாலும் இன்ப விளைவாகிய பயனுல் ஒன்றுதான். சர்க்கரையைக் கொண்டு கைப்புச் சுவையுடைய பாகற்காய் உருவமும், கார்ப்புச் சுவையுடைய மிளகாயும், துவர்ப்புச் சுவையுடைய பலாக் கொட்டையும், இனிப்புச் சுவையுடைய வாழைப் பழமும் செய்தாலும் அவை அனைத்தும் இன்சுவை உடையனவே. மற்றவை வெறும் தோற்றம். ரஸமும் அத்தகையதே. சந்திரமதி புலம்பலிலும் சகுந்தலையும் துஷ்யந்தனும் காதல் உரை பேசுவதிலும் இரணியன் கோபத்தாற் குமுறுவதிலும்—நாடகமாயினும் காவியமாயினும் நாம் நுகர்வது இன்பந்தான். அந்த இன்பத்தை விவகாரத்துக்காக, உருவ வேறுபாடு பற்றி வகைப்படுத்தியிருக்கிருர்கள். சந்திரமதி புலம்புவதில் வரும் இன்பம் அவலச் சுவை அல்லது கருணா ரஸமென்றும், காதல் உரையில் விளைவது இன்பச் சுவை அல்லது சிருங்கார ரஸமென்றும், இரணியன் கோபம் கண்டு எழுவதை வெகுளிச் சுவை அல்லது ரௌத்திர ரஸமென்றும் வேறு வேறு பெயர்களால் குறிப்பார்கள். இப்படியே அருவருப்பு உணர்ச்சியினுல் வரும் இன்பத்தை இளிவரல் அல்லது பீபத்ஸம் என்றும், அச்ச உணர்ச்சி காரணமாக எழுவதை அச்சச் சுவை அல்லது பயானகம் என்றும், வியப்பினுல் எழுவதை மருட்கை அல்லது அற்புதமென்றும், நகைக்குக் காரணமாவதை நகைச்சுவை அல்லது ஹாஸ்யமென்றும், சம நிலை காரணமாகத் தோன்றுவதை நடுவுநிலைச் சுவை அல்லது சாந்த ரஸமென்றும் வேறு பிரித்து அமைத்திருக்கிருர்கள்.

இந்த ரஸங்களை உண்டாக்குவதற்கு ஒரு காரணமான சத்துவங்கள் இயற்கையிலே நிகழ்வன. அவற்றைத்

தேர்ந்து உணர்ந்து நாடகக் கலைஞரும் கவிஞரும் எடுத்து ஆள்கின்றனர். உண்மையாகவே கோபம் உண்டான ஒருவன்பால் தோற்றிய உடம்பு வேறுபாடுகளைக் கவனித்து, கண்ணுக்குப் புலப்படாத கோபத்தைக் காட்டும் அடையாளங்களாகிய அவற்றைப் பொய்யாக நடிக்கச் செய்து, கோபத்தால் விளைவன அவை என்று மெய்யுலகில் கண்டுணர்ந்த சபையினருக்குக் கோபத்தின் ஞாபகத்தை ஊட்டச் செய்வதே நாடகக் கலைத்திறம். எனவே, பேசாத பேச்சாகிய சத்துவங்கள் இயற்கையாக நிகழ்வன; நடிப்போர்கள் ஏறட்டுக் கொள்வன.

காவியங்களில் கதாபாத்திரங்களின் கருத்தை வெளிப் படுத்த அவர்களின் செயல்களும் உரைகளும் பயன்படு கின்றன. அவர்களுடைய உணர்ச்சிகள் மெய்ப்பாடுகளாக வெளிப்படுவதையும் கவிஞர் வருணிப்பார்கள். அவற்றைச் சிறிது பார்ப்போம்.

* * *

**கோ**பம் கொண்டவன் பொதுவாக என்ன செய்வான் ? தண்டியலங்காரக்காரர் ஒரு கோபியைக் காட்டுகிறார் : அவன் கையைப் பிசைகிறான் ; வாயை மடித்துக் கடிக்கிறான்; கண்கள் சிவக்கின்றன; பெருமூச்சு விடுகிறான் ; உடம்பு படபடக்கிறது ; கடைசியில் வேர்த்துப் போகிறது.

> **கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா**
> **மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்.**
>
> [குலையா - நடுங்கி. வேரா - வேர்த்து.]

வேறொரு நாடக நூல் வெகுண்டோனுக்குரிய இலக் கணத்தைச் சொல்கிறது. அங்கே கோபி, வாயை மடிக் கிறான் ; பெருமூச்சு விடுவதால் மார்பு அகல்கிறது ;

புருவம் துடிக்கிறது; கையை முன்னே நீட்டி விரலால் சுட்டிச் சுட்டிக் காட்டுகிறான்; ஆத்திரத்தோடு கையைத் தட்டுகிறான்.

வெகுண்டோன் அபிநயம் விளம்புங் காலை
மடித்த வாயும் மலர்ந்த மார்பும்
துடித்த புருவமும் சுட்டிய விரலும்
கன்றின உள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே.

[கன்றின – ஆத்திரங்கொண்ட. கொளல்–கொள்க.]

இந்த இரண்டும் இலக்கணக்காரர்கள் பொதுவாகக் காட்டும் உதாரணங்கள். காவியங்களில் கோபம் கொண்டு நிற்கும் பல பாத்திரங்களை நாம் பார்க்கலாம். ஒவ்வொரு பாத்திரத்தின் கோபத்திலும் சில விசேஷ அம்சம் இருக்கும்.

கோபம் என்பது எல்லோருக்கும் பொதுவான உணர்ச்சிதான் என்றாலும், அதனை வெளிப்படுத்தும் போது அவரவர்களுடைய மனப் பக்குவமும் ஆற்றலும் வெவ்வேறு வகையிலே அந்தக் கோபம் கோலம் கொள்ளும்படி செய்கின்றன. பலர் கோபம் கொள்ளும்போது உடம்பு பதறுகிறார்கள்; வேறு சிலருக்குப் பதறுவதில்லை. கண் சிவக்காமலே வரும் கோபமும் உண்டு. சில பேர் கோபம் கொள்கையில் ஒருவகைச் சிரிப்பு அவர்கள்பால் தோன்றுகிறது. சில பலஹீனர்கள் கோபத்தால் அழுது விடுகிறார்கள்!

இவ்வாறே காவிய பாத்திரங்களிலே கோபம் பல வகைப்படுகிறது. வேற்றுமைகள் நுண்ணியன ஆனாலும் அந்த நுண்மையினால்தான் பாத்திரங்களின் குண சித்திரங்

கள் உருவாகின்றன. ராமாயணத்தில் கோபம் கொள்பவர் பலர். ராவணன் கோபமும் ராமன் கோபமும் உணர்ச்சி யால் ஒன்றே; ஆனாலும் கொள்ளும் கோலத்தால் வெவ் வேறாகத் தோற்றும். எல்லாம் நமக்கு அடங்கியவை என்ற அகங்கார முனைப்போடு உள்ள அரக்கனாகிய ராவணனுக்கு வரும் கோபம் ராக்ஷசக் கோபமாகத்தான் இருக்கும். தெய்வத்தன்மை ஊறிய கருணைக் கடலாகிய ராகவனுடைய கோபம் அதற்கேற்றபடி அதிலும் தெய்வத் தன்மையைக் காட்டிக்கொண்டுதான் நிற்கும்.

கம்பர் கோப வேஷங்களை எப்படிப் போட்டு விடுகிறானென்பதைச் சில உதாரணங்களைக் கொண்டு கவனிக்கலாம்.

* * *

**வி**சுவாமித்திர முனிவர் தாம் இயற்றும் வேள்விக்குப் பாதுகாப்பாக ராமனை அனுப்பவேண்டுமென்று தசரத னைக் கேட்கிறார். ஆயிரங்காலம் தவமிருந்து பெற்ற இளங் குழந்தையை அரக்கருக்கு எதிர்நின்று போர்செய்யும் வேலையில் ஈடுபடுத்தத் தசரதனுக்கு விருப்பமில்லை. அவனை அனுப்பமாட்டேன் என்று சொல்லலாமா? சாமர்த் தியமாகப் பேசுவதாக எண்ணித் தசரதன் விண்ணப்பித் துக்கொள்கிறான். "முனிவர் ஏறே, ராமன் சின்னக் குழந்தை; ஆயுதம் பிடிக்கும் பழக்கம் அவ்வளவாகப் போதாது. தாங்கள் செய்யும் மகா யாகத்தைக் காப்பாற்ற நான் இருக்கிறேன். பிரம்மாவானாலும் சிவனானாலும் இந் திரனானாலும் கவலையில்லை; நான் எதிர்த்து, நின்று பாது காப்பேன். இப்போதே புறப்படலாம்" என்று நேரே செயலில் இறங்குவதாக விரைவு படுத்துகிறான். முனிவரா ஏமாந்து போகிறவர்? 'நான் ஒன்று கேட்க இவன் ஒன்று

சொல்கிறான்' என்று எண்ணவே, அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

விசுவாமித்திர முனிவர் யார் தெரியுமா? உலகத்தையே நான் சிருஷ்டிப்பேன் என்று துணிந்த மகா தபஸ்வி. அவர் கோபம் கொள்வதானால் அது அவர் உடம்பளவிலேயா வெளிப்படும்? வெகு வேகமாக மழையும் இடியும் வரும்போது அதற்கு முன்பே பல காவத தூரத்துக்குக் காற்றும் குழப்பமும் சூசகமாகத் தோன்றிச் சுழற்றுகின்றன அல்லவா? அப்படி மண் படைத்த முனிவர் கோபங்கொள்ளப் போகிறாரென்பதைத் தேவர்கள் இமைப்பொழுதில் உணர்ந்துவிட்டார்கள். ஊழிக் காலம் வந்துவிட்டதோ என்று ஐயுற்றார்கள். அவருடைய உணர்ச்சி உலகத்தையே ஆக்கும்; அழிக்கும். ஆகையால் இந்தக் கோபம் உலகத்தையே அழித்து, படைத்தவனே அழிக்கவும் ஆற்றல் உடையவன் என்பதை நிரூபித்து விடுமே என்று தேவர்கள் அஞ்சினர். சூரியன் மறைந்தனன். அங்கங்கே நின்ற கிரகங்கள் சுழலத் தொடங்கின. இவ்வளவும் முனிவர் உணர்ச்சி புறப்படுவதற்குமுன் அதற்கு இடம் செய்கின்ற முன்னேற்பாடுகள்; விசுவாமித்திர முனிவர் கோப வேஷம் புனைந்து ஆட வகுக்கும் நிலைக்களம். முனிவருடைய பெருமைக்கு ஏற்றபடி விஸ்தாரமான நிலைக்களமாக இருக்கிறது அது.

கோப விசுவாமித்திரர் இதோ வந்து விட்டார். அவருடைய கொழுவிய புருவங்கள் மேலே ஏறின; நெற்றி முழுவதும் சென்று நின்றன. அந்தக் கோபத்திலே தம் தலைமையும் பிற பொருள்களிடத்திலே தோற்றிய அலக்ஷ்யமும் சேர்ந்து நகையை உண்டாக்கின. கண்கள் சிவந்தன. திசைகளெல்லாம் இருண்டுவிட்டன.

புருவம் மேல் ஏறுவதும் கண் சிவப்பதும் சாமானிய மானவனுக்கும் உண்டு. ஆனால் தலைமை உள்ளவனிடத்திலேதான் கோபத்திலே நகை தோன்றும். எல்லோருக்கும் தலைவனாகிய சிவபிரானுக்கும் முப்புரம் பொடித்த கோபத்திலே நகைப்பல்லவா தோன்றிற்று? விசுவாமித்திரர் கோபத்துக்கு முன்னும் பின்னும் உலகமே தொழிற்படுகிறது; கலங்குகிறது; இருள்கிறது. அவர் தவமுனிவர். அந்தத் தவ வலிமை அவர் உள்ளத்திலே பிறந்தாலும் உலக முழுதும் வியாபிக்கும் ஆற்றல் உடையது. கம்பர் வாக்கிலேயே விசுவாமித்திரருடைய கோபக் கோலத்தைப் பார்க்கலாம்.

**என்றனன்என் றலும், முனிவோ டெழுந்தனன்மண்**
**படைத்தமுனி; இறுதிக் காலம்**
**அன்றெனஆம் எனஇமையோர் அயிர்த்தனர்மேல்**
**வெயில்கரந்தது; அங்கும் இங்கும்**
**நின்றனவும் திரிந்தன; மீ நிவந்தகொழுங்**
**கடைப்புருவம்; நெற்றி முற்றச்**
**சென்றனவந் தனநகையும்; சிவந்தனகண்;**
**இருண்டனபோய்த் திசைகள் எல்லாம்.**

[என்றனன்-நானே வருகிறேனென்று தசரதன் கூறினான். இமையோர்-தேவர். அயிர்த்தனர்-ஐயமுற்றனர். கரந்தது-மறைந்தது. மீ நிவந்தன-மேலே ஏறின.]

விசுவாமித்திரரது கோபம் புராணப் பிரசித்தி பெற்றது. அதற்குமேல் கோபத்துக்கே பெயர் பெற்றவர் துர்வாச மகா முனிவர். கோபம் கொள்பவனுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு வலிமை உண்டோ அவ்வளவுக்கு அவ்வளவு அதன் விளைவு அதிகமாக இருக்கும்.

கோபத்தில் துர்வாச முனிவர் விசுவாமித்திர முனிவரினும் உயர்ந்தவர். காரணம்: தவத்தில் குலையாத நிலைப்படைத்தவர் அவர்.

ஒரு சமயம் துர்வாச முனிவருக்கு ஒரு வித்தியாதர மங்கை மகாலக்ஷ்மியினிடம் தான் பெற்ற பிரசாதமாகிய மாலையை அளித்தாள். அதைப் பெற்ற முனிவர் மிகவும் மகிழ்ச்சியோடு அதனை ஏந்தி வருகையில், எதிரே இந்திரன் ஐராவதத்தின்மேல் ஊர்ந்து வந்துகொண்டிருந்தான். அவன் வருகிறபோது அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதுகண்டு மிகவும் வியப்பும் உவகையும் அடைந்த முனிவர், தம் கையில் இருந்த மாலையை அவனிடம் நீட்டினர். இந்திரன் அலட்சியமாகத் தன் கையிலுள்ள அங்குசத்தால் வாங்கி ஐராவதத்தின் பிடரியின்மேல் வைத்தான். அந்த யானை உடனே அதைத் தன் துதிக்கையால் எடுத்துக் காலில் வைத்துத் தேய்த்தது. கண்டார் கோப உருவங்கொண்ட முனிவர். அப்புறம் சொல்லவேண்டுமா?

முன்னே தேவர்கள் விசுவாமித்திர முனிவர் கோபத்தை எதிர்நோக்கி, "ஊழிக்காலம் வந்துவிட்டதோ, என்னவோ!" என்று சந்தேகப்பட்டார்கள். இங்கே அந்தச் சந்தேகத்துக்கே இடம் இல்லை. இந்திரனைச் சூழ நின்று எல்லாவற்றையும் கண்ணாலே பார்த்துக்கொண்டு நிற்பவர்களாயிற்றே. இந்திரன் செய்தது சாமான்ய அபசாரமா? கோபங்கொள்ளும் முனிவர்தாம் வெறும் சந்நியாசியா?

முனிவர் கண்கள் இந்திரனும் யானையும் செய்த அபசாரங்களைக் கண்டன. அவை சிவந்தன என்று சொல்ல

வில்லை கவிஞர். விசுவாமித்திரருக்குக் கோபம் வந்த போது கண்கள் சிவந்தன. இங்கே துர்வாசர் கண்கள் கனலைக் கக்கின. அந்தக் கனலால் அண்ட கூடங்கள் யாவும் நிச்சயமாகச் சாம்பலாகிவிடும் என்று அஞ்சி நடுங்கித் தேவர்கள் அங்கிருந்து ஓடினார்கள்: சூரிய சந்திரர் எங்கேயோ போய் ஒளித்துக்கொண்டனர். திசைகளெல்லாம் இருண்டன. உலகம் யாவும் சுழன்றன. இவை நிலைக்களம்.

விசுவாமித்திரர் கோபக்கோலத்துக்கு இதனினும் சிறிய நிலைக்களத்தைத்தான் கம்பர் அமைத்தார். இந்தக் கோபம் இன்னும் பெருகிய தவ வலிமையிலே பிறப்பது. ஆகவே இதன் உருவமும் இதற்கு அமைக்கும் நிலைக்களமும் பெரியனவாகத்தானே இருக்கவேண்டும்?

**கண்ட மாமுனி விழிவழி**
**ஒழுகுவெங் கனலால்**
**அண்ட கூடமும் சாம்பராய்**
**ஒழியும்என்று அழியா**
**விண்டு நீங்கினர் விண்ணவர்**
**இருசுடர் மீண்ட**
**எண்டி சாமுகம் இருண்டது**
**சுழன்றதெவ் வுலகும்.**

புறத்தே நிகழும் நிகழ்ச்சிகள் இவ்வாறாக, முனிவர் மெய்யிலே தோன்றிய சத்துவங்களையும் காண்போம்.

தவ முனிவராகிய அவருடைய கோபக் கனல் உயிர்களைச் சுட்டது. மற்றக் கனல்கள் உடம்பைச் சுடும்; மரத்தைச் சுடும்; மட்டையைச் சுடும்; இந்தக் கனல் உயிர்தொறும் புகுந்து சுட்டது; அடையாளம் என்ன? 'உயிர்

தொறும் புகை எழுந்தது.' நகை எழுந்தது முனிவர் முகத்தில். விசுவாமித்திரருக்கும் நகை எழுந்தாலும் அதைக் கம்பர் வெறுமனே சொல்லி நிறுத்தினர். இங்கே துர்வாசர் நகைத்தார்; முப்புரமும் பொடிசெய்தபோது சிவபிரானிடம் எழுந்த சிரிப்பைப்போல இருந்தது அவர் நகை. அவர் தலைமை சாக்ஷாத் திரிபுராந்தகனுடைய தலைமைக்குச் சமானம். விசுவாமித்திரருடைய நகை வசிஷ்டரையும் தசரதனையுந்தான் நடுங்கச் செய்தது. இங்கே இந்திரபோக வாழ்வு அத்தனையுமல்லவா அழிந்தொழியப்போகிறது? அகங்காரமே வடிவமான இந்திரனது மமகாரப் பொருளாகிய வளங்களையெல்லாம் அந்த நகை சுட்டொழிக்கப் போகிறதல்லவா? அவ்வளவு ஆற்றலையும் தெளிவாக்க, 'திரிபுராந்தகனைப்போல அவர் முகத்தில் நகை தோன்றியது' என்ற உபமானம் இங்கே பயன்படுகிறது.

நகை எழுந்தது. புருவங்கள் நெற்றி மேலே ஏறின. விழிகளில் கோபத்தின் கொழுந்து எழுந்தது. இடியும் திகைக்கும்படி பேச ஆரம்பித்தார்.

**புகையெ ழுந்தன உயிர்தொறும்;**
**எயில்பொடித் தவனின்**
**நகையெ ழுந்தன; நிவந்தன**
**புருவம்நன் னுதலில்**
**சிகையெ ழுஞ்சுடர் விழியினன்**
**அசனியுந் திகைப்ப**
**மிகையெ ழுந்திடு சதமக**
**கேளென வெகுண்டான்.**

[எயில் பொடித்தவனின் - திரிபுரங்களை எரித்தவனைப் போல. சிகை-கொழுந்து. அசனி-இடி. மிகையெழுந்திடு-

செய்யத் தகாத காரியத்தைச் செய்ய எழுந்த. சதமக– இந்திரனே.]

கோபம் துர்வாச முனிவர்பால் கொண்ட கோலம் பின்னும் விரிவுடையது; உரமுடையது. இரு முனிவருடைய கோபத்திலும் தனிப் பண்பு இருக்கிறது. அதனைப் பேசாத பேச்சாகிய குறிப்புக்களால் கவிஞர் விளங்க வைக்கிறார்.

# அரக்கர் கோபம்

விசுவாமித்திர முனிவர் தம்முடைய வேள்வியை அரக்கர் இயற்றும் இடையூற்றினின்றும் காக்கும் பொருட்டு ராமனையும் லக்ஷ்மணனையும் அழைத்துச் சென்றார். இடைவழியிற் காணும் இடங்களையும் அவற்றோடு தொடர்புடைய வரலாறுகளையும் முனிவர் ராமனுக்குச் சொல்லிக்கொண்டே சென்றார். அப்போது ஒரு பாலை நிலத்தை அவர்கள் அணுகினர். "இந்தப் பூமி சிவபிரானது நெற்றிக்கண் பட்டு வெந்துதான் போயிற்றோ? வேறு தான் உண்டோ?" என்று ராமன் கேட்க, விசுவாமித்திரர் தாடகை என்னும் அரக்கி அங்கிருந்த உயிரையெல்லாம் வயிற்றில் இட்டாளென்றும், அவள் செய்த கொடுமையினால் உயிரற்றொழிந்த பாலையாயிற்று அந்நிலப் பகுதி என்றும் சொல்லி, அவ் வரக்கியின் வரலாற்றையும், அவளே தம் வேள்வியை நலிபவளென்ற செய்தியையும் எடுத்துரைத்தார்.

கேட்ட ராமன், "எங்கு உறைவது இத்தொழில் இயற்றுபவள்?" என்று வினவவே, "இதோ இவ்விடத்தில் அவள்...." என்று முனிவர் விடைகூறி முடிப்பதற்கு முன்பே அவர்களுக்கு முன்பு தாடகை, 'மைவரை நெருப்பு எரிய வந்ததென' வந்தாள்.

அவள் பெரிய உடம்போடும் அதற்கேற்ற ராட்சச ஆபரணங்களோடும் வருகிறாள். காலிலே பூண்ட அணியில் சலங்கைகள் இருக்கின்றன. பொன்னாலும் மணியாலும் செய்தவை அல்ல. அவை மனிதப் பூச்சிகளின் ஆபரணம்

அல்லவா! மலைகளைக் கோத்து அணிந்த கழலுடையவள் அவள். இயற்கையாகவே கோபத்தைக் குணமெனக் கொண்ட அரக்கிக்கு மானிட வாசனை வீசிய மாத்திரத்தில், அது கொழுந்துவிடத் தொடங்கியது. காலைப் பூமியிலே ஓங்கி மிதித்தாள். மலைகளெல்லாம் பூமிக்குள்ளே அழுந்தி விட்டன. அதனால் நிலம் குழிந்தது. அப்போது பூமியும் நடுங்கியது. அந்த நடுக்கத்தினால் எங்கேயோ இருந்த சமுத்திரம் நிலைகலங்க, அதன் நீர் கரை புரண்டு வந்து அவள் மிதித்ததனால் உண்டாகிய குழியிலே புகுந்தது. உலகத்தில் உள்ள உயிர்களைக் குறிப்பிட்ட காலத்தில் கொல்பவன் கூற்றுவன். அவளோ தன்னுடைய உல்லாசத் தின் பொருட்டு எந்தச் சமயத்திலும் பல்லாயிர உயிர்களை ஒருங்கு மடியச் செய்வாள். அவள் கோபம் கொண்டாள் என்றால் கூற்றுவனுக்குப் பல காலம் வேலையில்லாமற் செய்துவிடுவாள். பிறருக்கெல்லாம் யமனாக நிற்கும் அவன், தனக்கு இவள் யமனாகிவிட்டால் என்செய்வது என்று அஞ்சி ஓடிப் பாதாளத்தில் புகுந்துகொள்கிறான். அவள் வரும் வேகத்தில் மலைகள் இடம் பெயர்ந்து அவள் பின் வருகின்றன.

அழிக்கும் ஆற்றலையே உருவு செய்தாற்போன்றவள் தாடகை. அணுக்குண்டின் அம்சமென்று வைத்துக் கொள்ளலாமே. அந்த அணுக் குண்டைக் கோப மென்னும் விசையால் முடுக்கியாயிற்று. அது இயங்கத் தொடங்கியது. நிலத்தையும் கடலையும் மலைகளையும் முறை பிறழச் செய்துவிடுகின்றது அந்தக் கோபம். அரக்கர் அறத்துக்கு மாறுபட்டவர்கள். இயற்கையை மாற்றுபவர் கள். இயற்கை நியதியைப் போக்கி வேறு வேறாக்கிப் பிரித்துப் பல உயிர்களுக்கு ஏதம் விளைவிப்பவர்கள்.

ஆகவே அவர்கள்பால் உண்டாகும் சினம் ராட்சசச் செயல்களைச் செய்கிறது.

சிலம்புகள் சிலம்பிடை செறித்தகழ லோடும்
நிலம்புக மிதித்தனள் நெளித்தகுழி வேலைச்
சலம்புக அனல்தறுகண் அந்தகனும் அஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்தொடர வந்தாள்.

[சிலம்புகள் – மலைகள். வேலை – கடல். தறுகண்- கொடுமை. பிலம் – பாதாளம்.]

அவள் புகுகையில் சுற்றும் நிகழும் நிகழ்ச்சி இது. இனி அவள் திருமேனியில் கோபம் கொள்ளும் கோலம் எத்தகையது ?

புருவங்கள் துடிக்கின்றன. இயற்கையாகவே வெளியே தெரிந்துகொண்டிருந்த பிறைபோன்ற கோணற் பற்கள் இரண்டு கடைவாயினும் அடிவரைக்கும் தெரியும் படியாக வாயை மடித்துக்கொண்டாள். அந்த வாய்தான் மலை முழையைப்போல அல்லவா தோற்றுகிறது? அவள் கோபத்தால் விழித்துப் பார்க்கிறாள். வேத நெறிக்குப் புறம்பான காரியத்தைச் செய்யும் அந்த அரக்கியின் கண்கள் அப்போது கடலில் இரண்டு வடவைத் தீ எழுந்தாற்போலத் தீயைக் கக்கின.

இறைக்கடை துடித்தபுரு வத்தள்எயி றென்னும்
பிறைக்கடை பிறங்கிட மடித்தபில வாயள்
மறைக்கடை அரக்கிவட வைக்கனல் இரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்.

[இறை-சிறிதளவு. பிறைக்கடை-பிறையினது அடி. மறைக்கடை-வேதத்துக்குப் புறம்பான. நிறைக்கடல்-நீர் நிறைதலையுடைய கடல்.]

உலகம் ஏழும் நடுங்கச் சப்தித்தாள். இடி இடிப்பது போலக் குமுறினாள். தன் கண்ணிலிருந்து எழுந்த கோபக் கனலால் மேகங்களெல்லாம் கருகித் துண்டு துண்டாகக் கீழே விழும்படியாக விழித்துப் பார்த்தாள். உள்ளம் புழுங்கிப் பெரிய மலைகளெல்லாம் நடு நடுங்கிக் குழைந்து விழ உதைத்தாள். சந்திரனை வெட்டி வைத்தாற்போன்ற பல்லைக் கடித்தாள். கையிலே உள்ள சூலத்தைப் பற்றி எறிய முற்பட்டாள்.

மேகமவை இற்றுக விழித்தனள் புழுங்கா
மாகவரை அற்றுக உதைத்தனள் மதித்திண்
பாகமென முற்றெயி றதுக்கியயில் பற்றா
ஆகமுற உய்த்தெறிவன் என்றெதிர் அழன்றாள்.

[மாகவரை-வானை அளாவிய மலை. எயிறு அதுக்கி-பல்லைக் கடித்து. அயில்—சூலம். ஆகம் உற-உடம்பிலே தைக்க. உய்த்து-வீசி.]

தாடகையின் கோபம், அவளுடைய மிருக பலம் அத்தனையும் முழு ஆற்றலோடும் சேர்ந்து தொழிற்படச் செய்கின்றது; அதன் மூலம் விளைந்த விளைவு இயற்கையை மாற்றுகிறது; மேட்டைப் பள்ளமாக்குகிறது; பள்ளத்தை மேடாக்குகிறது; நீரைக் குடித்து நெருப்பை வளர்க்கிறது; இதுதான் ராட்சசத் தன்மை.

* * *

மூக்கறுபட்ட சூர்ப்பணகை இலங்கையை அடைந்து ராவணன் முன்போய் விழுந்து புரண்டாள். அவள் மூக்கில்லா முகம் ராவணன் கண்ணில் பட்டது. அவனுக்குக் கோபம் வந்ததென்று கம்பர் சொல்லவில்லை. ஆனால் அந்தக் கோபக்கனல் எழுமுன் சூழ்நிலை எப்படி இருந்

தது, கோபம் அரக்கர்கோன்பால் எப்படிக் கோலம் கொண்டது என்பதை விரிவாகக் காட்டுகிறார்.

தன் தங்கையின் அலங்கோலத்தைப்பற்றி அவன் விசாரிக்கக்கூட இல்லை; அதற்கு முன்பே அவன் கோபம் விரைந்து முன்வந்து நின்றது. அது வருவதற்கு முன் உலக முழுவதும் இயற்கை திறம்பியது.

மூவுலகமும் இருட்படலம் மூடியது. ஆதிசேடன் அஞ்சித் தன் ஆயிரந் தலைகளையும் நெளித்தான். திசைக் கிரிகள் யாவும் அசைந்தன. சூரியன் இனி என்ன வருமோ என்று நடுங்கினான். திசை யானைகள் ஓடின. தேவர்களெல்லாம் யார் கண்ணிலும் படாமல் ஒளித்துக் கொண்டார்கள்.

தாடகையின் கோபம் கடலையும் நிலத்தையும் அலைத்தது. அரக்கர் கோனாகிய ராவணன்பால் அவளைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு ராட்சசத் தன்மை அல்லவா இருக்கிறது? எனவே அதற்கு ஏற்றபடி முன் அடையாளங்கள் தோற்ற வேண்டுமே. அதனால்தான் இங்கே மூவுலகமும், பாதாளத்திலே கிடக்கும் ஆதிசேடனும், திசைக் கிரிகளும் கரிகளும், தேவரும் இயற்கை நியதி கலைந்து குழம்பி உழல்கிறார்கள்.

**மூடினது இருட்படலை மூவுலகும் முற்றச்**
**சேடனும் வெருக்கொடு சிரக்குவை நெளித்தான்**
**ஆடின குலக்கிரி, அருக்கனும் அயிர்த்தான்**
**ஓடின திசைக்கரிகள் உம்பரும் ஒளித்தார்.**

[படலை - பரப்பு. வெரு - பயம். அருக்கன்-சூரியன்.]

கோப உணர்ச்சியால் ராட்சசச் சக்கரவர்த்தியின் பால் உண்டான சத்துவங்களைக் கம்பர் வருணிக்கின்றார்.

கோபத்தால் அவன் தோள்கள் குலுங்கிப் படர்ந்தன. அதனால் அத்தோள்களிலே பூண்ட வாகு வலயங்கள் விரிந்து நின்றன. மேலே ஏறி எரிந்த கண்கள் கீழ் நோக்கியும் சென்று பற்களின் புறமாகக் கோபக் கனலை வீசின. நெறிந்த புருவங்கள் நெற்றியளவும் சென்றன. புவனங்கள் யாவும் இந்த உணர்ச்சி வெளியீட்டால் இயற்கை மாறிச் சுழன்றன. தேவர் இனி ஏது வருமோ என்று கலங்கினர்.

தாடகை வாயை மடித்துக் காலால் உதைத்தாள். இப்படிச் செய்தல் ஓரளவு பலவீனத்தைக் காட்டும். சிறு குழந்தைக்குக் கோபம் வந்தால் காலைப் பூமியிலே உதைத்து உடம்பைக் குலுக்கிக் கொள்ளுகிறதல்லவா? தாடகை அரக்கியாக இருந்தாலும் பெண்தானே?

ராவணனோ மனோ பலம் நிறைந்தவன். கோபம் அவனிடம் வெளியாகும்போது கம்பீரமாக வெளிப்படுகிறது. தோள் படர்வது வீரத்துக்கு அழகு; கண்கள் சிவந்து சுழலப் புருவங்களை நெறித்தது அவனது துளங்காத தனித் தலைமையைக் காட்டுகிறது.

அவன் கோபக் குறிப்பைக் கண்டு தென் திசை யமனும் தேவர்களும், "இன்று நமக்கு இறுதி வந்துவிட்டது" என்று அஞ்சினார்கள். அவ்வுலகத்தும் இவ்வுலகத்தும் உள்ளவர்கள் உயிர் நடுங்கி உடல் விம்மி நிலை நில்லாமல் கலங்கி என்ன சொல்வதென்று அறியாமல் வாய் அடைத்துப் போயினர். ராவணன் கோபம் அவர்கள் பயத்தை உச்ச நிலையிலே வைத்தது. அதனால் அவர்களால் பேச முடியவில்லை. எந்த உணர்ச்சியும் உச்சத்தை அடைந்தால் பேச்சு வராது.

கோபம் தோளிலும் கண்ணிலும் புருவத்திலும் வெளிப்பட்ட பிறகு, ராவணன்பால் அடுத்த கட்டத்தை அடைகிறது. இயற்கையான மெய்ப்பாடுகள் நிகழ்ந்த பிறகு, சிறிது சிந்தித்ததனால் வரும் மெய்ப்பாடுகள் நிகழ்கின்றன.

வாய்களை - பத்து வாய்களை - மடிக்கிறான். அவற்றின் வழியே உள்ளத்தே பொங்கும் கோபக் கனலின் புகை எழுகிறது. மீசைகள் துடிக்கின்றன. பெருமூச்சு விடுகிறான். அந்த மூச்சுக் காற்றுப் பட்டு மீசைகள் கருகுகின்றன. பல்லைக் கடிக்கிறான். பல்வரிசை மின்னல் போலப் பளிச்சிடுகின்றது. பிறகு இடி இடித்தாற்போல, "இது யார் செயல்?" என்று கேட்கிறான்.

> மடித்தபில வாய்கள்தொறும் வந்துபுகை முந்தத்
> துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள உயிர்ப்பக்
> கடித்தகதிர் வாளெயிறு மின்கஞல மேகத்து
> இடித்தவுரும் ஒத்துரறி யாவர்செயல் என்றான்.

[சுறுக்கொள - தீந்த நாற்றம் வீச. கஞல — விளங்க. உரும் - இடி. உரறி - முழங்கி.]

ராவணனது கோபம் அவனுடைய ராட்சசத் தன்மைக்கு ஏற்ற முன் அடையாளங்களைச் சற்றும் நிகழ்த்தி, அவனுடைய தலைமைக்கு ஏற்றபடி அவன்பால் கோலம் கொள்கிறது.

அவன் கோபம் எப்படி விளையும் என்பதைச் சூர்ப்பணகை ஓரிடத்தில் சொல்கிறாள். உணர்ச்சியை அடக்காமல் ஆராயாமல் உடனே வெளிப்படுத்தும் ராட்சசத் தன்மை அதிலே புலப்படுகிறது. முட்டாளுக்குக் கோபம் வந்தால் சமாதானம் செய்ய வந்தவனையும் அடித்து

விடுவான். ராவணன் உள்ளத்தே கோபம் வந்துவிட்டால் கொஞ்ச நஞ்சம் இருக்கும் அறிவும் குடி போய்விடும். "உன் தங்கை மூக்கை யாரோ அரிந்துவிட்டார்" என்று ஒரு தூதன் வந்து சொன்னால், ராவணனுக்கு உடனே கோபம் வந்துவிடும். அந்தக் கோபம் ஒரு கணமாவது அவனைச் சிந்திக்க விடாமல் உடனே தொழிற்படும்; ராட்சச விளைவாகத்தான் தொழிற்படும். உடனே அந்தத் தூதனைப் பிடித்து அவன் நாவை ராவணன் துண்டித்து விடுவானாம்! கோபத்துக்கு எத்தனை சுதந்தரம் பாருங்கள். அறிவுக்கோ, பொறுமைக்கோ அந்தக் கணத்தில் அங்கே வேலையில்லை.

"எங்கள் அண்ணனார் இப்படிப்பட்டவராக்கும்!" என்று சூர்ப்பணகை சொல்கிறாள்.

**ஆக்கரிய மூக்குஉங்கை அரியுண்டாள் என்றுரை**
**நாக்கரியுந் தயமுகனார்.**

[உன் தங்கை, ஆக்குவதற்கரிய மூக்கு அரியப்பட்டாள் என்று யார் சொன்னாரோ அவர் நாக்கை உடனே அரிந்துவிடும் பத்து முகம் படைத்த ராவணனார். உங்கை-உன் தங்கை.]

கோபம் முனிவர்கள்பால் தோன்றும்போது அதன் பின்னே தவவலி நிற்கிறது. அதன் விளைவு குற்றம் செய்தவனுக்குத் தண்டனையாக முடிகிறது. ராட்சசன் பால் தவழும்போது அதுவும் ராட்சச வேஷம் தரித்துக் கொள்கிற விசித்திரத்தைக் கம்பர் இவ்வாறு காட்டியிருக்கிறார். குற்றவாளி, குற்றவாளியல்லாதவர் என்ற வேற்றுமைக்கு அங்கே இடம் இல்லை.

# தம்பியர் கோபம்

தவ முனிவர் கோபத்தால் விளைந்த விளைவும் அரக்க ஜாதியின் சினத்தின் கோலமும் மெய்ப்பாடுகளால் ஒரே மாதிரி இருந்தாலும், முன்னது தவமென்னும் ஆற்றலுக் குரிய கம்பீரம் உடையது. பின்னது தாமச இயல்பினால் அமைந்த கொடுமையை உடையது. இரண்டும் தீமையை விளைவிப்பது. முனிவர் கோபம், அக் கோபத்துக்குக் காரணமானவரை ஒறுப்பது; அரக்கர் கோபம் இன்னா ரைத்தான் துன்புறுத்தும் என்ற வரையறையில்லாமல் மதம் பிடித்த யானை போலக் கண்ட கண்ட இடத்திலெல் லாம் அழிவை உண்டாக்குவது.

கோபம் வந்தால் அது செயலாக விளைய வேண்டிய அவசியம் இல்லை. ஏதோ ஒரு செயல் முன் நிகழ அது கண்டு ஒருவனுக்குக் கோபம் உண்டாகிறது. முன்னாலே நிகழ்ந்த அச்செயல் காரணமாக நிற்க, அதன் காரியமாகக் கோபம் விளைகிறது. அந்தக் கோபம் காரணமாய் நிற்க மீட்டும் ஒரு விளைவு நிகழ்வதை ஆற்றலுடையாரிடமும் அறியாமையுடையாரிடமும் பார்க்கலாம். ஆனால் அறி வுடையவர்பால் கோபம் உண்டாவது அரிது. அப்படி உண்டானாலும் அதற்குப் பின் விளைவு பெரும்பாலும் இராமல் ஆறிவிடும். மனித இயற்கையினால் கோபம் உண்டானாலும் அது மாறிவிடுவதுதான் உயர்ந்தோர்பால் நிகழும் நிகழ்ச்சி.

**நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே**
**சீரொழுகு சான்றோர் சினம்**

என்ற பாட்டு இதைக் குறிக்கிறது.

ராமாயணத்தில் ராமபிரான் தம்பியருள் லட்சுமண னும் பரதனும் கோபம் கொள்கிருர்கள். லட்சுமணன் முன்கோபி. அவனுக்கு மிக எளிதில் கோபம் உண்டா கும். அது உண்டான வேகத்தில் அடங்கிவிடும். அதனுல் யாருக்கும் எந்த விதமான தீமையும் இல்லை.

கைகேயியின் சூழ்ச்சியால் பரதன் நாடு கொண்டா னென்றும், ராமன் காட்டுக்குப் போகப் போகிருனென் றும் அவன் கேள்வியுறுகிருன். கேட்ட இடத்தில், கேட்ட தருணத்தில் அவனுக்குக் கோபம் பொங்குகிறது. மூட் டாத காலக் கடைத்தீ என்று சொல்லும்படியாக எழு கிருன்.

லட்சுமணன் கோபக் கோலத்தைக் கம்பர் வருணிக் கிருர். அவன் கண்கள் யுகாந்த காலத்து அக்கினி வெள் ளத்தைக் கொப்புளிக்கின்றன; அதன் சுடர் மேலெழுந்து நெற்றியிலே விழுந்து புரளும் மயிர்க் கற்றையைச் சுட்டு நாறச் செய்கின்றது. உடம்பெல்லாம் கோபத்தால் சிவந்து பளபளக்கின்றது. சூரியனைப்போலத் தோற்றுகின்ருன் அப்போது. உள்ளங்கால் முதல் உச்சிவரையில் குபீ ரென்று வேர்த்து விடுகிறது. பிரளய காலத்துக் காற்றைப் போலப் பெருமூச்சு வந்துகொண்டே இருக்கிறது. இந் தக் கோபத்தைப் பார்க்கும்போது, "இதென்ன, பிரம் மாண்டமான நாகம் ஒன்று கனன்று சீறுவதைப்போல அன்ருே இருக்கிறது?" என்னும் எண்ணம் உண்டாகிறது. பழைய கதையை நினைத்தால் அந்த எண்ணமும் பொருத்த மாக இருக்கிறது. ஆதிசேஷனது அவதாரந்தானே லட்சுமணன்? அந்த மூல மூர்த்தியின் கண்ணிலே கனலும், மூச்சிலே வெம்மையும், சீற்றமும் உண்டானுல்

எப்படி இருக்குமோ, அப்படித்தான் இருக்கிறது இப்போது.

**கண்ணில்கடைத் தீயுக நெற்றியிற் கற்றைநாற**
**விண்ணிற் சுடருஞ் சுடர்தோன்ற மெய்ந்நீர்விரிப்ப**
**உண்ணிற்கும் உயிர்ப்பெனும் ஊதை பிறங்கநின்ற**
**அண்ணற்பெரி யோன்தனது ஆதியின் மூர்த்திஒத்தான்**

[கடைத்தீ - பிரளய கால அக்கினி. கற்றை - குழற் கற்றை. சுடர் - பிரகாசம். உயிர்ப்பு – பெருமூச்சு. ஊதை - பிரசண்ட மாருதம். அண்ணல் - தலைமை. ஆதியின் மூர்த்தி - மூலமூர்த்தியாகிய ஆதிசேஷன்.]

அவன் கொஞ்சம் பேசுகிறான். பிறகு யுத்த சந்நத்தனாக நிற்கிறான். வாளைச் செருகி, வில்லைத் தாங்கி, அம்புப் புட்டிலை முதுகிலே கட்டிக்கொண்டு கவசத்தையும் அணிகின்றான். கழல் ஆர்க்கின்றன. வில்லின் நாணை ஒலிக்கிறான். பிறகு, "இந்த உலகத்தையே சுட்டுக் கொட்டை பரப்புகின்றேன்" என்று கர்ஜிக்கிறான்.

கோபம் பேச்சாக வந்தால் அதற்கு ஆற்றல் குறைவு. முன்னே பார்த்த கோபங்களில் பேச்சு மிகவும் குறைவு. பாவமாகிய பேசாத பேச்சே அதிகம். இங்கே லட்சுமணனிடம் தோற்றும் மெய்ப்பாடுகள் உலகத்தைப் பயமுறுத்தவில்லை. அவன் உடம்பளவில் தோற்றுகின்றன. கோபத்தின் விளைவு அவன் ஆயுதங்களைத் தரிப்பதோடு நிற்கின்றது. அந்தக் கோபம் அறிவுடையோன் கோபம் ஆதலின் ஆறக்கூடியது. ஆனாலும் தானே ஆறுவதன்று; பிறர் வந்து அவிக்க வேண்டும்.

லட்சுமணன் கோபக் கனலை அவிக்க ஒரு கரிய மேகம் துளியை வீசி வருவது போலச் சொல்லாகிய மாரி

வழங்க, அஞ்சன வண்ணனாகிய ராமன் வந்து விட்டான்.

அவன் திருமார்பிலுள்ள ஆபரணங்கள் மேகத்தில் மின்னல் மின்னுவதுபோல மின்னுகின்றன. ஆறாத கனலை யும் ஆற்றும் வன்மை பெற்ற நீருண்டு கருமை பெற்ற மேகத்தைப் போல ராமன் வருகின்றான்.

**வீறு ஆக்கிய பொற்கலன் வில்லிட ஆரம் மின்ன**
**மாறாத்தனிச் சொற்றுளி மாரி வழங்க வந்தான்**
**கால்தாக்க நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும்**
**ஆறாக்கனல் ஆற்றுமொர் அஞ்சன மேகம் என்ன.**

[வீறு-தனிப் பெருமை. வில்லிட-ஒளிவிட. சொல்லா கிய துளியையுடைய மழை. கால் தாக்க-காற்று வீச. அஞ் சனம்-மையின் நிறம் பெற்ற.]

அந்த மேகம் லட்சுமணன் உள்ளக் கொதிப்பு அடங் கத் தக்க சொன்மாரியைப் பெய்கின்றது. அதனால் ஆறாக் கனல் அவிகின்றது. கொந்தளிப்புடைய கடல் அடங்கினாற் போல லட்சுமணன் சீற்றம் துறக்கிறான்.

தவ முனியானாலும் சரி, அரக்கனானாலும் சரி, எதிர் நின்று கூறுவார் கூற்று அவருடைய கோபக் கனலுக்கு விறகாக உதவுமேயன்றி அவிக்காது. இங்கே கோபத்தைக் காட்டிலும் அன்பும் அறிவும் விஞ்சி நிற்கின்றன. அதனால் கோபம் எழுகின்றது; பின்பு ஆறுகின்றது.

இதோ பரதன் கோபம் கொள்கிறான். லட்சுமணன் கோபத்துக்கும் பரதன் கோபத்துக்கும் வேற்றுமை உண்டு. லட்சுமணன் முன்கோபி. பரதன் கோபமே கொள்ளாதவன்; குணம் என்னும் குன்று ஏறி நின்றவன். அவனிடம் வெகுளி கண நேரந்தான் நிற்கும். ஆனால்

அது பெரிய விளைவை உண்டாக்கும். அதற்கு யாவரும் அஞ்சுவர்.

> **குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
> **கணமேனும் காத்தல் அரிது**

என்ற குறளுக்கு இலக்கியமாக இருப்பது பரதன் கோபம்.

பரதன் மிகவும் விநயத்தோடு தன் தலைமேல் கைகளைக் குவித்துக்கொண்டு தன் தாயை அணுகி விஷயம் என்னவென்று கேட்கிறான். வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனை வனத்திடைப் போக்கியதையும், பாரைப் பரதனுக்கு ஆக்கியதையும், அது பொறுக்கலாமையால் தசரதன் உயிர் நீங்கியதையும் அவள் கூறுகிறாள்.

கோபம் வந்துவிட்டது பரதனுக்கு. தலையின் மேலே இருந்த கரங்கள் இந்த வார்த்தைகளைக் கேட்பதற்கு முன் காதைப் பொத்தின. கேட்கத் தகாத சொற்களைக் கேட்க நேர்ந்தால் செவி புதைத்தல் மரபு. அவன் தன் முயற்சியால் காதை மூடிக்கொள்ளவில்லை. அந்தக் கைகள் தாமே காதைப் பொத்தின. புருவங்கள் மேலும் கீழும் நெறித்துக் கூத்தாடின. பெருமூச்சு வந்தது. வெறும் மூச்சா அது? அதனோடு அழற் கொழுந்துகள் ஓடின. கண்கள் சிவந்தன; ரத்தத்தைக் கக்கின.

> **சூடின மலர்க்கரம் சொல்லின் முன் செவி**
> **கூடின; புருவங்கள் குறித்துக் கூத்து நின்**
> **றாடின; உயிர்ப்பினோடு அழற்கொ ழுந்துகள்**
> **ஓடின; உமிழ்ந்தன உதிரம் கண்களே.**

அவன் கபோலங்கள் துடித்தன. கனற் கதிர்கள் மயிர்த்தொளை தோறும் தோன்றின. புகைகூட மூடிக் கொண்டதோ! வாய் தானே மடிந்தது. கைகள் ஒன்றோடு

ஒன்று அடித்தன; பூமி பிளக்கவும், இடிகூட அந்த ஒலி கேட்டு அஞ்சவும் அடித்தன.

பரதன் சினம் வந்தால் அடக்கிக் கொள்ளும் சாத்துவிக இயல்பு நிறைந்தவன். அவனுக்குக் கோபம் வராது. வந்தால் உள்ளத்திலேயே நின்றுவிடும். உடம்பிலே தோற்றாது. இப்போது கோபம் வந்துவிட்டது. அவன் தன் உணர்வை இழந்தான். ராமனையன்றி வேறு உயர்ந்த பொருளோ, வாழ்வுக்குப் பயனோ இல்லாதவன் பரதன். உயிர் நீங்கிய உடம்பு போல ஆகிவிட்டான் அப்போது. ஆகவே சினம் அவனையும் மிஞ்சித் தன் காரியத்தைப் பார்க்கத் தொடங்கியது. அவன் அறிவுக்குப் புறம்பே அதன் கோலம் வெளியாயிற்று. அதனால் தான் கம்பர் இந்தக் காரியங்களைப் பரதன் செயலாகச் சொல்லவில்லை. அந்த அந்த அவயவங்களின் செயலாகவே சொல்லிவிட்டார்.

**துடித்தன கபோலங்கள்; சுற்றும் தீச்சுடர்**
**பொடித்தன மயிர்த்தொளை; புகையும் போர்த்தது;**
**மடித்தது வாய்; நெடு மழைக்கை மண்பக**
**அடித்தன ஒன்றொடொன்று அசனி அஞ்சவே.**

[பொடித்தன - தோன்றின. அசனி - இடி.]

பெருஞ் சினமாகிய வேகம் உந்தக் கால்களை நிலத்திலே ஓங்கி வைத்தபோது, அவன் காலுக்கு அத்தனை பலம் இல்லாவிட்டாலும் அந்தக் கோபத்துக்கு அளவற்ற ஆற்றல் இருந்தது. அந்த ஆற்றலை அளவெடுத்துக் காட்ட முடியாது. கவிஞன் காட்டுகிறான். பாதங்களை மாறி வைக்கும்போது பூமியும் மேருவும் சுழன்றன. பெருங்கடலில் யானையை ஏற்றி வரும் பெருங் கப்பல் பெரும் புயற்

காற்றால் அலைப்புண்டு சுழல்வது போலச் சுழன்றன. வாராத கோபத்துக்கு அத்தனை ஆற்றல் இருக்கத்தானே வேண்டும் ?

வானவர் அஞ்சினர். அரக்கர் அச்சத்தால் செத்தே போனார்கள். திக்கு யானைகள் பயந்து போயின; அதனால் இடையறாமல் ஊற்றுப்போல அவற்றிடமிருந்து சுரந்து கொண்டிருந்த மதநீர்த் தாரைகள் அடைத்துப் போயின. யமன் தன் கண்ணைப் புதைத்துக் கொண்டான்.

இந்தத் தம்பியின் கோபம் இப்படியெல்லாம் சிலை யோடியது. தவ முனிவன் கோபமும், அரக்கன் கோபமும் இப்படித்தான் எதிரொலி செய்தன. ஆனால் அவற்றின் விளைவு வேறு; இதன் விளைவு வேறு.

பரதன் கோபம் யாருக்கும் தீமையை விளைக்கவில்லை. கைகேயியிடம் சில சொற்களாக விளைந்தது. அப்பால் அது ஆறிவிட்டது. அதன் இடத்தைச் சோகம் மேற் கொண்டது.

பரதன் தன் தாயிடம் கோபமாகப் பேசிய பிறகு, "இனி இந்தப் பாவியிடம் இரேன்" என்று கூறிக் கோசலை யிடம் போகிறான். அப்பொழுதே அக் குணக் குன்றின் கோபம் ஓடிவிடுகிறது. கோசலை அருகில் சென்றவுடன் பூமியில் விழுகிறான். தன் கைகளால் அவள் பாதங்களைப் பற்றிக் கிடக்கிறான்; புலம்புகிறான். அந்தப் புலம்பலைப் பல பாடல்களால் கம்பன் சொல்கிறான்.

இது ஒரு விசித்திரமான கோபம். ஆனாலும் அது ஒரு விதமாக விளைகிறது. பரதன் கைகேயி சொன்னதை ஏற்றுக்கொள்ளாமல் ராமனிடம் போய்ப் பாதுகையைக்

கொணர்கிறுன். அவன் கோபம் நன்மையாகவே விளை கிறது.

இவ்வாறு பலரிடம் கோபமானது கொள்ளும் கோலத்தைக் கம்பனது காவியத்திலே பார்க்கிறோம். ராமன், சீதை, அநுமன் ஆகியோர் கொள்ளும் கோபத் தைக் கோபமென்றே சொல்லக்கூடாது. சிறு காற்று வருவதுபோல வந்து போகின்றது. அறிவிற் சிறந்த அநுமன் கோபம் கைபிசையும் அளவிலே நிற்கிறது. காலத்தைப் பார்த்துக்கொண்டு கரையைக் கடக்காமல் நிற்கும் கடலைப்போல அவன் இருக்கிறுன். சீதையின் கோபம் வெறும் பேச்சாக விளைகிறது. அந்தப் பேச்சும் முரட்டுக் கோபமாக இன்றிச் சோகமும் வீரமும் கலந்து தோற்றுகின்றது. ராமன் கோபம் அவன்பால் ஒரு பாவத்தையும் உண்டாக்கவில்லை. வருணனிடம் காட்டுவது கோபமே அல்ல. பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் குற்றம் செய்த குழந்தையைக் கோபத்திஞலா தண்டிக்கிறுர்? அல்ல. இன்ன தப்புச் செய்ததஞல், இன்ன தண்டனை கொடுக்க வேண்டுமென்று ஆராய்ந்து தண்டனை வழங்கு கிறுர். அதுபோலத்தான் இருக்கிறது ராமன் செயல்.

'வருணன் நாம் வழி வேண்டவும் உண்டு இல்லை என்றுகூடச் சொல்லவில்லை' என்ற நினைவில் நீரிலே தீத் தோன்றினுற் போலக் கோபம் வந்ததாம். கண்கள் சிவந்தனவாம்; புருவம் வளைந்தன. பிறகு வருணன் செய்த பிழையையும் தான் செய்ய வேண்டியதையும் யோசித்துத் தன் கை வில்லை எடுத்து அம்பு எய்கிறுன். இது கோபமா? கோபத்தை ஆட்கொண்டவன் அவன். கோபம் அவனைத் தன் வசப்படுத்தவில்லை. இது உன்னதமான மன இயல்புடையார் நிலை.

கோபம் முதலிய உணர்ச்சிகளைப் பேசுகின்ற பேச்சு வெளிப்படுத்துவதைக் காட்டிலும் பேசாத பேச்சே நன்ருக வெளிப்படுத்துகின்றது. பெருங் கவிஞர்கள் இதை நன்குணர்ந்து பாவங்களால் அந்த உணர்ச்சிகள் வெளியாவதையும், கதாபாத்திரங்களுக்கு ஏற்ற முறையில் அந்த வெளியீட்டில் வேறுபாடுகள் இருப்பதையும் தெளியவைக்கிருர்கள்

# கண்ணீரின் பொருள்

கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாக வழிய அந்தப் பெண்மணி நிற்கிறாள். அவளுக்கு என்ன துக்கமோ தெரியவில்லை. அந்த அழுகைக்குக் காரணம் யாதாக இருக்கலாம்? யாரைப் பார்த்து, எதற்காக அழுகிறாள்? எதிரில் யார் இருக்கிறார்கள் ?

இதென்ன! மனிதர் ஒருவருமே இல்லையே. உலகமெல்லாம் அழிந்தொழியும் நேரத்தில் மகாமயானத்தில் எண்டோள் வீசி நின்று ஆடும் நடராஜனல்லவா குனித்த புருவத்தோடும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்போடும் நிற்கிறான்? ஆனந்தத் தாண்டவம் புரியும் அவன் சந்நிதானத்தில் துக்கம் ஏது? அகிலலோக மரண காலத்திலும் சாவுக்களத்தில் ஆனந்தக்கூத்தைப் புகுத்தும் அவன் ஆனந்தமய ஜோதி அல்லவா? பிச்சை ஏற்பதிலே பேரின்பம் காணும் அவனுடைய உபாசகர்களுக்கும் பிச்சை ஏற்பதே சர்வலோக சாம்ராஜ்யத் தலைமைக்குச் சமானம் ஆகிவிடுகிறதே. அவலட்சணமான பொருள்களெல்லாம் அவனது சம்பந்தத்தால் உலகம் தொழும் பொருள்கள் ஆகிவிடுகின்றன. மரணத்தைத் தரும் நஞ்சு அமுதமாகிவிடுகிறது.

அப்படியிருக்க, அந்த மெல்லியலாள், இன்ப வடிவம் படைத்த பெருமாட்டி, இன்பப் பிழம்பான நடராஜ மூர்த்தியின் சந்நிதானத்திலே துன்பக் குமுறலோடு நிற்பானேன்? இதில் ஏதோ புரியாத சிக்கல், விளங்காத ரகசியம் இருக்கத்தான் வேண்டும்.

ஒருகால் அவள் துக்கப்படவே இல்லையோ என்னவோ! இருக்கலாம். ஆனால் கண்ணீர் பெருக்கெடுக்கிறதே. அது துக்கத்தின் அடையாளம் அல்லவா?

கண்ணீர் துக்கத்தின் அடையாளமாகச் சில சமயங்களில் இருப்பதுண்டு. ஆனால் எல்லா இடங்களிலும் கண்ணீர் துக்கத்தின் விளைவாகவே வருவது அல்ல. ஆனந்தக் கண்ணீரும் உண்டு. ஆனந்த நடராஜ மூர்த்திக்கு முன்னாலே நிற்கும் அவள் விழிநீர் ஆனந்த வெள்ளம் புறம் பொசிகின்ற நிலையைக் காட்டுகிறது. அவள் விழிகளில் நீர் அரும்பக் காரணம் துக்கம் அல்ல; பக்தி உணர்ச்சி.

துக்கத்தினால் அழுபவர்களுடைய உள்ளம் கொதிக்கும். இந்த மெல்லியலாளது உள்ளம் குளிர்ந்தது. தன்னுடைய நடனத்தால் உலகத்தின் சக்திகளையெல்லாம் கரை கடவாமல் ஒழுங்கு பிறழாமல் ஆட்டிவைக்கும் அப்பனைக் கண்டவுடன் அவள் உள்ளம் குளிர்ந்தது. பக்தி உணர்ச்சி உள்ளத்தே எழும்போது உள்ளம் குளிரும். அதன்பின் அந்தக் குளிர்ச்சி வெளியே தெரிந்தது. பக்திக்கும், அதனால் விளைந்த உள்ளக் குளிர்ச்சிக்கும் ரூபம் இல்லை. குணத்துக்கு உருவம் இல்லை. அதைப் பேச்சாலும் விளக்க முடியாது. ஆனால் இங்கே பக்தி கண்ணாலே காணும் பாவங்களை உண்டாக்குகிறது.

உள்ளம் குளிர்ந்த பெண்மணியின் உடலெல்லாம் குபீரென்று புளகம் போர்த்தது. ரோமம் சிலிர்த்ததற்கு மூல காரணம் உள்ளத்தே பெய்த பக்தி மழையினால் விளைந்த தண்மை. அப்பொழுது உள்ளத்தில் விளைந்த அமுதப் பெருக்காற்றை வாய்வழியாகப் பேச்சாகக் கொட்டிவிட வேண்டுமென்று அவள் நினைக்கிறாள். வேகத்தோடு வாயைத் திறக்கிறாள்; நாக்கு எழும்பவில்லையே! பேச்சுத்

தடுமாறுகிறதே! பேச்சுக்கும் அப்பாற் பட்ட உலகத்து நிகழ்ச்சியாகிவிட்ட பிறகு அதை மீட்டும் இந்தச் சம நிலத்திலே பிடித்து இழுத்துக்கொண்டு வர முடியுமா? அவள் உரை தள்ளித் தடுமாறுகிறது. ஊமையாக நிற்கிறாள்.

ஆனால் கண் ஓரளவு கருத்தைப் புலப்படுத்துகிறது. உள்ளத்தில் பொங்கி வழியும் ஆனந்தத்தின் சிறு காலை வெளிப்படுத்துகிறது. நீர் துளித்துத் தாரையாக வழிகிறது. பக்தியின் உருவம் இப்போது பரிபூரணமாகப் புலனாகிறது. அடுத்தபடி இந்த உணர்ச்சி முறுகவே, அவள் தன்னை மறந்து அவசமாகிறாள். குளிரும் உள்ளம், புளகம் போர்த்த உடம்பு, நீர் சொரியும் கண்-எல்லாம் கடந்த நிலையில் செயலற்ற தனிமோன இன்பத்திலே திளைத்து விடுகிறாள். ஆனந்தக் கூத்தன் சந்நிதானப் பெருமைதான் என்னே!

பக்தி என்ற குணத்தைப் பற்றிப் பேச முடியாது. சொல்லுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சி அது. அதைப் படம் எழுதிக் காட்ட வல்லார் யார்? புலவன்தான் வல்லவன். இனிப்பைக் கண்ணாலே பார்க்க முடிகிறதா? ஆனாலும் சர்க்கரையில், பக்ஷணங்களில், மிட்டாயில் கலந்து நிற்கும் அதற்கு, அந்தப் பண்டங்களையே உருவமாக வைத்து எண்ணுகிறோம். ஏழைமையின் படம் ஒன்று போடு என்றால் ஓவியப் புலவன் என்ன செய்கிறான்? கிழிந்த கந்தல், வற்றிய உடல், குழிந்த கண் முதலிய உருவங்களை இணைத்து எழுதிவிடுகிறான். ஏழைமையின் விளைவுகள் எவையோ அவற்றையே அதன் உருவமாக நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

பக்தி என்பது கண்ணாலே காதாலே உணர முடிவதல்ல என்பதைத் தெரிந்துகொண்ட புலவன், அதை மெய்ப்பாடுகளால் புலப்படுத்துகிறான். அவன் சொல்லாலே சித்திரம் வரைந்து நம் உள்ளத்திரையிலே அமையும்படி செய்கிறான்.

பக்தி என்னும் குணத்தின் உருவத்தை அழகான நிலைக்களத்தில் வைத்துப் புலவன் காட்டுகிறான். வெள்ளம் நிறைந்த தாமரை மலர்ந்த வயல்கள் சூழ்ந்த தில்லைத் திருச்சிற்றம்பலத்திலே ஆனந்த நடனம் செய்யும் எம்பெருமானைக் கொணர்ந்து நிறுத்தி, ஒரு மெல்லியலாளைக் கொணர்ந்து அப்பிரானுடைய பூந்தாமரைத் திருவடிகளைத் தொழவைத்து நாடக பாத்திரங்களைத் தயார் செய்து விடுகிறான்.

உள்ளம் குளிர்ந்த பக்குவத்தில் அங்கே நிகழும் ஆனந்தக் கூத்தை, அந்த மடமங்கையின் உள்ளே நிகழும் பக்திப் பெருக்கை, பேசாத பேச்சாகிய பாவங்களால் புலப்படுத்துகிறான்.

> **உள்ளம் குளிர, உரோமம் சிலிர்த்துஉரையும்**
> **தள்ள, விழி நீர்அரும்பத் தன்மறந்தாள்—வெள்ளவயல்**
> **தேந்தா மரைமலர்சூழ் தில்லைத் திருநடஞ்செய்**
> **பூந்தா மரைதொழுத பொன்.**

[உரையும் தள்ள-பேச்சானது குழற. தன் மறந்தாள்-தன்னை மறந்து அவசமானாள். தேந்தாமரை-தேன் நிறைந்த தாமரை. திரு நடஞ் செய் பூந்தாமரை-நடனம் செய்கின்ற நடராஜப் பெருமானுடைய தாமரையைப்போன்றதிருவடி. பொன்—லக்ஷ்மியைப் போன்ற பெண்மணி.]

**ப**க்தியின் வெளிப்பாட்டில் முக்கியமானது விழி நீர் அரும்புவது. உண்மையான அன்புக்குக் கண்ணீர் அடையாளம் என்று திருவள்ளுவர் சொல்கிறார்.

**அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.**

[அன்புக்கும் அடைக்கின்ற தடை உண்டா? எத்தனை அடக்கினாலும் அன்புடையவர்களின் சிறு கண்ணீர்த் துளிகள் அன்பை வெளிப்படுத்திவிடும்.]

பக்தியினால் விளையும் இந்தக் கண்ணீர் ஆனந்தத்தின் குறிப்பு என்பதைத் தாயுமானவர் சொல்லுகிறார். பேரானந்தம் உற்றவர்களுக்கே கண்ணீரும் கம்பலையும் உண்டாகுமாம்.

**பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை**
**பெறாப்பேதை அறிவாளோ? பேரானந்தம்**
**உற்றவர்க்கே கண்ணீர்கம் பலை உண்டாகும்.**

இந்தக் கண்ணீரின் ரகசியத்தை உணர்ந்த பக்தர்களும் ஞானியரும் இதை மிகவும் சிலாக்கியமாகப் பாராட்டியிருக்கிறார்கள். அன்புக்கு அடையாளமாகிய இந்தக் கண்ணீர் கடவுளுக்கு மிகவும் உவப்பானதென்று சிறப்பிக்கிறார்கள்.

எல்லா உலகங்களுக்கும் தனி நாயகியான பரமேசுவரிக்கு அன்பர்களிடத்தில் மாறாத கருணை உண்டு என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அன்பர்களின் அன்பையும் அவர்கள் அன்பிலே அம்பிகைக்கு உள்ள ஈடுபாட்டையும் ஒரு புலவர் விளக்க வருகிறார். அன்பிலே கனிந்து நிற்பவரை அறிவதற்கு இன்னது அடையாளம் என்பது நமக்குத் தெரியுமே!

அம்பிகையின் திருவுள்ளத்துக்கு உவப்பான பொருள் எது என்று ஆராய வந்தவரைப் போல ஆரம்பிக்கிறார் புலவர். தொடங்கும்போதே அவர் ஆச்சரியத்தில் மூழ்குகிறார். "என்ன ஆச்சரியம்!" என்று சொல்லிக் கொண்டே ஆரம்பம் செய்கிறார். சகலலோக மாதாவாகிய அம்பிகை திருவுள்ளம் வைத்தால் அவள் திருமேனிப் பெருமைக்கும் சிறப்புக்கும் ஏற்ற திருமஞ்சன நீரா இல்லை? வானுலகிலிருந்தும், பூவுலகிலிருந்தும்—பதினான்கு லோகங்களிலிருந்தும் தீர்த்தம் வருமே. உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற நதிகளெல்லாம் அவளுக்குச் சொந்தம். பாலாகவும் நெய்யாகவும் தயிராகவும் பொங்கி அலைமோதுகின்ற சப்த சாகரங்களும் அவள் விரும்பினால் திருமேனிக்குத் திருமஞ்சனமாகும். இப்படி இருக்க, இவ்வளவினும் அவள் உள்ளம் செல்லவில்லையாம். அதை நினைக்கையிலே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அன்பாளர் கண்ணிலிருந்து அரும்பும் நீரிலே திருமஞ்சனம் ஆடுவது அப் பிராட்டிக்கு உவந்த செயலாம். புலவர் சுருக்கமாகச் சொன்னாலும் நிரம்ப விஷயத்தை வைத்துப் பாடியிருக்கிறார்.

**என்!பாவும் ஆறு கடல் ஏழு இருந்தும் என் அம்மை**
**அன்பாளர் கண் அருவி ஆடுவது திருவுள்ளம்!**

[பாவும் – பரவிய.]

இதைக் காட்டிலும் அதிகமாக அந்தக் கண்ணீரைச் சிறப்பிக்க முடியுமா?

# அபிநயங்கள்

**நா**டகத்தில் நடிப்பவர்களுக்கு ஆடல் பாடல் அழகு என்ற மூன்று இலக்கணங்கள் சிறந்திருக்க வேண்டும் என்று கூறுவர். ஒரு பாத்திரத்தின் நடிப்பில் ரஸம் தோன்றவேண்டுமானால் அந்த ரஸத்திற்கு இசைந்த செயலும் சொல்லும் அமையவேண்டும். காவியங்களில் அமைந்திருக்கும் குறிப்புக்களைவிட நாடகத்தில் உள்ள குறிப்புக்கள் கண்டோர் உள்ளத்தே நன்றாகப் பதியும். அதனால்தான் அதைத் திருச்ய காவியம் என்று புலவர் கூறுவர்.

நாடகத்தில் நடிப்பவர் தம் பேச்சாலும் பாவத்தாலும் சுவையை உண்டாக்குவர். அப்படி உண்டாக்கும் சுவைகள் ஒன்பது. அந்த அந்தச் சுவைகளுக்குப் பொதுவாகச் சில பாவங்கள் உண்டு. அவற்றை நாடக நூல் செய்தவர்கள் ஒரு வகையாக வரையறுத்திருக்கிறார்கள். இந்த வரையறை பொதுவாக இருந்தாலும் பாத்திரங்களின் இயல்புக்கு ஏற்றபடி அவற்றின் விரிந்த பகுதிகளில் வேறுபாடு இருக்கும்.

சுவைகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற அபிநயங்களை நாடக இலக்கணம் சொல்கிறது. உடம்பினிடத்தே தோற்றும் சத்துவங்களையும் பிற தோற்றங்களையும் காணும்போது, 'இவன் இன்ன மன இயல்பைப் புலப்படுத்துகிறான்' என்று தோன்றும்.

வீரச்சுவை யபிநயம், பயச்சுவை யபிநயம், இழிப்புச் சுவை யபிநயம், அற்புதச்சுவை யபிநயம், இன்பச்சுவை

யபிநயம், அவலச்சுவை யபிநயம், நகைச்சுவை யபிநயம், நடுவு நிலைச்சுவை யபிநயம், உருத்திரச்சுவை யபிநயம் என்று சுவைக்குரிய அபிநயங்களை ஒன்பதாகப் பிரித்திருக் கிறார்கள்.

வீரன் ஒருவன் தன் வீரம் புலப்பட நிற்கிறான். கதையில் அப்படி ஒரு கட்டம் வருகிறது. நடிப்பவன் என்ன என்ன அபிநயங்களைச் செய்ய வேண்டும்?

அவன் புருவங்கள் நெரியும்; கண் சிவக்கும்; கையில் வாளை இறுகப் பிடிப்பான்; பல்லைக் கடிப்பான்; உதட்டை மடிப்பான்; நெற்றி சுருங்கும்; அவன் பேச்சில் உறுதி தொனிக்கும்; பகைவர்களை அலட்சியம் செய்வான். இன்னும் இவற்றைப்போலச் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற அபிநயங்கள் அவன் வீர உணர்ச்சியை வெளிப்படுத்து கிறான் என்பதற்கு அடையாளங்கள். இவ்வாறு நடிப் பதனால் வீரச்சுவை தோன்றும்.

வீரச்சுவை யபிநயம் விளம்புங் காலை
முரிந்த புருவமும் சிவந்த கண்ணும்
பிடித்த வாளும் கடித்த எயிறும்
மடித்த உதடும் சுருட்டிய நுதலும்
திண்ணென உற்ற சொல்லும் பகைவரை
எண்ணால் செல்லா இகழ்ச்சியும் பிறவும்
நண்ணும் என்ப நன்குணர்ந் தோரே.

இதில் "பிறவும்" என்று இலக்கணக்காரர் இடம் கொடுத்திருக்கிறார். கலைஞன் ஏதோ கட்டுப்பாட்டுக்குள் அடங்கிச் சூத்திரப் பொம்மைபோல ஒரே மாதிரி செய்வ தாக எண்ணக்கூடாது. அவனுடைய மனோதர்மத்துக்கு ஏற்பச் சந்தர்ப்பத்தை அநுசரித்துத் தன் கலைத் திறத்தைக்

காட்ட இடம் வேண்டும். அப்பொழுதுதான் அது கலையாகும். "பிறவும்" என்பது இத்தகைய சுதந்தரம் கலைஞனுக்கு உண்டு என்பதைக் காட்ட நிற்கின்றது.

பயந்து போனவனைப்போல நடிப்பவனுக்கு உடம்பு ஒடுங்கி நடுங்கும். கண் கலங்கும். உள்ளமும் கலங்கும். மறைந்து மறைந்து நடப்பான். கையை எதிரே பாதுகாப்பாக நீட்டுவான். பரக்கப் பரக்க விழிப்பான்.

**அச்ச அவிநயம் ஆயும் காலை**
**ஒடுங்கிய உடம்பும் நடுங்கிய நிலையும்**
**அலங்கிய கண்ணும் கலங்கிய உளனும்**
**கரந்துவர லுடைமையும் கையெதிர் மறுத்தலும்**
**பரந்த நோக்கமும் இசைபண் பினவே.**

அருவருப்பாகிய பீபத்ஸ ரஸத்தை உண்டாக்க மேற்கொள்ள வேண்டிய அபிநயங்கள்: கண் இடுங்குதல்; பல்லை வெளிக் காட்டுதல்; முகம் ஒடுங்குதல்; உடம்பு சோர்தல்; பேச்சு நிரம்பாதிருத்தல் முதலியன.

இப்படியே ஒவ்வொரு சுவைக்கும் உரிய அபிநயங்களை நூல்கள் விரித்துரைக்கின்றன.

* * *

**நா**டகங்களில் விலக்குறுப்பு என்று பதினொரு பகுதிகளைச் சொல்வார்கள். பெரும்பாலும் நாடகக் கதையோடு தொடர்புடையனவாக அவை இருக்கும். நாடகத்தின் முக்கியமான கருத்து, நாடகத் தலைவரின் வகை, நாடகக் கதையின் தொடர்ந்த போக்கு, ரஸம், பாவம், அவிநயம், சொல், வண்ணம், வரி, கதை வந்த வழி ஆகியவை சம்பந்தமான பகுதிகள் அவை. அந்தப் பதி

ஞன்கு உறுப்புக்களில் சுவை என்பது ஒன்று. அது மேலே சொன்ன ஒன்பது வகைப்படும். ஒவ்வொரு சுவைக்கும் உரிய அபிநயங்கள் பலவாகும். வார்த்தைகளாக வரும் அபிநயங்களைக் காட்டிலும் பாவமாகப் புலப்படும் அபிநயங்களே ரஸத்தை உண்டாக்க முக்கியமானவை. இந்தச் சுவைகளை வெளிப்படுத்தும் பாவங்கள் உடம்பில் தோற்றும்; உடம்பைக் காட்டிலும் முகத்தில் நன்ருகத் தோற்றும்; முகத்தைக் காட்டிலும் மிகுதியாகக் கண்ணிலே தோற்றும்; கண்ணினும் அதிகமாகக் கடைக் கண்ணில் தோற்றும். இதைச் சிலப்பதிகாரத்தின் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் பின்வருமாறு சொல்கிருர்: 'அச்சுவைகளில் எண்ணம் வந்தால் தோற்றும் உடம்பில்; உடம்பின் மிகத் தோற்றும் முகத்து; முகத்தின் மிகத் தோற்றும் கண்ணில்; கண்ணின் மிகத் தோற்றும் கண்ணின் கடையகத் தென்றவாறு.'

கண்களால் அமைந்த அவிநயம் எல்லாச் சுவைகளுக்கும் மிகவும் முக்கியமானது. வீரச் சுவைக்குச் சிவந்த கண்ணும், அச்சச் சுவைக்கு அலங்கிய கண்ணும், அருவருப்புக்கு இடுங்கிய கண்ணும், அற்புதத்துக்கு இமைத்தலும் விழித்தலும், காமத்துக்கு அழகு தோற்றும் கடைக்கண்ணும், அவலச் சுவைக்கு நீர் பொழியும் கண்ணும், நடுவுநிலைக்கு அமைதியான கண்ணும், உருத்திரத்திற்குச் சிவந்த கண்ணும் இலக்கணங்களாக வருகின்றன.

அவிநயம் என்ற உறுப்பு ஒன்று தனியாக உள்ளது. தலைமை வகையால் ஒன்பதென்று வகுத்துக்கொண்ட இயல்புகளுக்குப் புறம்பே வேறு பல இயல்புகளைக் குறிக்கும் பாவங்கள் உண்டு. அவற்றை வெளிப்படுத்தும்

அபிநயங்களையே 'அவிநயம்' என்று உறுப்பாக வகுத்தார்கள். அது இருபத்துநான்கு வகைப்படும்.

சந்தேகம் கொண்டவன், சோம்பேறி, கள் குடித்தவன், உவகையுள்ளவன், பொறுமைக்காரன், இன்பமுற்றவன், தெய்வமேறியவன், ஞஞ்ஞையுற்றவன், சம்மதக் குறிப்புடையவன், தூங்குபவன், விழித்தவன், செத்தவன், மழையில் நனைந்தவன், பனியில் அகப்பட்டவன், வெயிலில் வந்தவன், வெட்கப்படுபவன், வருந்துபவன், கண்வலிக்காரன், தலைவலிக்காரன், நெருப்புக் காயம் பட்டவன், ஜலதோஷம் பிடித்தவன், வெப்பமுற்றவன், விஷம் குடித்தவன் என்ற இருபத்துநாலு நிலையில் உள்ளவர்களைப்போல நடிப்பதற்கு ஏற்ற அபிநயங்கள் இன்னவை என்று நாடக இலக்கணம் சொல்லுகிறது.

இதோ ஒரு மனிதன் வருகிறான். கையை நொடித்துக்கொண்டே பல கொட்டாவி விடுகிறான். அடிக்கடி சோம்பல் முரிக்கிறான். சிடுசிடுவென்று விழுகிறான். திடீர் திடீரென்று கீழே உட்கார்ந்து மூதேவி பிடித்தவன் மாதிரி கிடக்கிறான். நடக்கிறபோது தள்ளாடி நடக்கிறான்.—இவன்தான் சோம்பேறி. மடி என்பது சோம்பேறிக்குப் பெயர். மடியின் அவிநயத்தை இலக்கணம் கூறுகிறதைப் பாருங்கள்.

**மடியின் அவிநயம் வகுக்குங் காலை**
**நொடியொடு பலகொட் டாவிமிக உடைமையும்**
**மூரி நிமிர்த்தலும் முனிவொடு புணர்தலும்**
**காரண மின்றி ஆழ்ந்துமடிந் திருத்தலும்**
**பிணியு மின்றிச் சோர்ந்த செலவோடு**
**அணிதரு புலவர் ஆய்ந்தனர் என்ப.**

இப்படிப் புலவர்கள் ஆராய்ந்து வகைப்படுத்தியிருக்கிறார்களாம்.

இதோ ஒரு பேர்வழி கையை வீசி வீசி எறிகிறான். வாயை மடித்துப் பல்லைக் கடிக்கிறான். புருவம் துடிக்கிறது. உடம்பு நடுங்குகிறது. முகம் சிவக்கிறது. தலை நிமிர்ந்து பெருமிதத்தோடு நிற்கிறான்.— இவன்தான் தெய்வ ஆவேசம் வந்தவன்.

தெய்வம் உற்றோன் அவிநயம் செப்பின்
கைவிட்டு எறிந்த கலக்கம் உடைமையும்
மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழில் உடைமையும்
துடித்த புருவமும் துளங்கிய நிலையும்
செய்ய முகமும் சேர்ந்த செருக்கும்
எய்தும் என்ப இயல்புணர்ந் தோரே.

உண்மையாகவே ஆவேசம் வந்த ஒருத்தியைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வருணிக்கிறார். கண்ணகியின் தோழியாகிய தேவந்திகை என்பவள் 'தெய்வமுற்றெழுந்தாள்.' அவளுடைய கொத்தாக இருந்த கூந்தல் குலைந்து பின் வீழ்ந்தது. புருவம் துடித்தது. சிவந்த இதழ்களையுடைய வாயை மடித்துப் பல்லை வெளிக் காட்டினாள். வார்த்தைகள் மயங்கிவந்தன. முகம் வெயர்த்தது. கண் சிவந்தது. கையை விட்டெறிந்தாள். காலைத் தூக்கித் தூக்கி வைத்தாள். யாருக்கும் அறிய முடியாத தெளிவும் மயக்கமும் உண்டாயின. நாக்கு உலர்ந்தது.

வெட்கமுடையவன் போல நடிப்பதற்குரிய அவிநயங்கள் வருமாறு: குனிந்த தலை, மறைந்த செய்கை, வாடிய முகம், வளைந்த உடம்பு, மங்கிய ஒளி, கீழ்ப்பார்வை.

கண்வலி வந்தவன் போல நடிக்க வேண்டுமானால், கண்ணீர்த் துளியை விரலில் வழித்துத் தெறிக்கவேண்டும்; புருவம் வளைய வேண்டும்; முகம் வாடியிருக்க வேண்டும்; வெறும் வெளியைப் பார்த்தால் கண் கூசவேண்டும்.

இந்த மனிதன் தலையைச் சதா இப்படியும் அப்படியும் அசைத்துக்கொண்டே இருக்கிறான். குந்தி வளைந்து உட்கார்கிறான். வேர்வை வருகிறது. கட்டை விரலால் நெற்றியை இடுக்கிக்கொண்டிருக்கிறான. கண் ஒடுங்கியிருக்கிறது.—இவன்தான் தலைவலிக்காரன்.

கொஞ்சிய வார்த்தைகள், பல்லைக் கடிப்பது, பஞ்சு போல வாயில் நுரை ததும்பல், மனிதர்களை மிகவும் இரக்கமாகப் பார்த்தல், ஏதோ வார்த்தை சொல்லுபவனைப் போலத் தோன்றினாலும் ஒன்றும் சொல்லாமல் இருப்பது. —இவை நஞ்சுண்டவன் அபிநயம்.

இவ்வாறு எல்லா அபிநயங்களையும் சொல்லிய நாடக இலக்கணக்காரர், "சொல்லிய அன்றியும் வருவன உள வெனின், புல்லுவழிச் சேர்த்திப் பொருந்துவழிப் புணர்ப்ப" என்று முடிக்கிறார்; 'மேலே சொல்லிய இலக்கணங்களோடல்லாமல் வேறு அபிநயங்கள் உண்டானால் எந்த எந்த இடங்களில் இணையுமோ, அந்த அந்த இடங்களில் எப்படிச் சேர்த்தால் நன்றாக இருக்குமோ அப்படிப் பொருத்துவார்கள் புலவர்கள்' என்பது அதன் அர்த்தம். இதுவும், கலைஞன் தன் மனோதர்மத்துக்கு ஏற்றபடி பேசாத பேச்சாகிய அபிநயங்களைப் பொருத்தமாகச் சேர்த்துக்கொள்ளும் சுதந்தரம் உடையவன் என்பதை விளக்குகிறதல்லவா?

# முத்திரைகள்

**பு**த்த பகவான் புத்தர் ஆவதற்கு முன் பல பிறவிகளை எடுத்தாரென்பது பௌத்தர்களுடைய கொள்கை. புத்த பதவிக்கு ஏற்ற தகுதியைப் படிப்படியாகப் பெற்றுவந்த அப் பிறவிகளில் அவரைப் போதிசத்துவர் என்று வழங்குவர்.

ஒரு பிறவியில் போதிசத்துவர் ஒரு பெண்மணியைக் கண்டார். அவள் மணமானவளா, ஆகாதவளா என்று தெரிந்து கொள்ளும் நோக்கம் அவருக்கு உண்டாயிற்று. "நான் இவளை ஹஸ்த முத்திரை வாயிலாக விசாரிப்பேன்" என்று எண்ணிக் கையை முஷ்டியாகப் பிடித்தார். அவளும் தனக்கு மணமாகவில்லை யென்பதைப் பேசாத பேச்சினால் குறிப்பித்தாள்; கையை விரித்துப் புலப் படுத்தினாள்.

இந்த இரண்டு வகைக் குறிப்பும் உள்ளக் கருத்தை வெளியிட உதவின. கைகளால் குறிப்பாகக் கருத்தைப் புலப்படுத்துவது ஒரு கலை. போதிசத்துவர் முஷ்டி என்ற முத்திரையினால் கணவன் என்ற பொருள் தோன்றச் செய்தார்.

விரல்களை இறுக மூடிப் பிடிக்கும் அந்தக் குறிப்பு, பற்றுக்கோடு என்பதைப் புலப்படுத்தி, பிறகு பற்றுக் கோடாகிய கணவனைக் குறிப்பித்தது. அவளோ இல்லை யென்பதை அறிவுறுத்திக் கையை விரித்தாள். அது பதாகை யென்னும் முத்திரையாக அபிநயக் கலையில் சொல்லப்படும்.

போதிசத்துவர் காட்டிய முஷ்டி என்ற முத்திரைக்கு இலக்கணம், நான்கு விரல்களையும் இறுக முடக்கி அவற்றின் மேலே பெரு விரலை வைத்துப் பிடிப்பது.

முட்டி யென்பது மொழியுங் காலைச்
சுட்டு நடுவிரல் அநாமிகை சிறுவிரல்
இறுக முடக்கி இவற்றின்மிசைப் பெருவிரல்
முறுகப் பிடித்த முறைமைத்து என்ப.

[முஷ்டி யென்னும் முத்திரையானது சொல்லுமிடத்து, சுட்டு விரலையும், நடு விரலையும், மோதிர விரலையும், சுண்டு விரலையும் இறுக மடக்கி, இவற்றின் மேலே கட்டை விரலை அழுத்திப் பிடித்த இலக்கணத்தை உடையது என்று ஆசிரியர் கூறுவர்.]

இந்த முத்திரையானது, பிடிக்கும் அமைப்பிலிருந்து வெவ்வேறு பொருளைத் தரும். இரண்டு கையாலும் முஷ்டி முத்திரையைத் தன்னை நோக்கிப் பிடித்தால், தேர்ப்பாகனைக் குறிக்கும். ரத சாரத்தியம் செய்யும் போது, குதிரைக் கயிற்றை இரு கைகளாலும் பிடித்திருக்கும் கோலத்தை அது நினைப்பூட்டுகிற தல்லவா?

இதே கோலம் இழுக்கும் தொழிலையும், பாசம் பிடிக்கும் யமனையும் குறிக்கும்.

தனக்குக் கணவன் இல்லை யென்பதைக் குறிக்க அந்த மங்கை பதாகை என்னும் முத்திரையைக் காட்டினாள். நான்கு விரலும் ஒட்டி நிமிர்ந்து நிற்க, கட்டை விரல் மாத்திரம் சற்று வளைந்து நிற்பது பதாகை யென்னும் முத்திரை.

பதாகை யென்பது பகருங் காலைப்
பெருவிரல் குஞ்சித்து அலர்விரல் நான்கும்

**மருவி நிமிரும் மரபிற் றென்ப.**

[பதாகை யென்பதைச் சொல்லுமிடத்து, கட்டை விரல் வளைந்து மற்ற விரல்கள் நான்கும் ஒருங்கே நிற்கும் இலக்கணத்தை உடையது என்று கூறுவர் ஆசிரியர்.]

பற்றிக்கொள்ள ஒன்றும் இல்லாத குறிப்பை இந்த முத்திரை காட்டுகிறது. யாரிடமாவது ஒன்றை நாம் கேட்டு, அவன் இல்லையென்று கூறினால், "கையை விரித்து விட்டான்" என்று சொல்வது இங்கே நினைப்பதற்குரியது.

இல்லையென்று சொல்லி யாசகம் செய்வதையும் இந்த முத்திரை அறிவிக்கும்.

**"துணைக்கரம் விரித்து நீட்டி"**

என்று யாசகத்துக்கு அங்கமாக இந்தக் கோலத்தை ஒரு புலவர் சொல்லியிருக்கிறார்.

இந்த முத்திரைகளைக் கைகள் என்று தமிழில் வழங்குவர். அபிநயங்களை முகத்தினாலும் கண்களாலும் கைகளாலும் பிற அங்கங்களாலும் காட்டுவது கலைத்திறன். இந்த அபிநயத்தை ஆங்கிகாபிநயம் என்று தனிப்பிரிவாகச் சொல்வர். அங்கங்களால் காட்டும் அபிநயம் என்பது அதன் பொருள்.

கைகளாலே காட்டும் அபிநயங்களை இரண்டு வகையாகப் பிரித்திருக்கிறார்கள்: ஒரே கையினால் காட்டுவன; இரண்டு கையாலும் காட்டுவன. ஒரு கையாலே காட்டுவனவற்றைப் பிண்டியென்றும், ஒற்றைக் கை யென்றும், இணையா வினைக்கை யென்றும் சொல்லுவர். இரு கைகளையும் சேர்த்துச் செய்யும் அபிநயங்களைப் பிணையல்

என்றும், இரட்டைக்கை யென்றும், இணைக்கை யென்றும் கூறுவர்.

ஒற்றைக் கைகள் முப்பத்து மூன்று வகைப்படு மென்று அடியார்க்கு நல்லார் சொல்கிறார். அந்த முப்பத்து மூன்றில் மேலே சொன்ன கதையில் வரும் இரண்டும் அடங்கும். விரித்த பெருங்கொடிபோல இருத்தலின் பதாகை என்ற பெயர் ஒரு முத்திரைக்கு வந்தது. பதாகை - பெருங்கொடி. கத்தரியைப் போலத் தோற்றுவதனால் ஒரு முத்திரைக்குக் கத்தரிகையென்ற பெயர் வந்தது. இளம் பிறையைப்போல இருப்பதனால் இளம்பிறையென்றும், கிளி மூக்குப் போல்வதனால் சுகதுண்டமென்றும், மொட்டுப்போல இருப்பதால் முகுள மென்றும் சில முத்திரைகள் பேர்பெற்றன. இப்படியே மற்றவற்றின் பெயர்களும் உருவ ஒற்றுமையாகிய காரணத்தால் அமைந்தன.

முப்பத்து மூன்று ஒற்றைக் கைகள் வருமாறு:— பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, பதும கோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிர சூடம், பிசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகர முகம், வலம்புரி.

இரட்டைக் கைகளால் காட்டும் முத்திரைகள் பதினைந்து வகைப்படும்.

ஒற்றைக்கையால் காட்டும் பதாகையை இரண்டு கையாலும் காட்டி இணைத்தால் அது அஞ்சலியாகும்.

கையோடு கை ஒட்டினாற்போல் சேர்த்து நிறுத்துவது கும்பிடும் குறி; அதையே அஞ்சலியென்கிறார்கள். உள்ளே குழிந்து புறங்கைகள் புடைக்கக் குவித்தால் அதைப் புஷ்பாஞ்சலி யென்பர். பூஜை செய்யும்போது புஷ்பத்தைக் கைக்குள் வைத்துக்கொண்டு மந்திரம் சொல்வது வழக்கம். அப்போது குவிக்கும் கரநிலை புஷ்பாஞ்சலி முத்திரையாகும். இரண்டு கைகள் இணைந்தபொழுது புஷ்பாஞ்சலி ஆகும்; இரண்டையும் தனித் தனியே பிரித்தால் குடங்கை யென்ற முத்திரையாகிவிடும்; குழிந்த கையென்பது அதன் பொருள். இணையாமல் நின்றால் குடங்கை; அது பாம்பை நினைவுறுத்தும்; ஜலத்தைக் குறிக்கும். இணைந்து நின்றால் புஷ்பாஞ்சலி. இப்படியாக இரு கையும் இணைத்துக் காட்டும் இரட்டைக் கைகள் பதினைந்து வருமாறு :

அஞ்சலி, புஷ்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகர்வருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புஷ்ப புடம், மகரம், சயந்தம், அபயஹஸ்தம், வர்த்தமானம்.

கைகளின் வகைகளையும் பொருளையும் வெவ்வேறு விதமாக உணர்த்தும் நூல்கள் பல உள்ளன. இந்தக் கைகளை இன்ன இன்ன சமயத்தில் உபயோகிக்கவேண்டுமென்ற வரையறையும் உண்டு.

தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் மாதவி அரங்கேறிய செய்தியைச் சொல்லுமிடத்தில் இவற்றைப் பற்றி ஆசிரியர் குறித்துச் செல்கிறார். அதற்கு உரை விரிக்கும் அடியார்க்கு நல்லார் கைகளின் இலக்கணங்களை மேற்கோட் சூத்திரங்களுடன் விளக்குகிறார். அந்தச் சூத்திரங்கள் இன்ன நூலில் உள்ளன என்று இப்போது

தெரியவில்லை. வடமொழியில் பரதருடைய நாட்டிய சாஸ்திரமும், நந்திகேச்சுவரர் இயற்றிய அபிநய தர்ப்பண மும் பிறவும் முத்திரைகளைப் பற்றி விரிவாகச் சொல் கின்றன.

மனித சமுதாயத்தில் உள்ளக் கருத்தைப் புலப்படுத் தவும் தொழிற்படவும் கை உபயோகப்படுகின்றது. அகத்து நிகழ்ச்சியை இயற்கையாகப் புலப்படுத்துவது கண். செயற்கையாகப் புலப்படுத்துவது கை.

தினந்தோறும் நமது வாழ்வில் கைகள் பல பல குறிப்பைக் காட்டுகின்றன. "போ போ" என்று சொல் லும்போது கையை ஒருவிதமாக அசைக்கிறோம்; "வா வா" என்பதையும் கைகளின் அசைவினால் புலப்படுத்து கிறோம். "ஏன், என்ன, ஏது?" என்ற கேள்விகளைக் கையை ஆட்டிப் பேசாத பேச்சால் தெரியவைக்கிறோம். அடித்துவிடுவேன், நசுக்கிவிடுவேன் என்பதைக் குத்துவது போலப் பாவனை செய்து காட்டுகிறோம். கூடாது, வேண் டாம் என்று வாய் சொல்வதற்கு முன்பே கை அசைந்து சொல்கிறது. விரல்களின் நுனியைக் கூட்டி வேகமாக விடுகிறோம்; வியர்த்தம், வீண் என்பதை வார்த்தைகளைக் காட்டிலும் பலமாக அந்தக் குறிப்பு உணர்த்துகிறது.

இத்தகைய குறிப்புக்களை மனிதன் செய்வதைக் கண்டு கண்டு, கலைஞர்கள் முத்திரைகளை வகுத்திருக்கவேண்டும். கண்ணாலே காணத்தக்க பொருளைச் சுட்டும் கைகளும், கருத்தைக் குறிக்கும் கைகளும் வகுப்பதற்கு மனித சமு தாயம் பேசாத பேச்சிலே நிகழ்த்தும் அபிநயங்களே மூலம்.

அபிநயக் கலையில் வரும் முத்திரைகளையன்றி, பூஜா தந்திரங்களிலும் பல முத்திரைகள் உண்டு. ஆகம சாஸ்திரங்களில் அந்த முத்திரைகளைக் காணலாம். பாலி முதலிய கீழ்த்திசைத் தீவுகளில் உள்ள மக்கள் இந்தியாவிலிருந்து சென்றவர்களின் பரம்பரையினரென்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிறார்கள். அத்தீவுகளில் உள்ள சிற்பங்களும் ஓவியங்களும் இதற்கு ஆதாரங்களாவது போல, அங்கே பூசாரிகள் பூஜை செய்யும்போது காட்டும் முத்திரைகள் இந்நாட்டுப் பூஜா முத்திரைகளை ஒத்திருத்தலும் ஒரு சாட்சியாக நிற்கிறது.

இவ்வாறு, வாழ்க்கையில் பேசாத பேச்சாகிய குறியீடுகளால் காட்சிப் பொருளையும் கருத்துப் பொருளையும் மனிதன் முதலில் உணர்த்தலானான்; அதை உணர்ந்த கலைஞர்கள் முத்திரைகளையும் பிற அபிநயங்களையும் வகுத்து அபிநயித்துக் கலையின்பம் விளைக்கிறார்கள்; பூஜை செய்யும் தந்திர நூல் வல்லாரும் முத்திரைகளை வழிபாட்டுக் கருவிகளில் ஒரு வகையாகக் கொண்டு பூஜை செய்கிறார்கள். கலை, வழிபாடு, வாழ்க்கை—எங்கும் பேசாத பேச்சுக்கு மதிப்பு இருக்கிறது.

# உலகம் பேசுகிறது

**பே**சுகிற பேச்சைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் நாம் ஓரளவு வல்லவர்களாக இருக்கிறோம் என்பது நம் எண்ணம். வெள்ளைப் பேச்சாக இருந்தால் தெரிந்து கொள்ளலாம். அப்படியில்லாமல் ஆழ்ந்த கருத்துடைய பேச்சாக, அலங்காரமுள்ள பேச்சாக, அறிவுள்ள பேச்சாக இருந்தால் ஓடுகிற ஓட்டத்திலே கேட்டுப் புரிந்து கொள்ள முடியாது. ஓட்டத்தைத் தணித்துக் கொண்டு கவனித்தால் அத்தகைய பேச்சின் பொருள் உள்ளத்தில் ஊறத் தொடங்கும். பேச்சின் ஆழம் அதிகமாக ஆகக் கேட்பவனுடைய பொறுமையும் ஒருமைப்பாடும் அதிகமாக இருந்தால்தான் பொருளுணர்ந்து இன்புறலாம்.

ரசிகத் தன்மை மிக்கவர்களுக்குப் பேசுபவர்களுடைய குறிப்பு எளிதிலே விளங்கும். அத்தகைய கூட்டத்தில் புல்வர்கள் பேச வேண்டுமென்று விரும்புவார்கள்.

பேசுகின்ற பேச்சின் சுவையை அறிவதற்கே அறிவு வளமும் ரசிகத் தன்மையும் வேண்டுமானால், பேசாத பேச்சின் உயர்வை உணர அறிவுப் பக்குவம் மிகுதியாக வேண்டும். சிறந்த ரசிகர்களாகிய கவிஞர்களும், அறிவு வளம் பெற்ற தத்துவதரிசிகளும் பேசாத பேச்சை உணரும் வன்மை படைத்திருக்கிறார்கள். உலகம் முழு வதுமே அவர்களுடன் பேசாமல் பேசுகிறது. "மரத்தில் உள்ள ஒவ்வோர் இலையும் ஆண்டவன் புகழைச் சொல்லு கின்றது" என்று ஒரு மெய்ஞ்ஞானி இயம்புகிறார்.

மலையும் மலையருவியும், காடும் காட்டுத் தீயும், வயலும் வயற்சேறும், கடலும் கடற்கரையும் கவிஞனோடு அந்தரங்கமாகப் பேசாமல் பேசுகின்றன. அவனுடன் பேசாத பொருளே இல்லை. ஒரு புலவர் பலா மரத்தைப் பார்த்தார்; மாமரத்தைக் கண்டார்; பாதிரி மரத்தைக் கண்ணுற்றார். பலாமரம் தளிர்த்து இலைவிட்டது; திடீரென்று கொத்துக் கொத்தாகப் பிஞ்சுகளை விட்டது. கவிஞர் இந்தக் காட்சிகளைக் கண்டார். மாமரம் தளிரீன்று இலை முதிர்ந்து அரும்பு முகிழ்த்தது. பூத்துக் குலுங்கியது. பின் காய்த்தது. இந்த நிகழ்ச்சிகளையும் கவிஞர் கண்டார். வேனிற் காலத்தில் தழைத்து வளர்ந்த பாதிரி மரம் கிளை முழுவதும் பூவாகச் சொரிந்தது. பிறகு அந்த மலர்களெல்லாம் உதிர்ந்தன. காய் என்ற ஒன்று வரவில்லை. பாதிரி மரத்தின் மலர்ச்சியும் கவிஞர் கருத்தில் பதிந்தது.

மலராமல் காய்த்த பலாவும், மலர்ந்து காய்த்த மாவும், மலர்ந்தும் காயாமல் நின்றுவிட்ட பாதிரியும் கவிஞருடன் பேசின. "உலகத்திலே எங்கள் ஜாதி மக்களும் இருக்கிறார்கள்" என்றுதான் பேசியிருக்க வேண்டும். அந்தப் பேசாத பேச்சைக் கேளாமல் கேட்ட கவிஞர் உலகத்தாரிடம் பேசுகிற பேச்சினால் அவை வெளியிட்ட உண்மைகளைச் சொல்ல எண்ணினார். கவிஞராதலின் கவியாக வந்தது. "மூன்றாம் பேருக்குத் தெரியாமல் செய்ய வேண்டிய காரியத்தை மௌனமாகச் செய்து விளம்பரமே யின்றி வாழும் உத்தமர்கள் எப்படி இருப்பார்கள்?" என்று நாம் கேளாமலே கவிஞர், "பலா மரத்தைப்போல இருப்பார்கள்" என்று சொல்கிறார். மாமரத்தின் ரகசியப் பேச்சைக் கேட்டது நினைவுக்கு வருகிறது. "சில பேருக்குச் செய்யப் போகிற காரியத்தைச் சொல்லிக் கொள்வதில்

ஒரு திருப்தி. அவர்கள் சொன்னபடியே செய்கிறார்கள். இவர்களை உத்தமர்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் அதமர்கள் அல்ல. பலாமரச் சாதியைவிடச் சிறியவர்கள். மாமரச் சாதி" என்று சொல்லுகிறார். அடுத்தபடி பாதிரி மலர் நகையால் மயக்கிச் சிரித்துப் பேசிய பேச்சையும் அவர் உணர்த்துகிறார். "வீண் ஆடம்பரமும் விளம்பரமும் செய்து, இது செய்வேன், அது செய்வேனென்று வாய்ப் பந்தல் போட்டுக் கடைசியில் ஒன்றும் செய்யாத கீழ் மக்கள் பாதிரி மரத்துக்கு அண்ணன் தம்பிகள்" என்று பாடுகிறார்.

**சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்**
**சொல்லியும் செய்யார் கயவரே – நல்ல**
**குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடின்**
**பலாமாவைப் பாதிரியைப் பார்.**

வளைந்த மாலையை அணிந்த வேல் போன்ற கூர்மையான கண்ணைப் படைத்த பெண்ணே, இந்த மூன்று மரங்களையும் பார்' என்று கவிஞர் ஒரு பெண்ணை வியாஜமாக வைத்துக்கொண்டு உலகத்துக்கே உபதேசம் செய்கிறார். கூரிய கண்ணைப் படைத்தவளாகையால் நன்றாகப் பார்க்க முடியும் என்ற கருத்தோடு அவளை விளிக்கிறார். புறக்கண்ணோடு அகக்கண்ணையும் கலந்து பார்த்தவர் கவிஞர். ஆகவே அவரிடம் மரங்கள் பேசுகின்றன.

* * *

காலை நேரம். கவிஞர் ஒருவர் உலாவப் புறப்பட்டார். ஒரு பொய்கையின் முன்னே நின்றார். செங்கதிரவன் உதயமான காட்சியை வானத்திலே கண்டார். பொய்கையில் செந்தாமரை மலர்கள் மலர்ந்து அழகுடன் விளங்கின.

தேன் மணக்கும் குமுத மலர்களோ குவிந்து கொண்டன. அந்த இருவகை மலர்களையும் கூர்ந்து பார்த்தார். பேசாத பேச்சினாலே அவரிடம் அவ்விரண்டும் ஏதோ ஒரு பேருண்மையைப் புலப்படுத்தின. கவிஞர் உணர்ந்து நமக்குச் சொல்கிறார். 'பொங்குகின்ற ஒளியையுடைய சூரியன் உதயமாகிப் பெருமையடைந்த காலத்தில் செங்கமலங்கள் மெய்ம்மலர்ந்தன; தேங் குமுதங்கள் வாடின இந்த இரண்டும் தம்முடைய மலர்ச்சியினாலும் அயர்ச்சியினாலும் ஓர் உண்மையை அறிவுறுத்தின. பிறருடைய செல்வ மிகுதியைக் கண்டால் நல்ல உள்ளம் படைத்த பெரியவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்; சின்னப் புத்தி உடையவர்கள் பொறாமையை அடைந்து வாடுவார்கள். இந்த உண்மையை அவை தெரிவித்தன' என்பது பாட்டின் பொருள்.

> பிறர்செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வும்
> சிறியோர் பொருத திறமும் - அறிவுறீஇச்
> செங்கமலம் மெய்ம்மலர்ந்த தேங்குமுதம் மெய்யயர்ந்த
> பொங்கொளியோன் வீறெய்தும் போது.

* * *

நிலாக் காலமென்றால் மனிதர்களுக்கு எத்தனை இன்பம்! அமுதத்தையே பிழிந்து உலகத்தில் பொழிந்து ஆனந்தத்தைத் தருகிறது நிலா என்று பாராட்டுகின்றனர் கவிஞர். சந்திரனைப் பல பல வகையில் புகழ்கிறார்கள். அதன் சிறப்பையெல்லாம் ஆராய்ந்து சொல்கிறார்கள். அதன் உயர்வை யாவரும் தெரிந்து கொண்டது போலவே அதன்பால் உள்ள களங்கத்தையும் யாவரும் அறிந்திருக்கிறார்கள். மதியிலே மறு உண்டு என்பதைக் கவனிக்காமல் விடுபவரைக் காணேம். அமுத இன்பத்தை ஊட்டும்

மதியினிடம் இருக்கும் அந்த மறு கவிஞருக்கு ஒன்றைத் தெரிவிக்கிறதாம். 'எவ்வளவு பெரியவர்களாக இருந்தால் தான் என்ன ? பல பல உயர்குணங்களுக்கு உறைவிடமாக இருந்தாலும் சரி; அவர்களிடம் சிறிதளவு குற்றம் உண்டானல் போதும் ; உலகம் முழுவதும் தெரிந்து கொள்ளும்' என்று அது பேசாமல் பேசுகிறதாம்.

**பெரியோ ருழையும் பிழைசிறிது உண்டாயின்**
**இருநிலத்துள் யாரும் அறிதல்—தெரிவிக்கும்**
**தேக்கும் கடலுலகில் யாவர்க்கும் தெள்ளமுதம்**
**வாக்கும் மதிமேல் மறு.**

* * *

**த**த்துவஞானிகள் இப்படித்தான் உலகைப் பார்க்கிறார்கள். மிகப் பழங்காலத்துத் தத்துவ ஞானிகள் உலகத்தைக் கண்டு கண்டு பல அரிய உண்மைகளை உணர்ந்தார்கள். அப்படி உணர்ந்தவை தர்க்கத்திலும் வேதாந்தத்திலும் இன்று நியாயம் என்ற பெயர் பெற்று நிலவுவதைப் பார்க்கிறோம்.

ஒரு பனமரத்தில் காக்கை ஒன்று உட்கார்ந்தது, முன்பே பழுத்து முதிர்ந்த பனம்பழம், அது உட்கார்ந்த பிறகு விழுந்தது. யாரோ பேசிக் கொண்டார்கள். "அடே! இந்தக் காக்கைக்கு எத்தனை பலம் அப்பா! பனம்பழத்தைப் பறித்துத் தள்ளுகிறதே!" என்று சொல்லி ஆச்சரியப் பட்டார்கள். அருகிலே இருந்த அறிஞர் இந்த நிகழ்ச்சியைக் கண்டார். 'ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமில்லாத காரியங்கள் சந்தர்ப்ப விசேஷத்தால் தொடர்புடையன போலத் தோற்றும்' என்ற உண்மை அவருடைய உள்ளத்தில் தோற்றியது. காக்கையும் பனம்பழமும் தோற்றுவித்த

அந்த உண்மைக்கே அந்த இரண்டு பொருளையும் உதாரணமாக்கிப் பிறகு அதையே நியாயமாக்கியது தத்துவ உலகம். 'காகதாளீக நியாயம்' என்று அது வழங்கும். தமிழில், 'காக்கையேறப் பனம்பழம் விழுந்தது போல்' என்ற பழமொழி அந்த நியாயத்தின் விளக்கந்தான். இப்படியே ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கும் ஸ்தாலீபுலாக நியாயம், புழுவை ஊதி ஊதி வண்டாக்கும் பிரமரகீட நியாயம் முதலாகப் பல பல நியாயங்கள் எழுந்தன.

* * *

உலகத்துப் பொருள்கள் பேசாமற் பேசும் உண்மைகளை அறிந்தவர்களுள் தலைசிறந்தவர் தத்தாத்திரேயர். பாகவதத்தில் அவருடைய கதை வருகிறது. அவதூத வேஷமுடைய அம்மாமுனிவர் சுகதுக்கத்துக்கு அதீதராய் எப்போதும் பேரானந்த நிலையிலே வீற்றிருந்தலைக் கண்டான் யது என்னும் மன்னன். 'அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் அடையாமல் இவர் சதா ஆனந்தராக இருக்கிறாரே. இந்த இன்ப நிலை எப்படி இவருக்கு வந்தது?' என்று யோசித்தான். அவரையே கேட்டான்:

**நீதிசெய் அறம்பொன் காமம்**
**நினைந்திலை சிறிதும்; இன்பம்**
**ஏதினில் அடைகின்றாய்?**

முனிவர் கூறலானார்: "உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் எனக்கு உபதேசம் செய்கின்றன. அவற்றை உணர்ந்து உண்மைநிலை அறிந்து, நன்மை தீமை, புண்ணிய பாவம், துக்க சுகம், விருப்பு வெறுப்பின்றி ஆனந்த நிலையில் இருக்கிறேன்" என்றார்.

'இவ்வுலகத்துப் பொருள்களை நாமும் காண்கிறோம், உபயோகிக்கிறோம். நம்மிடம் அவை பேசவில்லையே! இவருக்கு மாத்திரம் ரகசியமாக அவை என்ன சொல்லியிருக்கும்?' என்று யோசித்தான் மன்னன். "உலகத்துப் பொருள்களில் எவை எவை தங்களுக்கு எந்த எந்த உண்மையைப் புலப்படுத்தின? திருவாய் மலர்ந்தருள வேண்டும்" என்று பணிவாக முனிவரைக் கேட்டான்.

"அப்பா, எனக்கு உபதேசம் செய்தவர் ஒருவர் இருவர் அல்ல. முக்கியமாக இருபத்து நான்கு பேர்கள். அவர்களுடைய உபதேசத்தைச் சொல்லுகிறேன் கேள்" என்று சொல்லத் தொடங்கினார். பூமி, நீர், தீ, காற்று, ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்கள் அவருக்கு உபதேசம் செய்தன. சூரிய சந்திரர்கள் உண்மையை உணர்த்தினர். கடல், மலைப்பாம்பு, மான், காட்டு யானை, விட்டில், மீன், வண்டு, அம்பைச் செய்பவன், குமரி, தேனீ, புறா, வேசி, அன்றில், நாகம், சிலந்தி, சிறு பிள்ளை, வண்டெடுத்த புழு என்ற பொருள்களும் அவருக்குக் குருவாயின.

சிறந்தன இவை நான் காறும்
சிந்தையிற் குருவென்று ஆக்கி
மறந்தரும் இஃது தீதாம்
மற்றிது நன்றாம் என்றிங்கு
அறிந்திலன் இன்பம் உற்றேன் *

என்று முனிவர் கூறுகிறார்.

'பூமியிலிருந்து பொறுமையைக் கற்றுக்கொண்டேன்; அபகாரம் செய்தவர்களுக்கும் உபகாரம் செய்யும் திறத்தைப் பூமி எனக்கு உபதேசித்தது. தன்னை யார் வெட்டி

*பாகவதம், ஆசிரியரை உரைத்த அத்தியாயம்.

ஞலும் தோண்டிஞலும் அவர்களைத் தாங்குகிறது பூமி. அதோடு அவர்களுக்குத் தண்டனை தாராமல் மலையி லிருந்து அருவி நீரையும் காட்டிலிருந்து கனியையும் பிற விளைவுகளையும் வழங்கியருள்கின்றது' என்று பூமி செய்த உபதேசத்தைச் சொல்கிருர்.

மலைப்பாம்புகூட அவருக்குக் குருவுபதேசம் செய் கிறது. 'சந்நியாசி. உணவைப் பெரிதாக எண்ணி அது பெற முயற்சி செய்து அலையாமல், வந்த உணவைப் பெற்று அருந்தவேண்டும்' என்ற துறவற தர்மத்தை அது உபதேசித்ததாம்.

'மலைப்பாம்பு தன்பால் எவை அடைந்தனவோ அவற்றை முயற்சி செய்து வருந்தாமல் பெற்றுக் குற்ற மற்று உண்ணும் என்பதை உணர்ந்தேன். கற்ற ஞானி யருக்கு இது வழக்கம் என்று எண்ணி, யான் பெற்றது எதுவோ அதனையே முயற்சி இல்லாமலே அருந்தினேன்' என்று தத்தாத்திரேயர் சொல்கிருர்.

**உற்ற உற்றவை முயற்சியின் உயங்கிடாது உண்ணும்**
**குற்றம் அற்றுநீள் மலையரா என்பதைக் குறித்திங்கு**
**அற்ற மற்றநல் லறிஞருக்கு இதுவழக்கு என்னப்**
**பெற்ற பெற்றன முயற்சியற்று அருந்தினன் பெரியோய்.**

தனக்கென வீட்டை அமைத்துக்கொண்டு மனைவி மக்களோடு வாழ்ந்து பல நாள் உணவுக்கு வேண்டுமென்று சேமித்தல் இல்வாழ்வின் செயல். எந்த வகையிலும் பற்றில்லாத துறவியர் உணவு பற்றிய கவலையே இன்றி வாழவேண்டும். பிச்சை எடுத்து உண்ணவேண்டும். எப்படிப் பிச்சை எடுக்கவேண்டும் என்பதை வண்டுகள் தத்தாத்திரேயருக்கு உபதேசம் செய்தன.

ஒரு வண்டு காலையில் மலர்ந்திருந்த ஒரு மலரிலே சென்று தேன் உண்டது. உடனே அங்கிருந்து பறந்து சென்று மற்றொரு மலரில் சிறிது தேனை உண்டது. இப்படிச் சிறிது சிறிதாகப் பல மலர்களிலே சென்று தேன் நுகர்ந்து ரீங்காரம் செய்துகொண்டு மிக்க மகிழ்ச்சியோடு பறப்பதை முனிவர் கண்டார். 'ஆகா எத்தனை அழகியது இதன் செயல்! உணவு பற்றிக்கூட ஓர் இடத்திலே பற்றின்றி வாழும் இந்த வாழ்வல்லவா துறவு வாழ்க்கை?' என்று எண்ணினார். 'நாமும் இப்படியே நகரின் ஒவ்வொரு மனைக்கும் சென்று கரதலமே பாத்திரமாகப் பிட்சை யேற்று வாழ்வது இன்பநெறி' என்று கண்டு அவ்வாறே செய்யப் புகுந்தார். தேனுண்ணும் வண்டுபோல வீடு தோறும் பிட்சையேற்றுண்ணும் இதனை, 'மாதுகர பிட்சை' என்பர். மதுகரம் என்பது வண்டுக்குப் பெயர்.

**வண்டினம் சிறிது சிறிதெனஅலரும்**
**மலர்தொறும் வரும்முருகு உவப்பால்**
**உண்டன திரிதல் கண்டனன், யானும்**
**உரைக்கின் இத் தொழில்அழ கிதென**
**எண்தரும் நகரின் மனைதொறும் குறுகி**
**எனதொரு கரமிசை ஐயம்**
**கொண்டனன் சிறிதுசிறிதென உவந்து**
**கொள்கலத்து ஏற்றிடாது அன்றே.**

பிட்சை இவ்வாறு ஏற்கவேண்டும் என்பதை ஒரு வண்டு உபதேசம் செய்ய, மற்றொரு வண்டு எவ்வாறு ஏற்றல் கூடாதென்பதையும் உபதேசித்ததாம்.

ஒருநாள் ஒரு தாமரை மலரில் உள்ள தேனுக்கு ஆசைப்பட்ட வண்டு அதில் புகுந்து தேனை உண்ணத்

தொடங்கியது. அந்தத் தாமரையிலே பற்றுக்கொண்டு நாள் முழுவதும் தங்கித் தேனை உண்டு மயங்கியது. மாலைக் காலம் வரவே தாமரை மலர் குவிந்தது. அதன் இதழ்கள் நெருக்க நெருக்க உள்ளே இருந்த வண்டு மூச்சு விடவும் முடியாமல் இறந்துவிட்டது. மறுநாள் தாமரை மலர் விரிந்தபோது வண்டின் ஒலியில்லை; அதன் பிணந்தான் கிடந்தது. முனிவர் பார்த்தார். 'ஒரு வீட்டிலே தங்கிச் சுவையுள்ள உணவு கிடைக்கிறதென்று இருந்து அருந்தினால் உலகத்துப் பாசம் நம்மை இப்படித்தான் அமிழ்த்திக் கொன்றுவிடும்' என்று தெரிந்துகொண்டார்.

**ஒருமரை மலரே உவந்துமென் முருகுண்டு**
**உறைதரும் ஒருசுரும்பு இரவில்**
**விரியிதழ் குவிஅும் மலர்அகப் பட்டு**
**விளிந்தது கண்டுஒரு நாளும்**
**கருதிய நகரின் ஒருமனை உறைந்து**
**கடிசுவை உணவுவந்து அருந்தேன்.**

இவ்வாறு இருபத்து நான்கு ஆசிரியரும் பேசாத பேச்சினால் உணர்த்திய உபதேசங்களை வகுத்துச் சொல்கிறார் முனிவர்.

*　　*　　*

திருவாசகத்தில் ஒரு பாட்டில்,

**கேட்டுஆரும் அறியாதான் கேடொன் றில்லான்**
**கிளையிலான் கேளாதே யாவும் கேட்டான்**

என்று சிவபெருமானைப்பற்றி மணிவாசகர் சொல்கிறார். கேளாதே யாவுங் கேட்கும் பெருமான் இறைவன். அவனருளால் மெய்யறிவு படைத்தோரும் உலகத்துப் பொருள்

களை பேசாமற் பேசுவதைக் கேளாமற் கேட்கிறார்கள். சனகாதி முனிவர்களுக்கு ஞான உபதேசத்தைச் 'சொல்லாமற் சொன்ன துரை'யாகிய அப்பெருமானே, கேளாமே யாவும் கேட்கின்றான். அவனருளில் ஊறிய மெய்ஞ்ஞானச் செல்வர்களும் கேளாமற் கேட்டு அநுபூதி பெற்றுப் பேசாமற் பேசிக் களிக்கிறார்கள். அந்தப் பேசாத பேச்சானது பேசுகின்ற பேச்சிலும் உயர்ந்தது; நுண்மையானது; அறிவுடையோருக்குப் புலப்படுவது. அதனைத் தெரிந்து கொண்டவர்கள் ஞானியரும் கவிஞரும். ஞானியர் பேசாத பேச்சை உணர்ந்து இன்புறுகின்றனர். கவிஞர் பேசாத பேச்சை உணர்ந்து இன்புற்று, பேசுகின்ற பேச்சினாலே நமக்குத் தெளிவுறுத்தி நம்மையும் இன்புறுத்துகின்றனர். நாமும் பேசாத பேச்சை அறியும் துறையிலே பயிற்சி பெற்றால் உலக முழுவதும் 'திறந்த புத்தக'மாக, உபதேச குருவாக இருப்பதைக் காண்போம்.